ஜூன் 04 - 10, 2006 | June 04 - 10, 2006 | 28 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



போவர்
வெறுங்கையுடன்
போவார்

# ஆயுதக் களைவு அரங்கேற முடியாது

இந்த நாட்டில் சமாதானப் பயணம் தடைப்பட்டு போரைநோக்கிய பயணம் வெகு வேகமாகத் தொடர்கிறது. அப்பாவிப் பொதுமக்களும் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பங்காளிகளும் திட்டமிட்டுக் கொலை செய்யப்படுகின்றனர்.

**வலுவடையும் வன்முறை**

இலங்கையில் தற்போது நிலவும் யுத்தநிலை காரணமாக 2000க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் தமிழ் நாட்டுக் கரைகளை சென்றடைந்துள்ளன.

ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அவர்கள் தெரிவித்துவிட்டனர்.

**ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை**

இந்தக் களநிலையில் தான் எதிர்வரும் 29ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடைவிதிப்பதற்கான இறுதிமுடிவை எடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் சந்திக்க இருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை குறித்த செய்தி சமாதானத்தை விரும்பாத

விமானநிலையத்தைத் தாக்கி விமானங்களை அழித்ததையோ அல்லது ஆனையிறவு முகாமைத்தாக்கி ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவவீரர்களைப் பலிகொண்டு, அதை முற்றாக நிர்மூலமாக்கியதையோ தடுத்து நிறுத்தவில்லை. அதுபோலவே தடைசெய்யப்பட்ட நாடுகள் அனைத்திலும் வெவ்வெறுவடிவங்களில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன - இவ்வாறு அரசியல் நோக்கர்கள் விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய

தனி நாட்டுக்கான போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் வடக்கு-கிழக்கு மக்கள் ஆரம்பித்தனர்.

ஆனால் 30ஆண்டுகாலப் போருக்குப் பின்னர் இணைத்தலைமை நாடுகளின் குரலுக்கு மதிப்பளிக்கும் வகையில் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் இணக்கப்பாட்டுக்கு வந்தனர். தமிழீழமே தமது பிரச்சினைக்குத் தீர்வாகும் என விடுதலைப் புலிகள் நினைத்திருந்தால் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு குறித்துப் பேசியிருக்கவே மாட்டார்கள்.

இலங்கை

# ஆயுதக் களைவை அரங்கேற்ற முடியாது

இந்த அகதிகள் படையெடுப்பு இந்தியாவைப் பாதிக்கத் தொடங்கி உள்ளது.

இலங்கையில் சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்திருப்பதை அடுத்து ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு வன்முறைகளைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசை வலியுறுத்தி உள்ளது.

களநிலை இவ்வாறு இருக்க தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்டுள்ள

சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளை ஒன்றியம் தடைசெய்ய வேண்டும் என்ற பிரசாரத்தை முழுமூச்சுடன் முன்னெடுத்த இலங்கை அரசுக்கும் இனிப்பாக அமையலாம். ஆனால் இதன் பின்விளைவுகள் தான்

ஒன்றியத்தின் தடைகுறித்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையினால் ஏற்படப்போகும் பின் விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையப் போகின்றன எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**உள்ளக சுயநிர்ணய உரிமையே தீர்வு**

இதையேதான் ஐக்கிய

அரசு இணைத்தலைமை நாடுகளின் ஒஸ்லோ அறிக்கையில் கூறப்பட்டுள்ள உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வை அங்கீகரிக்காமல் அல்லது தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றுத் திட்டம் எதையும் முன்வைக்காமல் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்வோம் என்று கூறுவது தமிழீழ விடுதலைப் புலிகளையும் சர்வதேசத்தையும் முட்டாளாக்கும் முயற்சியே அன்றி வேறொன்றும் இல்லை.

இங்கே ஒரு விடயத்தை தென்னிலங்கை தெரிந்து கொள்ளவேண்டும். உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு எதனையும் முன்வைக்காமல் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை தொடருமானால் தமிழீழத்தை நோக்கி நகர்வதைத் தவிர்ந்த மாற்று வழி எதுவும் தமிழ்த் தலைமையிடம் இருக்கப் போவதில்லை என்ற உண்மையே அது.

**சர்வதேச அழுத்தம்**

இன்று விடுதலைப் புலிகள் ஒரு தனியரசுக்கான கட்டுமானங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய பிரதேசம் ஒன்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்தப் பிரதேசத்தை நிர்வகித்துவரும் அதே நேரம் யுத்தநிறுத்தம் செய்து அமைதிமுயற்சிகளுக்குத் தம்மாலான அனைத்து பங்களிப்புகளையும் வழங்கி வருகிறார்கள்.

ஆனால் இணைத் தலைமை நாடுகளோ அல்லது ஐரோப்பிய ஒன்றியமோ இவை எதையும் கணக்கில் எடுக்காமல் தமிழீழ விடுதலைப் புலிகளின் கையை முறுக்கி அவர்களைப் பணிய வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளன. இதற்கான காரணம் என்ன?

ஒரு விடுதலைப் போராட்டம் உச்சக் கட்டத்தை நோக்கிச் செல்லும்போது சர்வதேச சமூகம் மற்றும் பிராந்திய வல்லரசுகள் அந்த விடுதலைப் போராட்டத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்திருப்பதும், வருவதும் வரலாறு.



> **இலங்கை அரசு இணைத் தலைமை நாடுகளின் ஒஸ்லோ அறிக்கையில் கூறப்பட்டுள்ள உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வை அங்கீகரிக்காமல் அல்லது தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய மாற்றுத் திட்டம் எதையும் முன்வைக்காமல் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்வோம் என்று கூறுவது தமிழீழ விடுதலைப் புலிகளையும் சர்வதேசத்தையும் முட்டாள்களாக்கும் முயற்சியே அன்றி வேறொன்றும் இல்லை.**

ஆட்சி மாற்றத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்து செயற்படுகின்றனரென்றும் தமிழ்நாட்டுக்கு சட்டவிரோதமாக தமிழ்மக்களை அனுப்புவதாகவும் பாதுகாப்பு பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டி உள்ளார்.

**நேரடிப்பேச்சு**

இந்தப் பின்னணியில் மூன்றாந்தரப்பு அனுசரணையைக் கைவிட்டு பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்பும் நேரடியாகப் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை அரச தரப்பால் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த முயற்சி அமைதி முயற்சிகளை சீர்குலைக்கும் மற்றொரு நடவடிக்கையே என தமிழீழ விடுதலைப் புலிகள் கூறி இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகள், யுத்தநிறுத்த உடன்பாடு அனைத்தும் அடிபட்டுப்போன நிலையில் சர்வதேச அனுசரணை ஏனோ தானோ என்ற இழுபறிக்குள்ளாகியுள்ள பின்னணியில் இந்தக் கோரிக்கை அரச தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளதை

அகோரமான வையாக அமையப்போகின்றன. சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்பத்தகாத சத்தியாக இருக்கலாம். அமெரிக்கா, இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்திருக்கலாம். ஆனாலும் கடந்த காலத்தில் இந்தத் தடைகள் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை பாரிய எதிர்விளைவுகள் எதையும் ஏற்படுத்தவில்லை. இந்த நாடுகள் எதிலுமே தங்கியிராமல் அவர்கள் தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்திவருகிறார்கள் என்பது உலகறிந்த உண்மையாகும்.

1997ஆம் ஆண்டு அமெரிக்கா புலிகளைத் தடைசெய்தது. ஆனால் அந்தத்தடை விடுதலைப் புலிகள் பண்டாரநாயக்கா சர்வதேச

தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டி இருப்பதுடன் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். அவர் மற்றொரு விடயத்தையும் தொட்டுக் காட்டியிருக்கிறார்.

தமிழ்மக்கள் மீது அடக்கு முறை தொடருமானால் அவர்கள் தனி நாடு ஒன்றை நோக்கியே தள்ளப்படுவார்கள் என்பதே அவர் தொட்டுக்காட்டிய அந்தச் செய்தியாக அமைகிறது.

அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு அநாதைகளாக தமது தாயக மண்ணிலிருந்து விரட்டப்படும் நிலை தோன்றிய போதுதான் தாம் வாழ - தமது மொழிநிலைக்க - தமிழீழம் என்ற

**நேதாஜி**

பொருளாதாரத்தில் படுவீழ்ச்சி, அகதிகளை உருவாக்குதல் போன்ற காரணிகளால் தோல்வியடைந்த நாடுகளை அமெரிக்கா இனங்கண்டு வைத்துள்ளது.

அமெரிக்காவின் இந்தப் பட்டியலில் சூடான், உகண்டா, லிபியா போன்ற நாடுகளுடன் இலங்கையும் இடம்

(16ஆம் பக்கம் பார்க்கவும்)

# ஐரோப்பிய ஒன்றியத் தடை விடுதலைப் போரைப் பாதிக்குமா?


தடை! தடை!! தடை!!!

எங்கு பார்த்தாலும் தடை பற்றித்தான் பேச்சு.

விடுதலைப்போரில் எத்தனையோ தடைகள் எல்லாம் வந்துவிட்டன. அந்தத் தடைகளைத் தாண்டித்தான் இன்று விடுதலைப்போர் வீறு கொண்டு எழுந்து நிற்கின்றது.

தடைகளைக் கண்டு தமிழர் தரப்பு அஞ்சப் போவதில்லை. தடைகளைக் கண்டு துவண்டு போகாமல் விடுதலைப் போர் மேலும் சீறிக் கொண்டு உச்சக் கட்டத்திற்குச் செல்லப் போகின்றது.

இந்தியா தடை விதித்தது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் தடை விதித்தன. கனடா தடை விதித்தது. இப்போது ஐரோப்பிய



ஒன்றியத்தின் தடையும் வரப்போகின்றது.

இந்தத் தடைகள் எல்லாம் தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஒன்றும் செய்து விடப் போவதில்லை. தற்போது தொடரும் சமாதான முயற்சிகளை, சமாதானப் பேச்சுகளை இந்தத் தடைகள் பாதிக்கக் கூடும்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி வந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவரிடம் விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதைக் கோடி காட்டியுள்ளார்.

"பேச்சுகளை முடக்கி அமைதி முயற்சிகளைச் சீர்குலைத்து யுத்தத்தையும் இன அழிப்பு நடவடிக்கையையும் தமிழர் தரப்பு மீது ஏவி விடுவதற்கான ஓர் அங்கமான செயற்பாடாகத்தான் தடை விவகாரத்தைக் கருதமுடிகின்றது.

"ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியத்தைக் கொண்டு தடை செய்வது என்பது சர்வதேச அளவில் தமிழர் தரப்பு நியாயங்களை இல்லாமல் செய்து, உண்மைகளை மறைத்து தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை இலட்சியங்களைக் கொச்சைப்படுத்தி, பலவீனப்படுத்தித் தமிழ் மக்கள் மீது ஓர் ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் திணித்து விடுவதற்கான, சர்வதேச சமூகத்தின் மத்தியில் பிழையான பரப்புரைகளைச் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர் தரப்பையும் ஓரம் கட்டும் நடவடிக்கைதான் இது.

"எந்த விதத்திலும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சியாகத் தடை அமையாது. பேச்சுவார்த்தை முயற்சிகளைச் சீர்குலைக்கின்ற செயற்பாடாகவே இந்தத் தடைகளைத் தமிழர் தரப்புப் பார்க்கின்றது."

தமிழ்ச்செல்வன் கூறுவது போல ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை, பேச்சு முயற்சிகளை, சமாதான முயற்சிகளை முடக்கத்தான்போகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விடுதலைப் புலிகளை பேச்சுக்கு இழுத்து வரும் என்று ஜனாதிபதியும் சிரேஷ்ட அமைச்சர்களும் கருத்துகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த கால வரலாறுகளையும் தமிழர் தரப்பின் நிலைப்பாடுகளையும் உணர்ந்து கொள்ளாத நிலையில்தான் அவர்கள் இக்கருத்துக்களை வெளியிடுகின்றார்கள் போல் இருக்கின்றது.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எத்தனையோ நாடுகள் தடைகளை விதித்த போதும் அதைக் கண்டு தமிழர் தரப்பு தமது போராட்டப் பாதையில் இருந்து விலகவில்லை.

போராட்டங்களை தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து, தாயகப் பகுதியில் 70 சதவீதமான பிரதேசத்தை தம்வசப்படுத்தியுள்ளது தமிழர் தரப்பு. அந்தப் பிரதேசத்தில் தனியான நிர்வாகக் கட்டமைப்புகளை நிறுவி, நடைமுறை அரசு ஒன்றை நடத்தி வருகின்றது தமிழர் தரப்பு.


தரைப்படை, கடற்படை, விமானப்படை என சகல கட்டுமானங்களையும் நிறுவிப் பலம் மிக்க படை அணியாகவும் நிற்கின்றது தமிழர் தரப்பு.

மொத்தத்தில் சிங்களத் தரப்புடன் ஒப்பிடுகையில் சமபடைப்பலத்துடன்தான் நிற்கின்றது தமிழர் தரப்பு. இந்தநிலை காரணமாகவே சர்வதேசத்தின் பிரசன்னத்தில் தமிழர் தரப்பும் - சிங்களவர் தரப்பும் சம அந்தஸ்துடன் - சம படைப்பலத்துடன் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சு நடத்தும் சூழல் உருவாகியது.

கடந்த ஐ.தே.க அரசுடன் சரி, தற்போதைய சுதந்திரக்கட்சி அரசுடன் சரி சம அந்தஸ்துடன் நேரடிப் பேச்சில் தமிழர் தரப்புப் பங்குகொள்ளும் சூழல் உருவாகியிருந்தது.

கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி கைச்சாத்தான தமிழர் தரப்பிற்கும் சிங்களவர் தரப்பிற்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை நாட்டில் யுத்தமற்ற சூழல் ஒன்றை உருவாக்கியது. அமைதி நிலை ஏற்பட்டது.

மாறாக, இலங்கையில் தேசியப்பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் காணும் பொறுப்பை சர்வதேசத்திற்குள் சிக்க வைத்து சர்வதேசத்தின் கால் இலங்கையில் ஊன்ற வழி வகுத்தது. சர்வதேசத்தின், ஒவ்வொரு நாடும் தமது நலன்களுக்கு இலங்கை



விவகாரத்தைக் கையாளும் சூழல் உருவாகி நிற்கின்றது.

அண்டை நாடான இந்தியா ஒரு தடவை கால்பதித்து தோல்வி கண்டு திரும்பிய வரலாற்றுப் பாடத்தைக் கருத்தில் கொண்டு தனது காய் நகர்த்தல்களைக் கனகச்சிதமாக முன்னெடுத்து வருகின்றது.

அமைதி முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் பிரதிநிதிகள் இலங்கை வந்து அரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தித் திரும்பும் போது, புதுடில்லி செல்வது வழக்கமாகி விட்டது.

பேச்சின் முன்னேற்றம், பேச்சின் நகர்வு ஆகியன தொடர்பாக நோர்வே அதிகாரிகள் இந்தியத்தரப்பு அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்தி வருகின்றனர்.

இந்த அணுகுமுறையின் பிரகாரம் இந்தியாவும் தனது தார்மீக ஆதரவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. தமிழகத்தில் இருந்து வரும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இந்தியா செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழர் தரப்புக்கு ஆதரவான போக்கையே இந்தியாவிடம் காணமுடிகின்றது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்வது, பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு உதவுவது, இணைத்தலைமை நாடுகளில் இணைந்து கொள்வது போன்ற விடயங்களில் தலையிடாமல் இந்தியா தவிர்த்துள்ளது. இது தமிழர் தரப்பின் நியாயப்பாட்டுக்கு இந்தியா வழங்கியுள்ள தார்மீக ஆதரவு எனக் கருதலாம்.

ஆனால், இதற்கு முரணாக அமெரிக்கா செயற்படுகின்றது என்று கருத்து நிலவுகின்றது. ஜெனிவாவில் கடந்த பெப்ரவரி 22ஆம் 23 ஆம் திகதிகளில் நடந்த பேச்சுகளில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டை அமெரிக்கா முன்னெடுக்கவில்லை.

அதற்குமாறாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகளைத் தடைசெய்யும் விவகாரத்தில் அமெரிக்கா தனது செல்வாக்கைப் பிரயோகித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தால்தான் அவர்களைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவரலாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை ஏற்று, ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்திப் பணிய வைத்திருக்கின்றது அமெரிக்கா.

மஹிந்தர் போட்ட தப்புக் கணக்கை ஆராய்ந்து செயற்படாமல் அவருக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளது அமெரிக்கா எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலைக்குக் காரணம் என்ன என்பதை சீர்தூக்கிப் பார்க்காமல் ஒரு தலைப்பட்சமாக அமெரிக்கா செயற்பட்டுள்ளது என்று தமிழர் தரப்பும் குற்றஞ்சாட்டுகின்றது.

ஜெனிவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் -

யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்த -

வடக்கு - கிழக்கில் இயங்கும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவர்களை வெளியேற்ற -

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிப் போராளிகள் அரசியல் பணியாற்ற - இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா இலங்கை அரசுத் தலைமைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஜெனிவா இணக்கப்பாட்டின் அமுலாக்கலிலேயே சமாதான முயற்சிகளின் அடுத்த கட்டம் தங்கியுள்ளது.

முதலில் ஜெனிவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்கா முன்வரவேண்டும். அதன்பின்பே ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகளைத் தடை செய்யும் செயற்பாட்டை முன்னெடுக்கலாம்.

விடுதலைப்புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்வதன் மூலம் அடுத்த கட்டப் பேச்சுகள் உடன் ஆரம்பிக்கும் எனக் கருத முடியாது. அதற்கு வாய்ப்பும் இல்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமெரிக்க அதிகாரிகளும் போடும் தப்புக் கணக்கின் பிரகாரம், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தவுடன் பேச்சுகள் ஆரம்பமாகும் என்று கருதினால், புலிகள் தொடர்பாக பிழையான அணுகுமுறையைத்தான்

**யாழவன்**

அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று உணர முடியும்.

தமிழ் மக்கள் மீது யுத்தம் ஒன்றைத் திணித்து இனப்படுகொலையைத் தொடர்வதற்குத்தான் அரசு இச்செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது என்றும் அரசு ஐரோப்பிய ஒன்றியம் மூலம் மேற்கொள்ளும் தடை சமாதான முயற்சிகளைத் தொடர உதவப் போவதில்லை என்றும் விடுதலைப் புலிகள் நோர்வேத் தரப்புக்குக் கூறியுள்ளனர்.

இருதரப்புகளின் முரண்பாடான நிலைப்பாடுகள் அடுத்த கட்டத்துக்குள் சமாதான முயற்சிகளைக் கொண்டு போகப் போகின்றதா? அல்லது சமாதான முயற்சிகளுக்கு சமாதி கட்டப் படப் போகின்றதா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்நிலையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்டுள்ள கருத்து கவனிக்கப்பட வேண்டிய தொன்று.


கடந்த வாரம் கொழும்பு வந்த அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் மட்டத் தலைவர்களைச் சந்தித்து தற்போதைய களநிலைமைகள் குறித்துப் பேசியுள்ளார். வன்னி சென்று விடுதலைப்புலிகளின் தலைவர்களை அவர் சந்திக்கவில்லை.

புதுடில்லி சென்ற அவர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டு செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார்.

"இலங்கையில் தற்போதைய சூழ்நிலை மீண்டும் மோதல்கள் வெடித்து யுத்தம் ஏற்படும் அபாயத்தில் உள்ளது." என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

அனுசரணையாளர் என்ற வகையில் அவர் விடுக்கும் எச்சரிக்கை, நிழல் யுத்தம் நிஜ யுத்தமாக மாறிவிடும் நிலையையே தோற்றுவித்துள்ளது. இதுவே இன்றைய யதார்த்த நிலை என்பதை அரசும் அவரது கூட்டாளிகளும் உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும். இல்லையேல் நாடு யுத்தத்தை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும். *

# புயலுக்கு தயாராகும் தேசம்?



கடந்த வாரம் முழுவதும் தென்னிலங்கை சிங்கள மற்றும் சிங்கள சார்புடைய ஆங்கில ஊடகங்களெல்லாம் விடுதலைப் புலிகள் வன்னியில் பொதுமக்களுக்கு வழங்கிய பயிற்சிகள் பற்றியே பேசின. அதிலும் குறிப்பாக, சிறுவர்கள் ஆயுதங்களை பார்த்துக் கொண்டிருக்கும் படங்களுக்கு அதிகமுக்கியத்தும் கொடுத்து தமது முன்பக்கத்தில் பெரிய இடத்தை கொடுத்திருந்தன.

கடந்த மாதம் அல்லைப்பிட்டியில் இரண்டு சிறுவர்கள் தாய் தந்தையரை அணைத்தவாறு சுட்டுக் கொல்லப் பட்டிருந்தனர். அந்த புகைப்படம் எல்லா தமிழ் ஊடகங்களிலும் வெளிவந் திருந்தது. ஆனால் சிங்கள ஆங்கில ஊடகங்கள் அந்த புகைப்படத்தை குறைந்தது தமது உள்பக்கங்களிலாவது பிரசுரிக்கும் திராணியற்றவையாக அல்லது விரும்பாதவையாக இருந்தனவென்பது இலங்கை ஊடகத்துறையின் சங்கடமான நிலைதான்.

எனவே ஊடகங்களின் செயற்பாடே இனப்பிரச்சினையின் தீர்வை சிக்கலுக்குள்ளாக்கி வருகின்றது என்ற கூற்றில் உண்மையிருப்பதாகவே தெரிகிறது.

இலங்கையின் இன்றைய களநிலவரம் எப்போது எல்லைகளில் போர் முரசு கேட்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது.

ஒருபுறத்தில் இலங்கை அரசு வெளிநாடுகளில் புலிகளை தடை செய்யவேண்டுமென வலிறுத்தி வரும் அதேவேளை,

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அப்பாவித் தமிழ் மக்கள் வயது வேறுபாடின்றி சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இதேவேளை,

திருகோணமலையிலும் நிலைமை பெரும் சிக்கலடைந்து வருகிறது. அங்கிருந்து பெருமளவிலான மக்கள் தமிழகத்திற்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

அரசும் இனவாதக் கட்சிகளும் திருமலையில் இருந்து தமிழர்களை வெளியேற்றி விட வேண்டும், அங்கு முற்றுமுழுதான சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கிவிட வேண்டும் என்ற நிலைப்பட்டில் கங்கணம் கட்டி செயற்படுகின்றன.

இந்நிலையில்,

தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் போரை எதிர் கொள்வதற்கான எல்லா தயார்படுத்தல்களும் வன்னியில் செய்யப்பட்டு வருகின்றன. அங்கு பொதுமக்களுக்கான தற்காப்பு பயிற்சிகளும் எல்லைப்படை வீரர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி புலிகளின் படையணிகளும் முழுஅளவில் தயார்படுத்தப்பட்டுள் ளதாக தெரிகிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பு மட்டுமின்றி யாழ் குடா நாடும் கிழக்கும் கூட போரை எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது இறுதித் தீர்வுக்கானதாய் அமையும் குறுகிய கால யுத்தமொன்றுக்கான தேவையும் சாத்தியமும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தாயக பிரதேசங்களில் உணரப்படுகிறது.

அண்மையில் கிளிநொச்சி உதயநகரில்

**சிவசைலஜா**

கிராம மக்கள் தற்காப்பு பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்களை வெளிநாட்டு செய்தி ஊடக மொன்று வெளியிட்டிருந்தது. அதில் மக்கள் மீண்டும் பதுங்குகுழி நாட்களை வரவேற்கத் தயாராகிவிட்டதை காணமுடிந்தது.

சமைத்தல் கற்றல், எல்லாமே பதுங்குழிக்குள் என்றிருந்த காலம் மீண்டும் உருவாகினால் அதை துணிவோடு எதிர்கொண்டு போரில் வெல்வோம் என்ற உறுதியுடன் தமிழ்மக்கள் இருப்பதாக வன்னி சென்று வந்த ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்தார்.

போர் ஒன்றே எப்போதும் தென்னிலங்கை புரிந்துகொள்ளும் மொழியாக இருக்கிறது.ஏனெனில் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைக்குமளவிற்கோ தமிழர்களையும் இலங்கையின் பிரஜைகள் என்று நினைக்குமளவிற்கோ அரசின் கூட்டாளிகட்சிகள் இல்லை.

சமாதான பேச்சுக்களும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் தென்னிலங்கை அரசியலில் சந்தர்ப்பவாத செயற்பாடுகளாகவே தொடர்ந்தும் இருக்கின்றன. ஆட்சியைப்பிடிப்பதற்கும் வெளிநாடுகளிலிருந்து பணம் பெறுவதற்குமே இத்தகைய சமாதான மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன.

அண்மையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடு கிளிநொச்சிக்கு சென்ற உலங்குவானூர்தியில் வழமைக்குமாறாக மூன்று விமான ஓட்டிகள் சென்றுள்ளனர்.

போர் ஆரம்பித்ததும் கிளிநொச்சியில் தாக்குதல் நடத்துவதற்கான வேவு நடவடிக்கையே இது என்று அங்குள்ள மக்கள் கருதுகின்றனர்.

இப்போது போரில் அதிக நம்பிக்கை கொண்டுவிட்ட அரசு சிங்கள கிராமங்கள் தோறும் தனது வீரப்பிரதாபங்களை பேசத் தொடங்கி விட்டிருக்கிறது. குறைந்த பட்சம் தனது ஓட்டுப் படைகளையேனும் கட்டுக்குள் கொண்டுவந்து தனது இராணுவ முகாம்களுக்குள்ளேயே வைத்திருக்கக் கூடிய சிறிதளவு வல்லமைதானும் மகிந்தவின் அரசுக்கு இல்லாதது வேடிக்கையானது - இந்நிலையே வடக்குக் கிழக்கின் இன்றைய சூழலுக்கு முதற்காரணி என்பது மறுக்கமுடியாதது'.

## கருணாநிதியைத் தாக்க அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் முயற்சி

தமிழக முதல்வர் கருணாநிதியின் இருக்கையை நோக்கிச் சென்று அவரைத் தாக்கமுயன்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனைவரும் நடப்பு சட்டப்பேரவைக் கூட்டத்திலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் வெள்ளிக்கிழமை ஆரம்பமானதும் ஆளுனர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது.

விவாதத்தில் காங்கிரஸ் உறுப்பினர் அல்போன்ஸ் பேசிக் கொண்டிருந்தபோது அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கும் அவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அ.தி.மு.க. உறுப்பினர்களை இருக்கையில் அமருமாறு பேரவைத் தலைவர் உத்தரவிட்டபோதும் அவரின் உத்தரவுக்குக் கட்டுப்படாமல் முதல்வர் கருணாநிதியின் இருக்கை அருகே அ.தி.மு.க. உறுப்பினர்கள் செல்ல முற்பட்டனர்.

இதையடுத்து கருணாநிதிக்கு ஆர்க்காடுவீராசாமி, பரிதி இளம்வழுதி மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் பாதுகாப்பு அளித்தனர்.

பின்னர் அ.தி.மு.க. உறுப்பினர்களை இக்கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைக்கும் தீர்மானத்தை அவை முதல்வர் அன்பழகன் கொண்டுவந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து கூட்டத்தொடர் முழுவதும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் நீக்கப்படுவதாக பேரவைத் தலைவர் அறிவித்துள்ளார்.

## இலங்கை இராணுவம் தாக்குதலை நிறுத்தவேண்டும்

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளைக் கைவிடுமாறு அந்நாட்டு அரசை மத்திய அரசு வலியுறுத்தவேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது:—

''ஜெனிவாப் பேச்சுவார்த்தையின் போது ஏற்றுக்கொண்ட விஷயங்களை இலங்கை அரசு தற்போது புறக்கணித்துள்ளது. இதைத் தொடர்ந்து இலங்கையில் தமிழர் வசிக்கும் பகுதிகளில் முப்படைத்தாக்குதல்கள் தொடர்கின்றன. கூலிப்படைகளின் தாக்குதல்கள் காரணமாகவும் ஏராளமான தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் போராளிகள் மட்டுமன்றி சாதாரண குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவத்தினரின் நடவடிக்கைகளைக் கைவிடுமாறு அந்நாட்டு அரசை மத்திய அரசு வற்புறுத்தவேண்டும். இனப்பிரச்சினையை மனிதாபிமான முறையில் மத்திய அரசு அணுக வேண்டும். இராமேஸ்வரத்துக்கு வரும் அகதிகளுக்கு மனிதாபிமான உதவிகளைத் தமிழக அரசு செய்யவேண்டும்.'' — என்றார்.

## சிவாஜிக்கு சிலை

நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு சிலை அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளதை அடுத்து முதலமைச்சர் கருணாநிதிக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

''தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முன்னாள் தலைவர், தமிழ் திரையுலகின் தன்னிகரற்ற கலைஞர், கலைத்தாயின் மூத்த புதல்வர் சிவாஜிகணேசனுக்கு தமிழக அரசின் சார்பில் சென்னை மெரினா கடற்கரையோரம் சிலை அமைக்கப்போகும் செய்தி அறிந்து தென்னிந்திய நடிகர் சங்கம் பெருமகிழ்ச்சி கொள்கிறது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்குகொண்ட நடிகர் திலகத்துக்கு சிலை அமைக்க திட்டம் தீட்டி செயல்படும் தமிழக முதலமைச்சருக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறது'' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிடவேண்டும்

''தமிழீழத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்துவதை தடுக்கவும் அங்கு அமுலில் உள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயற் படும் இலங்கை அரசை எச்சரிக்கும் வகையிலும் தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்.'' இவ்வாறு தமிழக அரசை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வற்புறுத்தி உள்ளது.

சென்னையில் தொல்திருமாவளவன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் நிர்வாகக் குழுக்கூட்டத்திலேயே தமிழக அரசை வலியுறுத்தும் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

''தமிழ்மக்கள் மீது திணிக்கப்படும் போர்ச் சூழலைத் தடுத்து நிறுத்திட தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திய அரசு இனப்பிரச்சினையில் தலையிடவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான அமெரிக்க அரசின் தமிழினவிரோதப் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது'' இவ்வாறு, நிர்வாகக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது.

## ஜெயலலிதாவுக்கு பாதுகாப்புக் குறைப்பு

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலிதாவுக்கு உயர்மட்டப் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதையும் வைகோவுக்கு அடிக்கடி கொலை மிரட்டல் வருவது குறித்தும் பிரதமர் மன்மோஹன் சிங்கிடம் அ.தி.மு.க., ம.தி.மு.க. எம்.பிக்கள் நேரடியாக முறையிட்டுள்ளனர்.

ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட 'இசட் பிளஸ்' உயர்மட்ட பாதுகாப்பு தளர்த்தப்பட்டுள்ளது'. தொலைபேசி மூலம் வைகோவுக்கும் அவரது மகன் துரைவையாபுரிக்கும் கொலை மிரட்டல்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்தப் பின்னணியில் அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. வைச் சேர்ந்த எம்.பிக்கள் டெல்லியில் பிரதமர் மன்மோஹன் சிங்கைச் சந்தித்து ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டு வந்த உயர்மட்ட பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதையும் வைகோவுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுவதையும் அவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஆதாரங்களுடன் விளக்கினர். பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அ.தி.மு.க. எம்.பி மலைச்சாமி ஜெயலலிதாவுக்கும் பாதுகாப்பு குறைபாடு ஏற்படாதவாறு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று பிரதமர் மன்மோஹன் சிங் தங்களிடம் உறுதியளித்ததாகத் தெரிவித்துள்ளார்.

# தடைகளை தகர்க்கும் மக்கள் போராட்டம்

இலங்கையில் போருக்கும் சமாதானத்துக்குமான சூழல் நூலிழையில் தொங்கிக் கொண்டு இருக்கிறது. தமிழர் தாயகப் பகுதிகளில் தினமும் சராசரியாக ஐந்து கொலைகள் நடந்துவருகின்றன. இந்த ஆபத்தான, நெருக்கடி யான வேளையில்தான் ஐரோப் பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடையும் வருகிறது. புலிகள் மீதான தடை தற்போது தேக்கமடைந் துள்ள சமாதான செயற்பாடுகளை முன் தள்ளக்கூடும் என அரசும், இந்தத் தடைக்கு முன்னின்றும் உழைக்கும் சில நாடுகளும் கருதுவதாக தெரிவிக்கப் படுகிறது.



இந்த ஆபத்தான அரசியல் நகர்வுகள் தமிழர் தாயகத்துக்கு அப்பால் நடந்து வரும் அதேவேளை தாயகப்பகுதிகளில் தீவிரமடைந்துவரும் வன்முறைகள் ஒரு முழு யுத்தத்தை நோக்கிச் செல்லும் ஏது நிலையே காணப்படுகிறது. அண்மையில் கொழும்பு மற்றும் கிளிநொச்சிக்கு விஜயங்களை மேற்கொண்ட நோர் வேயின் விசேட தூதுவர்கள் ஒஸ்லோவில் தற்போதைய யுத்த நிறுத்தத்தை முறையாகப் பேணுவது குறித்து பேச்சு நடத்த அரசுக்கும் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத் தடையைப் பொறுத்தே பேச்சுகளில் கலந்து கொள்ளமுடியும் என புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் வன்முறைகள் தணியவில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.




அண்மைக்காலங்களில் அரச படையினரதும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களினதும் வன்முறைகள் பெரியளவில் நடந்துவருகின்றமையை சர்வதேசம் கருத்தில் கொள்ளாதது மிகவும் வருத்தத்துக்குரியதாகும். யாழ். அல்லைப்பிட்டிப்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் 16 பேர் உட்பட கடந்த இரண்டு மாதங்களில் படையினராலும் ஒட்டுக்குழுக்களாலும் இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவை குறித்த தரவுகளை மூன்று தடவைக்கு மேல் புலிகளும் உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவின் கொள்கை வகுப்புகளுக்கேற்ப மாறிவரும் உலக ஒழுங்கானது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் பெரியளவில் பாதித்துவருகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனினும் அமெரிக்காவின் கரங்கள் நீண்ட காலமாகவே இலங்கையின் பிரச்சினையில் முக்கிய பங்கை வகித்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கரங்களே ஐரோப்பிய ஒன்றியத்தின் மீதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்று அவதானிகள் தெரிவித்தனர்.

மிகவிரைவான போர் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இலங்கை தள்ளப்பட்டு வருகிறது. இதனைதான் சில வேளை மேற்கு நாடுகள் விரும்பக்கூடும். இந்தநிலைக்கு விரும்பியோ விரும்பாமலோ அரசும் புலிகளும் தள்ளப்பட்டு வருகின்றனர் என்பதையே அவதானிக்க முடிகிறது.

கடந்த சனிக்கிழமைஐரோப்பிய ஒன்றியத்தின் தடை முஸ்தீபு குறித்து கருத்து வெளியிட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், பேச்சுகளை முடக்கி அமைதி முயற்சிளைச் சீர்குலைப்பதன் மூலம் தமிழர் மீது இன அழிப்பை ஏவிவிடும் முயற்சியே ஐரோப்பிய ஒன்றியத் தடை முஸ்தீபு.

ஐரோப்பிய ஒன்றியத்தைக் கொண்டு தடைசெய்து தமிழர் தரப்பு நியாயத்தை இல்லாமல் செய்து உண்மைகளை முடிமறைத்து தமிழர்களின் அபிலாசைகளை, இலட்சியங்களைச் கொச்சைப்படுத்தி ,பலவீனப்படுத்தி தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை திணித்து விடுவதற்கும் சர்வதேசத்தின் மத்தியில் பிழையான பரப்புரைகளை செய்து புலிகளையும் தமிழர் தரப்பினரையும் ஓரங்கட்டும் முயற்சியே இதுவாகும்.

புலிகளைப் பொறுத்த வரையிலும் தமிழர் தரப்பைப் பொறுத்த வரைக்கும் எமது நியாயங்களை கூற வாய்ப்புகள் குறைவாகும். அமைதி முயற்சிகளிலும் சரி எந்தவிடயமானாலும் சமதரப்பாக புலிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஏற்றுக்கொண்டதன் காரணமாகத்தான் தமிழர் தரப்பு அமைதி முயற்சிகளில் ஆர்வம் காட்டியது.இதிலிருந்து சர்வதேச சமூகம் விலகிக் கொள்வதோ நழுவக்கொள்வது என்பது சமாதான முயற்சிகளை முற்றாகச் சீர்குலைப்பதாகவே எம்மால்கருதப்படும். ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை என்பது தமிழர் தரப்பில் நம்பிக்கையீனத்தைத்தான் ஏற்படுத்தும்.சமாதான முயற்சிகளை குலைத்துவிடும் என்பதுதான் உண்மை.

இவ்வாறு தமிழ்ச் செல்வன் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஒஸ்லோ பேச்சுகளில் கலந்துகொள்வதாயினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கையை பொறுத்தே அமையும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஐரோப்பிய ஒன்றியத் தடைமூலம் கண்காணிப்புக் குழுவில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான சுவீடன்,டென்மார்க், பின்லாந்து ஆகியற்றின் உறுப்பினர்கள் கண்காணிப்புப் பணியிலிருந்து வெளியேற வேண்டி வரும். இதனால் கண்காணிப்புப் பணியிலிருந்து சமாதான முயற்சிவரை அனைத்துமே ஸ்தம்பித நிலையை அடையும் என்பது உறுதி.

அண்மையில் லண்டன் சஞ்சிகையொன்றுக்கு பேட்டியளித்த ஜனாதிபதி மஹிந்த கருத்து வெளியிடுகையில், புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் தடை அமைதிப் பேச்சுகளுக்கு புலிகளை இழுத்துவரும்.பேச்சுக்குப் போவதைத்தவிர வேறு வழியை அவர்களுக்கு விட்டுவைக்காது என்று அவர் தெரிவித்திருந்தார். இதிலிருந்து ஒன்றை தெளிவாகபுரிந்து கொள்ளமுடியும் அதாவது, புலிகள் குறித்தும் அதன் தலைமை குறித்தும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு தெளிவின்மை காணப்படுகிறது. அல்லது அவர் புலிகளை யுத்தம் ஒன்றை நோக்கித்தள்ளி அதன் மூலம் புலிகளை இராணுவ ரீதியில் தற்போதுள்ள சாதகமான சில அம்சங்களைப் பயன்படுத்தி(கருணா குழு போன்ற விடயங்கள்)தோற்கடித்தல் என்பதாகவே கருதவேண்டும். எனினும் இதிலுள்ள பரிதாபம் யாதெனில் மஹிந்தவின் இந்தச் சிந்தனையில் மேற்குறிப்பிட்ட இரண்டுமே தவறானவை என்பதை விரைவிலேயோ அல்லது எல்லாம் மைநழுவி போன நிலையிலோ மஹிந்த உணரக்கூடும். எனினும் அது கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரமாகவே இருக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடையைக் கண்டித்து ஐரோப்பிய நாடுகள் உட்பட 15 நாடுகளில் தமிழ் மக்கள் உரிமைக்குரல் எழுப்பியமையையும் இங்கு பதிவு செய்யவேண்டும். 15 நாடுகளிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஒன்று திரண்டு உரிமைக் கோஷம் எழுப்பினர்.

ஈழத்தமிழர்கள் பால் சர்வதேச சமூகம் காட்டிவரும் பாரபட்சத்தை சுட்டிக்காட்டியும்அதற்கு வேதனையையும் ,தமிழர் தரப்பு நியாயங்களை உலகின் செவிப்பறைகளில் ஓங்கி அறைந்திருக்கிறார்கள் புலம் பெயர் வாழ் தமிழ்மக்கள்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுக்கு தடைவிதிக்க ஐரோப்பிய ஒன்றியம் காட்டிவரும் முஸ்தீபுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பின்லாந்து, இத்தாலி, கனடா, சுவிஸர்லாந்து ,டென்மார்க், பிரான்ஸ், நெதர்லாந்து, நோர்வே, ஜேர்மனி உட்பட்ட நாடுகளில் தடைகளுக் கெதிரான தமிழ் மக்கள் உரிமைக் கோஷம் எழுப்பினர்.

**ஷோபா**

பேரெழுச்சி கொண்ட மக்களின் பலத்துக்கு முன்னால் இந்த உலகநாடுகளின் தடை என்ன செய்யப்போகின்றது என்று கேள்வி எழுப்புகிறார் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த்தேசியப் பற்றாளர் ஒருவர்.


பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

2006 மே 21 - 30 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

2006 ஜூன் 03 - 04
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

2006 ஜூன் 06 -10
A.S.N. [illegible]
392/A. [illegible] யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர்ஒளி

ஜூன் 4 - 10, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401–6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

# எல்லை மீறிய தலையீடு

வாழ்வியல் உரிமைகளுக்காகவும் அடிப்படை சுதந்திரங்களுக்காகவும், ஏன் தமது இனத்தின் தனித்துவமான இருப்பை உறுதிப்படுத்தவும் வேண்டி ஈழத் தமிழர்கள் நடத்திவரும் போராட்டத்தின் சரித்திரம் நீண்டது. நெருக்கடிகள் நிறைந்தது.

கொந்தளிப்பான இந்த வரலாற்றுப் பாதையில் தொடர்ச்சியாக கொடுரங்களையும் அடக்கு முறைகளையும் கொடும் போரையும் எதிர்கொண்டவர்கள் தமிழ் மக்கள். அந்த வரலாற்று ஓட்டத்தில் மற்றொரு மைல் கல்லிலேயே நாம் இன்று வந்து நிற்கிறோம்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகள் கையெழுத்திட்ட சமயம் அமைதித் தீர்வு ஒன்றை எட்டிவிடலாம் என்ற நம்பிக்கையுடனேயே கையெழுத்திட்டார்கள். ஏனெனில் முதல் தடவையாக சர்வதேச சமூகத்தின் அனுசரணை இனப்பிரச்சினைத் தீர்வில் பெறப்பட்டிருந்தது.

கடந்த கால வரலாறு தந்த பாடங்களால் தென்னிலங்கைத் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்த நிலையில் விடுதலைப் புலிகள் நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். வெளிநாடு ஒன்றின் அனுசரணைப் பணி பெறப்படாதிருந்தால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கவே மாட்டாது. புலிகள் இணங்கி இருக்க மாட்டார்கள். சர்வதேச சமூகம் பக்கச் சார்பின்றி நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கை புலிகளுக்கு இருந்தது. தற்பொழுது அந்த நம்பிக்கை அற்று வருகிறது.

அமெரிக்காவின் தூண்டுதலால் சர்வதேச சமூகம் இலங்கை அரசின் கைப்பொம்மையாக மாறிவருகிறது.

புலிகள் மீது நெருக்குதலை ஏற்படுத்தி அவர்களை பணிய வைத்து தமது பேரினவாத நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சர்வதேச சமூகத்தைப் பயன்படுத்தும் முனைப்புடன் இலங்கை அரசு செயலாற்றி வருகிறது. அதன் விளைவுதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் சர்வதேச பொலிஸ்காரனாகி விட்ட அமெரிக்கா, அமெரிக்காவின் எடுபிடியான பிரிட்டன் ஆகியவற்றின் வழிநடத்தலில் தான் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான காய் நகர்த்தல்கள் சர்வதேச அரங்கில் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈராக், கியூபா, வட கொரியா உட்பட சர்வதேச நாடுகளில், தான் பயன்படுத்திய மூர்க்கத்தனமான இராஜதந்திரத்தையே இலங்கைப் பிரச்சினையிலும் கையாள முனைகின்றன அமெரிக்காவும் அதன் எடுபிடியான பிரிட்டனும்.

புலிகளைத் தனிமைப்படுத்தும் முயற்சி யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதற்கான காரணங்களை கற்பித்திருக்க முடியும். ஆனால் சமாதான காலத்தில் ஏற்பட்டிருப்பதுதான் வேதனை தருகிறது.

அரசாங்கத்துக்கு தற்பொழுது பேச்சுவார்த்தையில் நாட்டம் இல்லை. உள் நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் புலிகளை பலவீனப்படுத்தும் நோக்கத்துடனேயே அது செயற்படுகிறது. யுத்தம் ஏற்பட்டு பேரழிவு ஏற்பட்டாலும் அரசு கவலைப்படும் நிலையில் இல்லை.

ஆழ ஊடுருவும் படையணி மூலமும், ஒட்டுக் குழுக்கள் மூலமும் புலிகளை பலவீனப்படுத்தலாம் என்று அரசு நினைக்கிறது. அதே போன்று அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளை கைக்குள் போட்டுக் கொண்டு சர்வதேச ரீதியில் புலிகளுக்கு நெருக்கடிகளை கொடுக்கத் திட்டமிடுகிறது.

அமெரிக்காவின் தூண்டுதலினால் தற்பொழுது சர்வதேச அரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் எல்லை மீறித் தலையிட எடுக்கப்படும் முயற்சி என்பதில் சந்தேகம் இல்லை. யார் தலையிட்டாலும் புலிகள் ஒரே பாணியைத் தான் கையாளுவார்கள் என்பதே கடந்தகால வரலாறு.

# போவர் வெறுங்கையுடன் போனார்



இனப்பிரச்சினை விவகாரத்தில் நாடு முக்கிய திருப்புமுனையில் சிக்கியிருக்கும் இவ்வேளையில், அண்மையில் இடம்பெற்ற நான்கு சம்பவங்களால் தமிழ் மக்கள் உளரீதியாகப் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ள பின்னணியில் நோர்வேயின் சமாதானத் தூதர்கள் இருவரும் இங்கு வந்து சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்கும் முயற்சியில் முழுமுச்சாக ஈடுபட்டனர்.

**நான்கு சம்பவங்கள்**

இது தொடர்பாக நாம் ஆராய்வதற்கு முன்னர் தமிழ்த் தேசத்துக்கு சொல்லொணாத் துயரை ஏற்படுத்திய குறிப்பிட்ட சம்பவங்கள் மீது எமது பார்வையைச் செலுத்திவிட்டு அப்பால் செல்லுதல் பொருத்தமாக இருக்கும்.

1. கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் வடக்கு - கிழக்கில் தொடரும் வன்முறைகள் குறித்து சபை ஒத்தி வைப்பு விவாதத்தில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியபோது அரசதரப்பு ஆசனங்கள் வெறுமையாகக் காணப்பட்டன. மூத்த அமைச்சர்கள் ஓரிருவர் மட்டும் அவ்வப்போது தமது தலையைக் காட்டி விட்டுச் சென்றனர்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மீது அரசின் இராணுவமும் ஒட்டுக் குழுக்களும் கட்டவிழ்த்து விட்டுள்ள காட்டுத்தர்பார் பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நியாயம் கேட்டபோது அதற்கு செவிகொடுக்க மறுத்த அரச தரப்பினரிடம் இருந்து தமிழ் மக்கள் எவ்விதம் நியாயம் கேட்க முடியும் அல்லது தமது உரிமைகளை எப்படி பேச்சுவார்த்தைகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. அரச படைகளின் அட்டகாசங்களில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் படகுகள் மூலம் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்றபோது நடுக்கடலில் தத்தளிக்க வேண்டி ஏற்பட்டது. சிங்கள மீனவர்கள் சிலர் அவர்களைக் காப்பாற்றி சிலாபம் பொலிஸில் ஒப்படைக்க, பொலிஸார் அந்த அகதிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமானால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணி முதல் சமாதான முயற்சிகள் வரையிலான அனைத்தும் மறுபரிசீலனைக்குட்படுத்தப்படும் நிலையேற்படும் எனக் கூறி போவரைத் திருப்பி அனுப்பியிருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நீதிபதி அந்த அப்பாவித் தமிழர்கள் 22 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். மறியலில் உள்ள குழந்தைகளுக்கு பால்மா கொடுக்கக்கூட சிறையதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

3. ''விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்திருப்பது போன்று வளைகுடா நாடுகளும் புலிகள் இயக்கத்தை தடைசெய்து அந்த நாடுகளில் உள்ள அவர்களின் வங்கிக் கணக்குகளை மூடவேண்டும்'' என்று கேட்டிருப்பவர் வேறு யாரும் அல்லர். இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தான். கட்டாரின் தலைநகர் டோஹாவில் நடைபெற்ற ஆசிய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீர செய்தியாளர்களிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை அவர்கள் புலிகளைத் தடைசெய்வதுடன் நின்றுவிடாமல் புலிகளின் அலுவலகங்களை மூடி அவர்களின் சொத்துகளை



முடக்கவேண்டும். புலிகள் அந்த நாடுகளில் நிதி சேகரிப்பதற்கான வாய்ப்பை முதலில் நிறுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

4. கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு வவுணதீவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமது முன்னரங்க காவலரணில் இருந்து மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி ரமணன் உயிரிழந்தார். இவர் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோதுதான் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதல்களுக்கு இலக்கானார்.

தமிழ் நெஞ்சங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தப் பின்புலத்தில்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் போவரும் சமாதான அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான எரிக் சொல்ஹெய்மும் இலங்கை வந்திருந்தனர்.

**முயற்சிகள் தோல்வி**

இங்கு வந்து விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடியாத நிலையில் ஜனாதிபதி மஹிந்த உட்பட அரச தரப்பினருடன் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்திய எரிக் சொல்ஹெய்மினால் முட்டுக்கட்டை நிலையில் இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன் நகர்த்த முடியவில்லை. முடியாமலே திரும்பிச் சென்றிருக்கிறார்.

இங்கு வந்திறங்கி அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் போவரும் கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துவிட்டு வெறுங்கையுடன் திரும்பி வந்திருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமானால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணி முதல் சமாதான முயற்சிகள் வரையிலான அனைத்தும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும் நிலை ஏற்படும் எனக் கூறி அவரைத் திருப்பி அனுப்பியிருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

''வடக்கு - கிழக்குப் பகுதியில் அரசும் படைகளுடன் இணைந்து ஒரு போர்ச்சூழலை ஏற்படுத்தி வருகின்றது. பொருளாதாரத் தடைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆனால், அரச தரப்பு நியாயங்களை மட்டுமே கவனத்துக்கு எடுத்து தமிழர் தரப்பு நியாயங்களை சர்வதேசம் புறக்கணிப்பதை விடுதலைப் புலிகள் ஒரு பக்கச் சார்பான நடவடிக்கையாகவே கருதுகிறார்கள். சர்வதேசத்தின் ஒருதலைப் பட்சமான இத்தகைய நிலைப்பாடு அமைதி முயற்சிகளை ஓரங்கட்டி ஒருபலவீனமான நிலைக்குத் தள்ளும்''

சுபாஷ்

என்றும் அவர்கள் போவருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேக்கு இருக்கும் பொறுப்பையும் போவருடனான தமது பேச்சுவார்த்தையின் போது தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முடிவுகளால் எழுந்த மாற்றங்கள்



தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் பல திருப்புமுனைகளுக்கு வித்திட்டுள்ளன. குறிப்பாக காங்கிரஸ் கட்சி ஆட்சியில் பங்குபெறும் சாத்தியம் வலுப் பெற்றுவருவது பிரதான திருப்புமுனையாகும். 1967ஆம் ஆண்டின் பின்னர் தமிழகத்தில் காங்கிரஸ் தமிழகத்தின் அமைச்சரவையில் பங்குபெற சந்தர்ப்பம் கிட்டவில்லை. இப்போது 40ஆண்டுகள் கழித்து இந்த வாய்ப்பு கைகூடியுள்ளது. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தியால் சாதிக்க முடியாதுபோன இது சோனியா காந்தியின் மற்றொரு சாதனையாகும். ஆட்சியில் பங்கு வழங்க தி.மு.க. ஆரம்பத்தில் விரும்பவில்லை. ஆனால் மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சியில் தி.மு.க. அமைச்சர் பதவி வகித்தால் தமிழகத்தில் ஆட்சியில் காங்கிரஸ் ஏன் பங்கு பெறக்கூடாது என்ற கேள்வி வலுவாக எழலாயிற்று. வேறுவழியின்றி தி.மு.க. இணங்கியுள்ளது. இதில் சுவாரஸ்யம் என்னவெனில் 1967இல் அண்ணாத்துரை தலைமையில் காங்கிரஸ் அரசை வீழ்த்தி திராவிட ஆட்சியை நிறுவிய தி.மு.க.விலும் கலைஞர் பங்காளி; இன்று அதே காங்கிரஸை மீண்டும் ஆட்சிக்கூட்டில் ஏற்றி விடுவதும் அதே கருணாநிதியே; காலச்சக்கரம் நினைப்பதை விட வெகுவேகமாகத்தான் சுழல்கிறது. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை தமிழகத்தில் மீண்டும் ஆட்சியை பிடிப்பதில் இது ஒரு முக்கிய

**-எஸ். சுரேந்திரஜித்-**

படிக்கல் ஆகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் பிரச்சினைக்கு காரணமே உள்கட்சிப்பூசல்தான். 35எம்.எல்.ஏக்களில் சகலரும் அமைச்சர் பதவியை விரும்புகின்றனர். ஐந்து அமைச்சர் பதவிகளை விரும்புகின்றனர். ஐந்து அமைச்சர் பதவிகளை வழங்க தி.மு.க. இணங்கியதாகத் தெரிகிறது. பீட்டர் அல்போன்ஸ், யசோதர, வசந்தகுமார் ஆகிய மூத்த காங்கிரஸ் தலைவர்களுக்கு இடம் கிடைக்குமென்று தெரிகிறது. இவ்வாறு காங்கிரஸ் பதவி பெற்றால் ப.ம.க.வின் நிலை என்ன என்பது கேள்வியாகிறது. எந்தத் தொண்டனும் தனது எம்.எல்.ஏ. அமைச்சராவதை விரும்பவே செய்வான். அந்தவகையில் பா.ம.க. தொண்டர்களின் விருப்பத்துக்கு இடமளிக்க ராமதாஸுக்கு நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

இது இவ்வாறிருக்க ம.தி.மு.கவை மத்தியில் ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேற்றும்படி காங்கிரஸை தி.மு.க. நெருக்கி வருகிறது. எனினும் ம.தி.மு.கவின் நான்கு லோக்சபா எம்.பிக்களது ஆதரவை இழக்க காங்கிரஸ் மேலிடம் விரும்பவில்லை. மேலும் இந்த 4 எம்.பிக்களும் மத்தியில் எந்த அமைச்சர் பதவியையும் வகிக்காமலேயே மத்திய அரசுக்கு ஆதரவு வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆதரவை ஏன் உதறவேண்டுமென காங்கிரஸ் கருதுவதாகத் தெரிகிறது. மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் தொழிலதிபர் டாட்டாவை மிரட்டியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டில் அவர் மீது லோக்சபாவில் குறைகூற அ.தி.மு.கவுடன் ம.தி.மு.கவும் இணைந்துகொண்டது சர்ச்சையாகியுள்ளது.

மத்திய அரசை ஆதரிப்பதாயின் அந்த அரசின் ஓர் அமைச்சரான தயாநிதி மாறனை எதிர்க்கட்சியான அ.தி.மு.கவுடன் இணைந்து தாக்குவது சரியா என்று தி.மு.க. கேட்கிறது. இந்த வாதத்திற்கு ம.தி.மு.கவிடம் பதில் இல்லை. கடந்தவாரம் தமிழக சட்டசபையின் முதல் உத்தியோக பூர்வ கூட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினர் அ.தி.மு.கவின் முன்னைய ஆட்சியை குறைகூறப்போய் அ.தி.மு.க-காங்கிரஸ் எம்.எல்.ஏக்களிடையே கைகலப்பு உண்டானது. இதன்போது ம.தி.மு.கவினர் ஏதும் பேசாது உட்கார்ந்திருந்தனர். காங்கிரஸை தாக்க அவர்களால் முடியாது. ஆக அ.தி.மு.கவுடனான உறவு ''ஆறுகடக்கும் வரை நீயும் நானும் அண்ணன் தம்பி; அதன் பிறகு வேறுயாரோ'' என்பதுபோல் தேர்தலுக்கு மட்டுமே உறவாக இருக்கவேண்டி நேரலாம். அதாவது அ.தி.மு.கவுடன் மேற்கொண்டு இணைந்து நடக்காமலிருக்க ம.தி.மு.க. முடிவு செய்ய வேண்டிவரும்.

இது இவ்வாறிருக்க உயர்கல்வி நிறுவனங்களில் சிறுபான்மை சாதியினருக்கு 27 இடஒதுக்கீடுகள் வழங்க மத்திய அரசு எடுத்த முடிவு பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது. உயர்சாதி டாக்டர்கள், மருத்துவமாணவர்கள், பொறியலாளர்கள் என பலரும் இதை எதிர்க்கின்றனர். 1982-1990ல் இதே போன்ற இடஒதுக்கீட்டை அமுல்செய்ய மண்டல் கமிஷன் செய்த பரிந்துரையை எதிர்த்து நூற்றுக்கணக்கான உயர்சாதி மாணவர்கள் தீக்குளித்ததும் நினைவிருக்கலாம். இன்று அதை ஒத்த ஓர் இடஒதுக்கீட்டையே காங்கிரஸ் கொண்டுவர முயல்கிறது. அன்று வி.பி.சிங் அரசு கடைசி நேரத்தில் பின்வாங்க நேரிட்டது. ஆனால், இன்றுள்ள நிலையோ வேறு. காங்கிரஸும் சரி அதற்கு முண்டு கொடுக்கும் இடதுசாரிகள், தி.மு.க., பா.ம.க, வல்லுபிரசாத்யாதவ் என சகலரும் இந்த இடஒதுக்கீட்டுக்கு முழுமையான ஆதரவு தருகின்றனர். சிறுபான்மை இஸ்லாமியர் மற்றும், கிறிஸ்தவருக்கும் இதில் இடமளிக்க முற்படுவதாக கூறப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் அநேகமாக இது சட்டமாகிவிடும் சந்தர்ப்பம் நிறையவே உண்டு. சோனியா காந்தியின் காங்கிரஸ் துணிந்து எடுத்திருக்கும் இம்முடிவு அக்கட்சிக்கு வாக்களிக்கும் மிககுறைந்த பிராமணர் உள்ளிட்ட உயர்சாதியினரின் வாக்குகளை இழக்கும் நிலைக்கு காங்கிரஸை தள்ளலாம்.

எனினும் முழுவீச்சில் பெரும்பான்மை இந்துக்களை தாக்க காங்கிரஸ் முடிவெடுத்துவிட்டதாகத் தெரிகிறது. காங்கிரஸின் எதிரியான முலாயம்சிங் யாதவ் கூட சாதிக்கட்சியின் தலைவர் என்பதால் இதை எதிர்க்கும் வாய்ப்பில்லை.


## மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள மலேசியா மொழி கற்பித்தல்.

தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட் மலேசியா அரசாங்கத்தாலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தாலும் மலேசியா மொழியை கற்பிப்பதற்கு அங்கிகரிககப்பட்டுள்ளது. மலேசியா நாட்டிற்கு விசா பெற விரும்பும் அனைவருக்கும் **MLVK** சான்றிதல் கட்டாயம் தேவை. கற்றுக்கொள்ள விரும்புவோர் உடனடியாக எங்களது காரியாலயத்தை தொடர்பு கொள்ளவும். தங்கி படிக்க விரும்புவோருக்கு தங்கும் வசதி சாப்பாடு வசதி உண்டு.

**தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட்.**
இல. 104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு - 11.
Tel : 011 - 5333346 / 7 / 8 / 9.

**தனா இன்டர்நெசனல் கல்வி நிலையம்.**
இல. 4, பம்பலப்பிட்டி டிரைவ், பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
Tel : 011 - 4510456 / 7

**இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்ட்டிட்டியு.**
இல. 571, கட்டுவ, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.
Tel : 031 - 4872869.

## தொழில் பயிற்சியும் – வேலைவாய்ப்பும்

தனா மேன்பவர் பிரைவட் லிமிட்டட் - இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்டியுட் இரு நிறுவனங்கலும் இணைந்து தொழில் பயிற்சி இல்லாதோருக்கும், தொழில் திறமை இல்லாதோருக்கும் - திறமையான தொழில் பயிற்சி வழங்கி உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கி வ்ருகின்றோம்.

**தொழில் பயிற்சி காலம் 1 மாதம் முதல் 6 மாதம் வரை:**

மேசன், சட்டரிங் கார்ப்பென்டர், பார்பென்டர், பிளம்பர், பைப்பிட்டர், A/C மெக்கேனிக், டக்ட் மெக்கேனிக், வெல்டர், எலெக்ட்ரொ மெக்கேனிக்கல் டெக்னீசியன், பெப்ரிகேட்டர், ஸ்கெப்போல்டர், இலெக்ட்ரீசியன்.

தொழில் பயிற்சி முடிந்தவுடன் உடனடி வேலைவாயுப்பு, சம்பளம் (20000) இருபதாயிரத்திற்கு மேல்.

பயிற்சியின் போது பொறியியளாளரின் வரை படம் பார்த்து ஆங்கிலம் மொழிபேசி சர்வதேச தரத்திற்கு நிகராக தொழில் புரிய பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் Saftey Kit - பாதுகாப்பு சாதனங்கள்வழங்கப்படும். பயிற்சியின் போது தேவைப்படுவோருக்கு உணவும், தங்கும் வசதி உண்டு.

இந்தியாவின் டாடா நிறுவனத்தின் உறுப்பு நிறுவனமான **Voltas** நிறுவனத்துடனும் லண்டனில் இயங்கிவரும் **City & Guilds** நிறுவனத்துடனும், இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான **Vocational Training Authority** ஆகிய நிறுவனத்தினுடன் இணைந்து தொழில் பயிற்சி வழங்கி உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதல் வழங்கி தொழில் பெற்றுக்கொடுக்கின்றோம்.

உடனே இணைந்து உங்களது எதிர்காலத்தை நல்ல தொழிலுடன் ஆரம்பியுங்கள்.

**செய்யும் தொழிலே தெய்வம் திறமை தான் நமது செல்வம்**

**இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியுட்**
**Industrial Training Institute (ITI)**
571, சிலாபம் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு
தொ.பே. 031-4872869 / 077-3124787
(Member of DANA Group)

# அரசியல் அதிர்வுகள்

-போஸ்-

## கேள்விக்கு என்ன பதில்?

நாடாளுமன்றத்தில் அமைச்சர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள் பல பதிலளிக்கப் படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளனவாம். கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு கால அவகாசம் தேவை என்று அமைச்சர்கள் கூறுவது இப்போது வழக்கமாகிவிட்டதாம்.

தான் கேட்ட கேள்விகள் சிலவற்றுக்குப் பதில் அளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பின்னடித்து வருவது பற்றி நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் அனுரகுமார திசாநாயக்கா அமைச்சர்களை கடுமையாக சாடினாராம்.

அவருடன் இணைந்துகொண்ட கொழும்பு மாவட்ட உறுப்பினர் தி.மகேஸ்வரன் கொழும்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்மொழி பாடசாலைகள் பற்றிய தனது கேள்வி ஒன்றுக்கு ஒருவருடமாகியும் இன்னும் பதில் தரப்படவில்லை என்று சொன்னாராம்.

அத்துடன் கடந்த 20 வருடகாலத்தில் வடக்கு– கிழக்கில் கிறிஸ்தவ தேவாலயங்கள், கன்னியாஸ்திரி மடங்கள் மற்றும் சபைகளுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றியும் அவற்றைப் புனரமைக்க அமைச்சு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் மீள் குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் கேள்வி கேட்டிருந்தாராம் மகேஸ்வரன்.

இந்தக் கேள்விக்கான பதிலை சபையில் சமர்ப்பிப்பதாக முதலில் தெரிவித்த அமைச்சர் அதை வாசிக்கும்படி மகேஸ்வரன் கேட்ட போது அந்த வினாப்பத்திரத்தில் உள்ள சில கேள்விகளுக்கும் தனது அமைச்சுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னாராம்.

ஏராளமான அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருக்கும்போது அமைச்சர்களே எந்தெந்த அமைச்சுகள் தமக்குக்கீழ் இயங்குகின்றன என்று தெரியாமல் திண்டாடுகின்றனர் என்று எதிர்க்கட்சி வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகின்றதாம்.

## மந்திரிசபை மறுசீரமைப்பா? தேர்தலா?

மந்திரி சபையை மறுசீரமைப்பதா இல்லையா என்பது பற்றி மஹிந்தர் இதுவரை இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லையாம். மந்திர சபையை இப்போது மாற்றி அமைக்கலாமா அல்லது பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி வெற்றி பெற்ற பின்னர் அதைச் செய்யலாமா என்று மஹிந்தர் யோசித்து வருகிறாராம்.

ஆனால் மந்திரிசபை மறுசீரமைப்பு அடுத்து வரும் வாரங்களில் நிகழலாம் என்று அரசவட்டாரங்களில் ஹேஷ்யம் கூறப்பட்ட போதும் இப்போது மறுசீரமைப்பு நடைபெறாதாம்.

மந்திரிசபையை மறுசீரமைப்பது பற்றிய செய்தி அமைச்சர்கள் மட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறதாம்.

அண்மையில் அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தின் ஒரு மூலையில் அமர்ந்து முன்பு சந்திரிக்காவுக்கு நெருக்கமாக இருந்த சில அமைச்சர்களுடன் குசுகுசு பேச்சுக்கள் நடத்தினாராம்.

அவர்கள் மஹிந்தரின் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள் பற்றியும், எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தெரியாமல் அவர் தடுமாறுகிறார் என்றும் காதோடு காதாகக் கதைத்துக் கொண்டார்களாம்.

அப்போது மஹிந்தரின் விசுவாசியான இன்னோர் அமைச்சர் அவர்களை நெருங்கியதும் பேச்சை நிறுத்திவிட்டார்களாம்.

## கருணா குழுவுக்கு நிதி மற்றும் ஆயுதங்கள் வழங்கவேண்டாம். (ஜனாதிபதி உத்தரவு)

அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளும், அமைச்சர்களும் தம் மனம்போன போக்கில் நடந்துகொள்வதும், கதைப்பதும் ஜனாதிபதி மஹிந்தருக்குப் பெரும் தலைவலியைக் கொடுக்கிறதாம்.

அண்மையில் அரச சமாதான செயலகத்தின் தலைவரான பாலித கொஹன பி.பி.சி யின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியில்

கருணா குழுவினருடனான நிதி, ஆயுதங்கள் உள்ளிட்ட சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்தர் இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தாராம்.

செவ்வியின் போது கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த கொஹன "கருணா குழுவினருடன் கீழ் மட்டத்தொடர்புகள் இருக்கலாம் என்றும் கூறினாராம். யுத்தநிறுத்தம் அமுலில் உள்ளதால் படைத்தரப்பினர் ஏனைய குழுக்களுடன் தொடர்புகளை வைத்திருக்கலாம். இது மனித இயல்பு " என்றும் சொன்னாராம்.

ரோய்ட்டர் செய்திச் சேவைக்கு அளித்த செவ்வியிலும் இவ்வாறான கருத்துக்களை பாலித கொஹன வெளியிட்டு இருப்பது இராணுவ மட்டத்தில் கடும் சீற்றத்தை உருவாக்கியுள்ளதாம்.

நிதி மற்றும் ஆயுதங்களை கருணா குழுவுக்கு வழங்குவதை நிறுத்துமாறு ஜனாதிபதி எங்களுக்கு கூறியதாக கொஹன கூறியிருப்பது எங்களது நிதி மற்றும் ஆயுதங்களை வைத்துக்கொண்டுதான் கருணா குழு இயங்குகின்றது என்ற செய்தியையே மக்களுக்கு கொடுக்கிறது. ஆயுதப்படைகள் மீது நல்லெண்ணத்தை உருவாக்க இது உதவப்போவதில்லை என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஓர் இராணுவ அதிகாரி சொன்னாராம்.

## கருணா குழுவை எமக்குத் தெரியாது

அண்மையில் ஜனாதிபதி மஹிந்தரை நோர்வேயின் சமாதானத் தூதுவர்கள் சந்தித்து உரையாடியபோது கருணா குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித உறவும் கிடையாது என்று கையை விரித்தாராம் அவர்.

இந்த உரையாடலின் போது அரசும் விடுதலைப்புலிகளும் போரை நோக்கியே நகர்ந்து செல்கின்றார்கள் என்று குறிப்பிட்ட எரிக் சொல்ஹெய்ம் கருணா குழுவினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டால் மட்டும் சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான வழி திறக்கும் என்றும் ஜனாதிபதிக்குச் சொன்னாராம்.

நோர்வே அனுசரணையாளர்கள் கருணாவுடன் அவரது பங்கு என்ன என்பது பற்றிப் பேசவேண்டும் என்றும் மஹிந்தர் அனுசரனையாளர்களிடம் சொன்னாராம் அதற்கு அவர்கள் பதில் எதுவும் சொல்லவில்லையாம்.

ஜனாதிபதிக்கும் நோர்வே அனுசரணையாளர்களுக்கும் இடையில் இரு மணித்தியாலங்கள் வரை தொடர்ந்த இப்பேச்சுக்கள் எவ்வித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்ததாம்.

## ரமணனைக் கொன்றது கருணா அணியாம்

கடந்த 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு வவுண தீவில் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியானார் என்று நம்பப்படும் விடுதலைப் புலிகளின் உபதளபதிகளில் ஒருவரான ரமணனின் கொலைக்கு கருணா குழு உரிமை கோரியிருக்கிறதாம்.

இந்தக் கொலைக்கு இராணுவத்தினரே பொறுப்பு என்று கூறப்படும் குற்றச்சாட்டை நிராகரித்த கருணா குழுவின் பேச்சாளரான தூயவன், விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளைப் பரிசோதிக்க ரமணன் வரும் வரை தமது அணியைச் சேர்ந்தவர்கள் காத்திருந்ததாகக் கூறினாராம்.

ரமணன் மீது தாக்குதல் நடத்துவதற்கு பொருத்திவைக்கப்பட்ட கிளைமோர் குண்டு செயலிழந்ததை அடுத்து T56 ரக துப்பாக்கியால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவரும் அவருடன் மோட்டார் சைக்கிளில் கூடவந்தவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகவும் தூயவன் தெரிவித்தாராம்.

# போவர்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழர் தரப்பு நியாயங்களையும் சர்வதேசத்துக்கு எடுத்து விளக்கும் பொறுப்பு நோர்வேக்கு இருக்கிறது. அரசாங்கம் 'அரசு' என்ற அதிகார நிலையில் ஒருதலைப் பட்சமாக தனது நியாயங்களை எடுத்துவிளக்குவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு அந்த வாய்ப்பு இல்லை.சர்வதேசம் இருதரப்புகளையும் சமதரப்பாக ஏற்றுக்கொண்டு அமைதி முயற்சிகளில் ஈடுபட்டதால்தான் தமிழர் தரப்பும் அமைதி முயற்சிகளில் ஆர்வம் காட்டியது. இதிலிருந்து சர்வதேசம் நழுவிக் கொள்ளுமானால் அது அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே இருக்கும். மேலும் அது தமிழர் தரப்பின் நம்பிக்கையையும் சிதறடிக்கும்" - இவ்வாறெல்லாம் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாக எடுத்து விளக்கி இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு கொழும்பு திரும்பி வந்திருக்கிறார் ஹன்சன் போவர். இங்கே இன்னொரு விடயத்தையும் எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

### போவரின் போக்கிலும் நம்பிக்கை இல்லை

அரசாங்கத்தின் அராஜகப் போக்கில் மட்டுமன்றி இனப்பிரச்சினை தொடர்பில் போவரின் போக்கிலும் தமிழர் தரப்பு அதிருப்தி அடைந்துள்ளது என்பதே அந்த விடயம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை, அமைதி முயற்சிகளின் தற்போதைய நெருக்கடி நிலைமை ஆகியவை தொடர்பான விடயங்களில் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் போவரின் பங்களிப்புக் குறித்தும் தமிழர் தரப்பில் அதிருப்தி உருவாகி இருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தடைவிதிக்கும் யோசனை ஐரோப்பிய ஒன்றியத்தின் தீவிர பரிசீலனைக்கு பல தடவைகள் வந்திருக்கின்றது. உத்தேசத் தடை, சர்வதேச பங்களிப்பில் இருந்து விடுதலைப் புலிகளை முற்றாக ஒதுக்கி வைக்கும் என்பதால் அத்தகைய நடவடிக்கையை எடுக்காமல் தடுப்பதில் நோர்வே இதுவரை காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளது. அதன் பின்னணியில் சமாதான அனுசரணைப் பணியில் முக்கிய பங்காற்றிய எரிக் சொல்ஹெய்ம் தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறார்.

ஆனால் இலங்கை அரசு போன்று விடுதலைப் புலிகள் தங்களையும் சமதரப்பாகக் கருதி செயல்படுகின்றமையும் சிலவிடயங்களில் பிடிவாதம் பிடிக்கின்றமையும் போவரை எரிச்சலுக்குள்ளாக்கிய விடயங்கள் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில்தான்

✸ இம்முறை ஐரோப்பிய ஒன்றியத் தடை குறித்து நோர்வே அதிக ஆர்வம் காட்டவில்லை என்றும்

✸ அதற்கு போவரின் பாராமுகமே காரணம் என்றும்

தமிழ்த் தரப்பு குறைபட்டுக் கொள்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஹன்சன் போவருடன் இறுக்கமாக நடந்து கொண்டதால் அவரும் சொல்ஹெய்மைப் போல் வெறுங்கையுடனேயே போகப் போகிறார் என்றும் அரசியல் அவதானிகள் எடுத்துச் சொல்கிறார்கள்.

### புலிகள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு சொல்லிய செய்தி

சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள எரிக் சொல்ஹெய்மையும் ஹன்சன் போவரையும் தமது இறுக்கமான நிலைப்பாட்டில் தளர்வுப் போக்கைக் காட்டாமல் திருப்பி அனுப்பியதன் மூலம் சர்வதேசத்துக்கு குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு செய்தி ஒன்றைச் சொல்லியிருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

✸ கடந்த மாதம் 29 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடைசெய்யும் தீர்மானத்தை எடுக்கும் என்ற அச்சுறுத்தல் ஒருபுறம்.

✸ மறுநாள் 30 ஆம் திகதி இணைத் தலைமை நாடுகள் கூடி புலிகளுக்கு எதிராக இறுக்கமான அறிக்கையை வெளியிடலாம் என்ற எச்சரிக்கை மறுபுறம்.

இதற்கு மத்தியில்தான் இவர்கள் இருவரும் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது பற்றி ஆராய, புலிகளின் உள்ளக்கிடக்கையை நாடி பிடித்துப் பார்க்க இலங்கை வந்தனர்.

தமக்குப் பின்னால் இரண்டு மூன்று இலட்சம் இந்தியத் துருப்பினரை நிறுத்தி வைத்துக்கொண்டு தம்மை அச்சுறுத்தி இந்த நாட்டில் சமாதானத்தை உருவாக்க முயற்சித்த இந்தியத் தரப்பின் தலையையே உருட்டிய விடுதலைப் புலிகள் நோர்வேத் தரப்பின் ஊடாக காரியத்தைச் சாதிக்க முயலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சிக்கு தலையாட்டி 'ஆமாம்' போடுவார்களா? அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் முறியடிப்பதுதானே புலிகளுக்கு கைவந்தகலை. அவர்களுக்கு தெரிந்த இந்தக் கலைதான் இம்முறையும் சொல்ஹெய்ம், போவர் இருவரையும் ஏமாற்றத்துடன் திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றது.

### தமிழ்த் தரப்பு கவனத்தில் கொள்ளவேண்டியது

தற்போதைய களநிலையில் தமிழ்த்தரப்பு கவனத்தில் கொள்ளவேண்டிய மிக முக்கியமான விடயம் ஒன்று உள்ளது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் இன்று அந்நிய சக்திகளின் தலையீடு அதிகரித்து இருக்கின்றது. செப்டம்பர் 11 அமெரிக்க தாக்குதலுக்குப் பின் அமெரிக்காவும் அதன் நேச அணியான மேற்குலகும் விடுதலை இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்களாகக் கருதி செயல்படுவதும் இறையாண்மை உள்ள அரசுகளின் அடாவடித்தனங்களுக்கு நியாயம் கற்பித்து வருவதும் உலக ஒழுங்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களாகும்.

இந்த மாற்றத்தின் அடிப்படையில்தான் சமாதானம் என்று கூறிக்கொண்டு அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கை அரசியலில் இறங்கி தீவிரமாகச் செயல்படுகின்றன. இந்த அந்நிய சக்திகள் தமிழரது விடுதலைப் போராட்டத்துக்கு சாதகமாக செயல்படும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கு இல்லை. இவைகள் தமது நலன்களுக்காக சிங்கள அரசையே பலப்படுத்தப் போகின்றன.

எனவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் அதன் இறுதி இலக்கை நோக்கி நடைபோடும் இத்தருணத்தில் சர்வதேச சக்திகளின் தலையீடுகளைத் தகர்த்து எறியும் தந்திரோபாயங்களை வகுப்பதற்கு தமிழ்த் தரப்பு முன்வரவேண்டும்.

அதுமட்டுமன்றி அன்றுபோல் என்றும் தமது போர்வலுச் சமநிலையையும் தமிழ் மக்களது ஆதரவையும் சிதறவிடாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இவற்றைக் கணக்கில் எடுத்துக் காய்களை நகர்த்தினாலே எதிர்காலத்தில் தமிழர் தேசியம் வெற்றிக் கம்பத்தை எட்டிப் பிடிக்க முடியும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாரம்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# மாதவிலக்கும் வயிற்று வலியும்

கே: ஆண். வயது 30. உலகில் இன்று மரணத்தைத் தருகின்ற நோய்களில் இருதய நோய் முதலிடம் வகிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இருதய நோய்கள் ஏற்படாமல் இருக்க கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைத் தரவும்

ப: சுருக்கமாக கூறுவேண்டுமானால் உங்கள் இரத்த அழுத்தத்தை கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். சாதாரணமாக 120/80 மிமி Hg அளவில் இரத்த அழுத்தம் இருப்பது விரும்பத் தக்கது. இரத்த அழுத்தத்தை உணவு முறைகள், உடற்பயிற்சி மூலம் கட்டுப்படுத்தலாம். மனஇறுக்கங்கள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். மன இறுக்கங்கள் இல்லாத வாழ்க்கை முறையை வாழவேண்டும்.

இரத்த அழுத்தம் அதிகரித்தால் அதற்குரிய மருந்துகளை உப யோகித்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இரத்தத் தில் உள்ள கொலஸ்திரோல் அளவு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். உணவு முறைகள், உடற்பயிற்சி, தேவைப்படின் மருந்துகள் மூலம் இந்தக் கட்டுப் பாட்டை நடைமுறைப் படுத்தலாம்.

நார்ச்சத்து அதிக அளவிலும் கொழுப்பு கொலஸ்திரோல் குறைந்த அளவிலும் உள்ள உணவு வகைகளையே உட்கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு சில கட்டுப்பாடுகள் மூலம் பெரிதளவில் இருதய நோய்கள் ஏற்படாமல் தடுக்க உதவும்.

கே: ஆண்- வயது 22- எனது தலையில் தலைமுடி சில இடங்களில் வட்ட வடிவமாக உதிர்ந்து சொட்டை விழுகின்றது.



சிலவேளைகளில் தலை அரிப்பதும் உண்டு. பல வைத்தியர்களிடம் வைத்தியம் செய்தும் பயனில்லை. பரிகாரம் கூறவும்.

ப: உங்களுக்கு ஏற்பட்டிருப்பது அநேகமாக ALOPECIA ARETA என்கின்ற நோய். அநேகமாக இளவய தினருக்கு இது ஏற்படுகின்றது. உடலின் AUTO IMMUNE REACTION என்கின்ற உடல் கலங்களுக்கு எதிர்ப்புச் சக்தி உருவாகும் தன்மையால் - தலைமயிர் உருவாகும் கலங்கள்- தாக்கப் படுவதால் இந்த நோய் ஏற்படுகின்றது.

சிலருக்கு தலைமுடிமட்டுமல்ல - தாடி, உடல் மயிர் என்பனவையும் இந்த வகையில் பாதிக்கப்படலாம். உதிர்ந்த தலைமுடிகள் பல மாதங்களின் பின்னர் திரும்பவும் முளைக்கலாம். என்றாலும் தைராய்ட் சுரப்பு கோளாறு பங்கசு தொற்று என்பன கூட இவ்வகையில் தலைமயிர் உதிர்வதற்கு காரணமாகலாம். எனவே ஒரு தோல் சிகிச்சை நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது விரும்பத்தக்கது.

கே: ஆண் வயது 32- காலையிலும், மாலையிலும் இருதடவைகள் மலம் கழிகின்றது. இது கடந்த ஐந்து வருடங் களாக இருக்கின்றது. பரிகாரம் கூறவும்:-

ப. உணவு இரைப்பையில் சேர்ந்ததும் - மலம் கழிக்கும் உணர்வு ஏற்படுவது இயற்கையானதே. PERI-STALSIS. என்கிற குடல் இயக்கம் காரணமாக உணவு, உணவுக் குழாய்கள் ஊடாக செலுத்தப்படுகின்றது. ஏதாவது, உணவு இரைப்பையை அடைந்ததும் இந்த குடல் இயக்கம் ஆரம்பமாகிறது. இந்த வேளையில் தான் மலம் கழிக்கும் உணர்வு ஏற்படுகிறது.

உண்மையில் இந்த உணர்வு ஒரு PRIMITIVE URGE என்னப்படுகின்ற ஜீவராசிகளுக்கே உரித்தான உடலியக்கம். இதனால்தான் பிறந்த குழந்தைகள் பால் அரு தும்போது - தாயின் மடியிலேயே மலம் கழிக்கும் நிலை ஏற்படுகிறது.

நாகரிக வளர்ச்சி, காலத்தின் தேவைகளால் நாம் இந்த உணர்ச்சியை கட்டுப்படுத்தி, எமக்கு வசதியாக காலையில் மாத்திரமே மலம் கழிய வழிவகுக்கின்றோம் என்றாலும் ஒரு சிலருக்கு காலையில் கோப்பி குடித்தால் தான் மலம் கழிக்கலாம் என்ற நிலை ஏற்படுவதும் இந்த இயக்கத்தால் தான்.

நீங்கள் பல வருடங்களாக - காலையிலும், மாலையிலும் மலம் கழிப்பதை பழக்கப்படுத்திக் கொண்டு இப்போது வழக்கமாக்கி விட்டீர்கள் என்று சொல்லுகின்றேன். இது இப்போது ஒரு OBSESSION என்கின்ற மனோ நிலையை உருவாக்கி விட்டது. ஒரு நாளைக்கு இப்படி உங்கள் வழக்கம் மாறினால் - அதாவது இரு தடவைகள் மலம் கழியாவிட்டால் - பசியின்மை, வயிற்றுப் பொருமல், குணாதிசயமாற் றங்கள் எல்லாம் ஏற்படும். இதனை PSYCHOSOMATIC மாற்றங்கள் என்றும் கூறலாம். அதாவது, மனோ நிலையால் ஏற்படும் நோய்க்குறிகள் என்பது அதன் கருத்து.

எனவே காலை மாலை இத்தடவைகள் மலம் கழிப்பது பெரும் சிரமங்களைத் தருமே ஒழிய - நோயாக- உங்கள் விஷயத்தில் இருக்கமாட்டாது என்று நம்புகின்றேன். சில மனோ வைத்திய நிபுணர்களின் உதவியுடன் - சூழ்நிலை ஹிப்நாடிசம் வகையில் - (DEEP-HYPNOTISM ) உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். எதற்கும் மலப் பரிசோதனை, COLONOSCOPY என்கின்ற பெருங்குடலில் குழாய் செலுத்தி நேரடியாக பரிசோதிக்கும் பரிசோதனை என்பவைகளை செய்து பார்ப்பதும் விரும்பத்தக்கது.

கே: பெண் - வயது 19. பருவம் அடைந்து நான்கு வருடங்களாகின்றன. கடந்த இரண்டு வருடங்களாக மாதவிலக்கு ஏற்படும்போது வயிற்று வலி ஏற்படுகின் றது. வைத்தியர்களிடம் காட்டினேன். அவர்கள் தந்த மருந்துகளுக்கு வலி அதிகமாக இருக்கின்றது. பரிகாரம் கூறவும்.



ப: உங்களுக்கு ஏற்பட்டுள்ளது -DYSMENNORHOEA என்கின்ம் வலியோடு; கூடிய மாத விலக்கு. உலகில் 75 வீதமான பெண்கள் மாதவிலக்கு காலங் களிலோ அல்லது மாதவிலக் குக்கு முன்பாகவோ - வலி, வயிற்று பிசைதல், வாந்தி, தலைவலி போன்றவைகளால் பாதிக்கப் படுகின்றார்கள். மாத விலக்கின்போது சுரக்கும் ஹோர்மோன்களின் தாக்கத்தினால் இந்த குணங்கள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில்- கருப்பையின் வாசல் சிறுத்து இருந் தாலும் கருப்பை சுவர்களில் கட்டிகள் இருந்தாலும் FIBROIDS வலியோடு கூடிய மாதவிலக்கு ஏற்படலாம்.

உங்கள் விஷயத்தில் மாதவிலக்கு ஆரம்பித்த காலத்தில் - கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஏதுவித பிரச் சினையும் இல்லாமல் இருந்து விட்டு சமீபகாலமாக இந்த வலி ஏற்பட்டிருப் பதால் ஒரு சில மருத்துவ பரிசோத னைகள் அவசியமாகின்றன. முக்கியமாக - SCAN பரிசோதனையைக் குறிப்பிட லாம். இந்தப் பரிசோதனையில் கருப்பை கட்டிகள், சூலகக்கட்டிகள் கண்டறியப்படலாம். அவற்றுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் குணம் பெறுவீர்கள். எதுவித காரணமும் காணப்படவில்லை எனில் ஒரு சில பெண்களுக்கு திருமணமாகி ஒரு குழந்தை பெற்றவுடன் - இந்த மாத விலக்கு வலி இல்லாமல் போவதுண்டு. கருப்பை வாசல், பிரசவத்தின்போது விரிவடைவதால்- இப்படியான வலி குணமாகின்றது என்று மருத்துவர்கள் நம்புகின்றார்கள்.

எதுவித காரணமும் கண்டறியப் படாத விடத்து, மாதவிலக்கு ஆரம்பிப் பதற்கு முன்னர் - வலிபோக்கும் மாத்திரைகளை உதாரணமாக, IBUPROFEN, MEFNAMIC ACID மாத்திரை களை உபயோகிப்பதன் மூலம் - குணம் காணலாம்.

***கே: பெண் வயது 20. கடந்த ஐந்து வருடங்களாக பெண் உறுப்பின் ஒரு பக்க வாசலில் கட்டி போல் அடிக்கடி தோன்றும். அவ்வேளைகளில் தாங்கிக் கொள்ளா வலியும், காய்ச்சலும் இருக்கும். மருந்து எடுத்தால் மாறிவிடும். நான் திருமணமாகாத பெண். எதுவித ஆண் தொடர்பும் அற்றவள். எனக்கு இப்படி ஏற்பட்டது ஏன்?***

ப: யோனி வாசலில் இருபுறங்க ளிலும் உள்ள சுரப்பிகள் பார்த்தொலின் BARTHOLINS என்று அழைக்கப்படும். இந்த சுரப்பிகளில் தொற்றுகள் ஏற்பட்டால் அவை வீங்கி, சீழ்பிடித்து வேதனை தரும். ANTIBIOTICS மருந்துகள் இந்த வேதனையையும் வீக்கத்தையும் குறைக்கும். இப்படி அடிக்கடி ஏற்பட்டால் சுரப்பிகள், CYST எனப்படும் சீழ் நிறைந்த பைகளாக மாறும். இவற்றை சத்திரசிகிச்சை மூலமே குணப்படுத்த முடியும்.

இப்படி சுரப்பிகள் வீங்குவதற்கு பாலியல் தொடர்போ, பால்வினை நோய்களோ காரணமில்லை. சுகாதாரமாக, சுத்தமாக- ஜனன உறுப்புகளை பேணாமல் இருப்பது ஒரு காரணம். மற்றது - நமது உடம்பில் எதிர்ப்புச் சக்தி குறையும் போது, இப்படியான இடங்களில் இலகுவாக தொற்று ஏற்படும். எனவே மனதை அதிகம் அலட்டிக் கொள்ளாமல் ஒரு பெண் நோயியல் (GYNAECOLOGIST) நிபுணரின் ஆலோசனையை நாடவும்.

கே: ஆண் வயது 30. அடிக்கடி வயிற்று வலி வரும். வைத்தியரிடம் காட்டினேன். அவர் ஸ்கான் எடுத்து சிறுநீரகத்தில் கல் இருப்பதாகக் கூறினார். கல் பெரிதாக இருப்பதால் 'கரண்ட்' மூலம் தான் உடைக்கலாம் என்கின்றார். எனக்கு பயமாக இருக்கின்றது. விளக்கம் தருக.

ப: சிறுநீரக கற்கள் - மிளகு அளவில் இருந்தால், மருந்துகள் மூலம் அவற்றை வெளியேற்றிவிடலாம். அதைவிட பெரிதான கற்களை உடைத்து சிறிய துண்டுகளாக்கி வெளியேற்றும் சிகிச்சையை- EXTRA CORPOREAL SHOCK WAVE LITHORIPSY (ESWL) என்று குறிப்பிடுவார்கள். இந்த சிகிச்சை செய்யும் கருவி மூலம் அதிர்வு அலைகளை உற்பத்தி செய்து சிறுநீரகத் தில் உள்ள கற்கள் மேல் பாய்ச்சுகின் றார்கள். கற்களை வெடிவைத்து உடைப்பது போல்- இந்த அதிர்வு அலைகள் சிறுநீரக கற்களை உடைத்து சிறு சிறு துகள்களாக்கி சிறு நீரில் வெளியேற உதவுகின்றன.

இந்த சிகிச்சையைத் தான் - கரண்ட் மூலம் உடைப்பது என்று உங்கள் டாக்டர் குறிப்பிட்டு இருக்கின்றார். இந்த சிகிச்சையில் எதுவித சத்திர சிகிச்சை வெட்டுகளோ கீறும் முறைகளோ இல்லை. இதனால் பயமின்றி இந்த சிகிச்சையைச் செய்யலாம். இப்பொழுது கொழும்பு தனியார், அரசவைத்திய சாலைகளில் தான் இந்த சிகிச்சை முறை வசதி உள்ளது.

---

இன்றைய நாகரிக உலகில் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி சிலர் இளவயதிலேயே வயதுக்கு மீறிய பருத்த உடலைப் பெற்றிருப்பார்கள்.

இதற்குக் காரணமென்ன?

✱ முதலில் உணவுப் பழக்கவழக்கத்தில் நாம் முறையாக உணவுகளைச் சாப்பிடாததே காரணம்.

✱ இரண்டாவது நாம் நாக்கிற்கு அடிமைப்பட்டு ருசிக்காக உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாத அல்லது உடம்பு ஏற்றுக்கொள்ளாத உணவு வகைளைத் தொடர்ந்து சாப்பிடுதல்.

✱ மூன்றாவது நேரத்திற்கு உணவை சாப்பிடாது நேரம் கடந்து உணவைச் சாப்பிடுவது.

✱ நான்காவது எளிதில் ஜீரணம் ஆகாத உணவு வகைகளைத் தொடர்ந்து சாப்பிடுவ்து.

✱ ஐந்தாவ்து மாவுப் பொருட்களான உண்வு வகைகளை அதிகமாகச் சாப்பிடுவது.

✱ ஆறாவது எண்ணெய்ப் பலகார வகைகளை அதிகமாகச் சாப்பிடுவது.

✱ ஏழாவது தினமும் உடற்பயிற்சி செய்யாமல் இருப்பது.




பொதுவாக 10 வயது முதல் 30 வயது உள்ளவர்களைப் பார்த்தால் அளவிற்கு மீறி உடல் இருக்கும், இவர்களால் வேலை செய்ய கடினமாக இருக்கும், மாடிப் படிகளில் ஏறி இறங்க சிரமமாக இருக்கும், அதிக தூரம் நடக்க சங்கடப்படுவார்கள், மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும்.

இப்படியான திருமணமான பெண்கள் தமது குழந்தைகளை வளர்க்க, வீட்டு வேலைக ளைச் செய்ய, தாம்பத்திய உறவில் ஈடுபட என்று எல்லா விஷயங்களிலும் ரொம்பவே சங்கடப் படுவார்கள். இல்லற வாழ்வே சோகமயமாக இருக்கும். அதைப்போல திருமணமான ஆண்கள் வேலை செய்ய, கடினமாக உழைக்க, தாம்பத்திய உறவில் ஈடுபட என்று அவர்களும் சங்கடப்படுவார்கள். தாம்பத்திய உறவிலும் விரிசல்கள் ஏற்படும்.


இப்படிப்பட்ட பிரச்சினையில் உள்ள வர்கள் உணவில் அளவைக் குறைக்கின்றேன் என்றும் பட்டினி இருந்தால் உடல் எடை குறைந்துவிடும் என்றும் இருந்து மேலும் பல பிரச்னைகளுக்கு ஆளாகிவிடுகிறார்கள்.

ஒவ்வொருவரும் தங்களது உடல்நிலைக்கு ஏற்ப உணவுப் பழக்க வழக்கத்தை கடைப் பிடித்து வந்தால் இயற்கையாகவே உரிய எடைக்கு மாறிவிடலாம். இதற்கு முதலில் தினமும் எளிய உடற்பயிற்சி அரை மணி நேரமாவது மேற்கொள்ள வேண்டும். உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருந்து வந்தால் நமது உடலில் உள்ள கசடுகள், ஊளைச்சதைகள் கெட்ட பித்த நீர்கள் படிப்படியாகக் குறைந்துவிடும்.

உணவு வகைகளில் தினமும் ஏதாவது ஒரு கீரை வகையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பழமும் ஏதாவது ஒன்று தினமும் உட்கொள்ள வேண்டும். எளிதில் ஜீரணமாகாத உணவு வகைகளான மாவுப் பண்டங்கள், எண்ணெய்ப் பண்டங்கள், கொழுப்புப் பண்டங்களை அறவே தவிர்க்க வேண்டும். சாதத்தின் அளவு 1 கப். காய்கறிகள் 2கப் என்கின்ற அளவில் உட்கொள்ள வேண்டும். தினமும் 20 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

# கலக்கல் பக்கீன்

## அப்படி என்னதான் உறவு?



கல்லறை ஒன்றின் முன்னால் ஒருவர் ''நீசெத்திருக்கவே கூடாது நீ செத்ததினால் தான் நான் எவ்வளவு கொடிய துன்பங்களை அனுபவிக்கிறேன் தெரியுமா? என்வாழ்க்கையே நரகமாகிவிட்டது. நீ சாகாமல் இருந்திருக்கக் கூடாதா?'' என்று கூறி அழுதுகொண்டிருந்தார்.

அங்கு வந்த வழிப்போக்கர் ஒருவர் அவரைப்பார்த்து இரக்கப்பட்டார். அவருக்கு ஆறுதல் சொல்ல நினைத்தார். அவரின் அருகே வந்து ''இறந்து போனவர் உன் தந்தையா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றார் அவர்.

''மகனா'' என்று கேட்டார் வழிப்போக்கர்.

அதற்கும் ''இல்லை'' என்றார் அவர்.

வியப்படைந்த வழிப்போக்கர், ''இறந்துபோனவர் உனக்குத் தந்தையும் இல்லை மகனும் இல்லை என்கிறாய். எதற்காக இப்படி அழுது புலம்புகிறாய்? இறந்தவர் உனக்கு அப்படி என்னதான் உறவு?'' என்று கேட்டார்.

அதற்கு அவர் ''இறந்துபோன இவர் என் மனைவியின் முதல் கணவர்'' என்று அழுதுகொண்டே சொன்னார்.




சீனாவின் ஷின்ஜியாங் பகுதியில் சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மணல் சிற்பக் கண்காட்சியில் மணலினால் அமைக்கப்பட்ட பிரமாண்டமான கடல்கன்னி சிற்பத்தை ஆர்வத்துடன் பலரும் கண்டுகளிக்கின்றனர்.

## தத்துவம்

**மரம்:**
இதன்மேல் மனிதன் ஏறலாம். ஆனால் மனிதனின் மேல் இது ஏறலாமா?


**செருப்பு:**
இது காலில் தான் இருக்கும். ஆயினும் எல்லை மீறினால் கைகளிலும் இருக்கும்.

**போதை:**
இதை நீ தேடிச்செல்லாவிட்டால் நீ மேதை. இதற்கு அடிமையாகி விட்டால் நீ பேதை.

**சினிமா:**
வாழ்க்கையை இது பிரதிபலிக்கலாம். இதை வாழ்க்கை பிரதிபலிக்கக்கூடாது.

**செயின்:**
தங்கச்செயினை உருக்கினால் தங்கம் கிடைக்கும். சைக்கிள் செயினை உருக்கினால் சைக்கிள் கிடைக்குமா?

**கடன்:**
கோடீஸ்வரன் வீட்டுப்பிள்ளையாக இருந்தாலும். கணக்குப் பாடத்தில் கடன்வாங்கித்தான் ஆகவேண்டும்.




சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற தொழில்நுட்பக் கண்காட்சியில் இடம்பெற்ற கணினி உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மோனாலிஸாவின் உருவம் பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்தது.




ஜேர்மன் தலைநகர் பேர்னில் புத்தகங்கள் அடுக்கப்பட்டது போன்று அனைவரையும் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சிலையே இது.

## சிரியுங்கள்...






## நாடே போற்றும்




விமானத்தில் பயணம்செய்து கொண்டிருந்த இரண்டு மோசடிப்பேர்வழிகள் தமக்குள்ளே பேசிக்கொள்கின்றனர்.

''1000ரூபாவை விமானத்தில் இருந்து கீழேபோட்டால்அதனை எடுப்பவன் என்னைப் போற்றுவான்'' என்றான் ஒரு மோசடிப்பேர்வழி. அதற்கு மற்றையவன் ''இல்லை 1000 ரூபாவை 10ரூபா நாணயமாக மாற்றி கீழே போட்டால் 100பேர் என்னைப் போற்றுவார்கள்'' என்றான். இதனைக்கேட்டுக்கொண்டிருந்த விமானி

''உங்கள் இருவரையும் தூக்கி கீழே போட்டால் இந்த நாடே என்னைப் போற்றும்'' என்றார்.




# நவீன கம்ப்யூட்டர்



அமெரிக்கா ஒரு புதுமையான கம்ப்யூட்டரைக் கண்டுபிடித்து இதுதான் உலகின் சிறந்த கம்ப்யூட்டர் என்று அறிமுகம் செய்ய ஜப்பானில் உள்ள விஞ்ஞானிகள் வேறொரு கம்ப்யூட் டரை உருவாக்கி உலகின் சிறந்த கம்ப்யூட்டர் இதுதான் என்று வாதிடுவார்கள். கம்ப்யூட்டர் விஞ்ஞானிகளின் இவ்வாறான ஆரோக்கியமான போட்டியால் உலகம் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

இவ்வாறு விஞ்ஞானிகள் ஒவ்வொருவரும் கம்ப்யூட்டரில் புதுமைகளைப் புகுத்திவரும் இவ்வேளையில் இப்போது மிகப் புதுமையான கம்ப்யூட்டர் ஒன்றை உருவாக்குவதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

கம்ப்யூட்டரின் நினைவுத்திறன், திரையின் அமைப்பு, வேகம் போன்றவற்றில் அவர்கள் புதுமையைப் புகுத்தவில்லை. மாறாக சூரியஒளியால் இயங்கும் கம்ப்யூட்டரை உருவாக்கி உள்ளனர்.

சூரிய ஒளியில் இயங்கும் கல்குலேட்டரின் செயற்பாடுகளை மையமாகக்கொண்டே இந்தக் கம்ப்யூட்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில் நுட்பம் நோட்டுப்புத்தக கம்ப்யூட்டரில் புகுத்தப்பட்டுள்ளது.

நோட்டுப்புத்தகக் கம்ப்யூட்டரை நாம் எளிதாக எந்த இடத்துக்கும் எடுத்துச்செல்ல முடியும். நாம் எடுத்துச் செல்லும் இடமெல்லாம் மின்சாரம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. கம்ப்யூட்டரின் மீது சூரிய ஒளி பட்டாலே போதும். அந்த ஒளியை உள்வாங்கி தன்னை இயக்கும் ஆற்றல் படைத்தது இந்தக் கம்ப்யூட்டர்.

நவீன தொழில்நுட்பக் கருவிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் வேகம்மிக்க செயல்பாடும் அதிக நினைவுத்திறனும் கொண்டதாக இந்தக் கம்ப்யூட்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது; எடுத்துச் செல்வதும் எளிது.

சூரிய ஒளியில் இயங்கும் இந்தக் கம்ப்யூட்டர் தைவான் நாட்டில் இடம்பெற்ற நவீன தொழில்நுட்பக் கண்காட்சியில் இடம்பெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் கலந்துகொண்டு தமது நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட கம்ப்யூட்டர்களை பார்வையாளர்களுக்கு அறிமுகம் செய்தன. இதில் சூரிய ஒளியில் இயங்கும் கம்ப்யூட்டர்தான் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்னணு காகிதம்



படத்தில் நீங்கள் பார்ப்பது எலக்ட்ரோனிக் பேப்பர் என்று சொல்லப்படுகிறது. எதிர்காலத்தில் பயிற்சிப்புத்தகங்களுக்குப் பதிலாக மாணவர்கள் இந்தக் கருவியை மட்டும் பாடசாலைக்கு கொண்டு சென்றால் போதும். இது இயங்க மின்சாரம் தேவையில்லை. இதில் இணைக்கப்பட்டுள்ள பட்டரிமூலம் இது செயல்படும்.

ஒரு புத்தகத்தில் உள்ள 'பாடங்கள் அனைத்தையும் இதில் பதிவுசெய்துவைக்க முடியும். இதில் உள்ள கருவிகளை இயக்குவதன்மூலம் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவதுபோல அடுத்தடுத்த பக்கங்களில் உள்ள பாடங்களை மாணவர்கள் படிக்க முடியும். மேலும் இதில் வீடியோ, ஓடியோ சாதனங்களையும் பொருத்த முடியும். .இனிமேல் நிலா நிலா ஓடிவா பாடலை குழந்தைகள் இந்த மின்விசை காகிதத்தின் மூலம் பார்க்கலாம். கேட்கலாம்.

# விஷ எறும்புகள்

எறும்பு கடித்தால் லேசான வலி ஏற்படும். சில நேரம் கடித்த இடம் வீங்கும்.

ஆனால் அவுஸ்திரேலியாவில் காணப்படும் 'பிளாக் புல்டாக்' என்ற எறும்பும் அமெரிக்காவின் தெற்கு பகுதியில் காணப்படும் 'பயர் ஆன்ட்' என்னும் எறும்பும் கடுமையான விஷம் கொண்டவை. பிளாக் புல்டாக் கடிக்கவும், கொட்டவும் செய்யும். இதன் விஷம் உடலில் ஏறினால் காய்ச்சல், தலைவலி வந்து விடும்.

இதைவிட மோசமான எறும்பு இனம் 'பயர் ஆன்ட்'. இந்த எறும்பு ஊசி போன்ற தன் கொடுக்கால் கொட்டும். 25 வினாடிகளுக்கு பின்னர் கொடுக்கை உடலிலேயே விட்டு விடும். அப்போது உடலில் விஷம் இறங்கும். இந்த எறும்பு கொட்டினால் அதன் விஷம் உடலில் புகுந்து இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விடும். இதனால் தோல் நோய் ஏற்படும்.

# அறிவியல் துணுக்குகள்

## ஒளியும் ஒலியும்!

ஒளியின் திசை வேகம், விநாடிக்கு $3 \times 10^8$ மீட்டர்.
ஒலியின் திசைவேகம், காற்றில் விநாடிக்கு 330 மீட்டர்.
ஒலிவேகம் நீரில் விநாடிக்கு 1450 மீட்டர்.
ஒலிவேகம் இரும்பில் விநாடிக்கு 5000 மீட்டர்.
ஒளி பரவ ஊடகம்தேவையில்லை, ஒலி பரவ ஊடகம் தேவை.
ஒளி அலைகள் குறுக்கலைகள் (Transverse waves).
ஒலி அலைகள் நெட்டலைகள்(Longitudinal waves)
ஊடகத்தின் அடர்த்தி அதிகரித்தால் ஒலியின் வேகமும் அதிகரிக்கும்.
ஒலி அதிர்வெண்ணின் (Frequency of sound) அலகு ஹேட்ஸ்.
ஒலிச்செறிவின் (Intensity of sound) அலகு டெசிபல் (Decibel).
நம் காதுகள் கேடகவல்ல ஒலி அதிர்வெண் 20-20000 ஹேட்ஸ்.
20000 ஹேட்ஸுக்கு மேற்பட்ட ஒலி அல்ட்ராசோனிக் ஒலி.
வெளவால்களுக்கு அல்ட்ராசோனிக் ஒலியைக் கேட்கும் சக்தி உண்டு.
ஒரு சாதாரண உரையாடலின் ஒலிச்செறிவு 60 டெசிபல், முணுமுணுத்தல் (Murmur) என்பது 20 டெசிபல்.
ஜெட் விமானம் கிளம்பும்போது ஏற்படும் இரைச்சல் 140 டெசிபல்.
90 டெசிபலுக்கு மேற்பட்ட ஒலி, ஒலிமாசு எனப்படுகின்றது.
இசைக் கருவிகள் மூன்று வகை. அவை தோல்கருவிகள், கம்பிக்கருவிகள், காற்றுக்கருவிகள்.
ஒளிச்சிதறல் (Scattering of light)பற்றிய சர்.சி.வி.ராமனின் கண்டுபிடிப்புக்கு ராமன் விளைவு (Raman Effect)என்று பெயர்.
ஓர் அறையில் எதிரொலி கேட்க வேண்டமானால் அறையின் நீளம் குறைந்தபட்சம் 17 மீட்டர் இருக்க வேண்டும்.
மழைக்காலத்தில் காற்றில் ஈரப்பதன் அதிகம் இருப்பதால் நீண்ட தொலைவுக்கு ஒலியை கேட்கலாம்.

# செல்போன் அதிசயம்

சகல வசதிகளும் இனி கையடக்கத் தொலைபேசியிலேயே என்று சொல்லும் அளவுக்கு நவீன கையடக்கத் தொலைபேசிகள் தயாரிக்கப்பட்டு விட்டன.

காரில் போய்க்கொண்டே தொலைபேசியில் பேச முடியுமா? நடந்துகொண்டே தொலைபேசியில் அழைக்க முடியுமா? இதுபோன்ற பல கேள்விகள் கையடக்கத் தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டபோது கேட்கப்பட்டன. புருவங்களை உயர்த்தி நாம் அதிசயித்தோம்.

ஆனால் 'செல்'லில் தொடர்பு கொள்ளுங்கள். எஸ். எம். எஸ். அனுப்புங்கள்- என்று கூறும் அளவுக்கு உலகம் முன்னேறி விட்டது.

இப்போது இவற்றையெல்லாம் தாண்டி செல்போனிலேயே வியாபாரம் , கிரிக்கெட்ஸ் கோர், பங்குச்சந்தை நிலைவரம், வங்கிக்கணக்கு- இவ்வாறு எத்தனையோ வசதிகள் வந்துவிட்டன. ஜப்பானில் இப்போது அதி நவீன வசதிகளுடன் கையடக்கத் தொலைபேசிகள் வந்துவிட்டன; வந்துகொண்டிருக்கின்றன.



ஜப்பானில் ஆண்டுக்கு 4 கோடியே 50 லட்சம் கையடக்கத் தொலைபேசிகள் விற்பனையாகின்றன. சமீபத்தில் ஜப்பானிய நகரங்களில் ஏழு அலைவரிசைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தமது கையடக்கத் தொலைபேசிகளில் கண்டு கழிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் ஜப்பானியர்கள்.

இன்னொரு அதிசயம். நீங்கள் சங்கீதக் கச்சேரி விளம்பரமொன்றை வீதியோரத்தில் பார்க்கிறீர்கள். அதில் உள்ள பார்கோட் (BAR CODE)ஒன்றை கையடக்கத் தொலைபேசியில் தட்டிவிட்டால் போதும். அது உடனே உங்களை அந்த கச்சேரி சம்பந்தமான இணையத்தளத்துக்கு அழைத்துச்சென்று எவ்வளவு இருக்கைகள், எந்தெந்த வகுப்பில் இருக்கின்றன, கச்சேரி எத்தனை மணிக்கு, டிக்கெட்டுகள் என்ன விலையில் இருக்கின்றன, யார் யார் பங்குகொள்கிறார்கள் போன்ற விவரங்கள் எல்லாவற்றையும் தருகிறது. நீங்கள் அதனூடாக உங்கள் டிக்கெட்டையும் புக்செய்துவிடலாம்.

மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால் பெரிய நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் உள்ளே செல்வதற்கு அடையாள அட்டையையோ அல்லது சாவியையோ பயன்படுத்தத் தேவையில்லை. கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தியே உள் நுழைய முடியும்.

மற்றும் உங்கள் அலுவலகத்தில் இருக்கிறீர்கள். உங்கள் குழந்தைகள் பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் அதுபற்றிய தகவல்கள் உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு வந்துவிடும். நீங்கள் காரியாலயத்தில் இருந்தபடியே அந்த தொலைபேசி உடாக வீட்டுக்கதவைத் திறந்துவிட முடியும்.

உலகமே உங்கள் கையில். வணிக உலகம். பொழுதுபோக்கு உலகம். அரசியல் உலகம். இப்படி எல்லாவற்றையுமே உங்கள் விரல் நுனியில் கொண்டுவந்து சேர்த்துவிட்டது விஞ்ஞான உலகம். இனி உங்கள் வீடே உலகம் தான்.

# கவிதைப் புனல்

## சுமைதாங்கிகள்

சுமையாகிப் போனதால்
மூலைக்கு மூலை முதியோர் இல்லங்கள்
முகிழ்த்து நிற்கின்றன!

இயலுமட்டும் சர்க்கரையை உறிஞ்சிவிட்டு
இணையோடு சேர்ந்த பின்னர்
இப்போது நிராகரிக்கின்றார்கள்!

இன்று நீங்கள் துருத்தோலைகளாய்
காவோலைகளைக் கொளுத்துகிறீர்கள்
நாளை உங்கள் பிள்ளைகளும்
இதையேதான் செய்ய
வழிகாட்டி நிற்கின்றீர்கள் என்ற
பிரக்ஞை இல்லையா உங்களிற்கு?

*சு.மதன்,*
*பூநகரி.*

## தூறல் நின்று போகவில்லை.....

ஆண்ட காலங்கள் - எம் உயிர்
மீண்ட காலங்கள் - இன்றும்
முற்றுப் பெறவில்லை - மாறாக
முளை விடுகின்றது...

சிங்கள அராஜகத்தின்
அந்தரங்க அரசியலும்
தந்திர உத்திகளும்
முன்னுக்குப் பின் முரணானவை

இலங்கைத் - தீவில்
இன்றும் - நின்று போகவில்லை
இரத்த வரலாற்றுப்
பின்னணி

முன்கையில் சமாதான
ஏடு - ஏந்தி
பின் கையில் - போர் முனைக்கு
ஆயுதம் கேட்கும் - ஆட்சி

அம்மாவோடு - அன்று
நின்று - போகவில்லை
ஐயாவோடும் - இன்றும்...
தொடர்கிறது

*மல்லிகைவாணன்,*
*திருமலை.*

## காதலியே



காமத்தின் காதலி
கால் முளைத்த நிலவு
கண்கள் மட்டும்
கொல்லும்!
வார்த்தைகள்
அதையும் வெல்லும்!
வீணை இல்லாமல்
இசை தருவாய்
கூந்தலில்......
விளையாடி
சாகடிப்பாய் உன்
விரல்களால்.....
நுகரும் பூவினம்!....
நுகர்ந்து நுழைவாயிலே
நுகத்திலும் கொடுமை
நீ கோபித்துக் கொண்டால்
உனக்கான உவமைகள்
இங்கில்லை
சொல்லாமல் சொல்லலாம்
நீ ஒரு பொன் மின்னை
என்னை
கொல்லாமல் கொல்லும்
பெண் முல்லை

*காயா,*
*கொழும்பு.*

## மனிதனுக்கு...!

பார்வையில் மட்டுமல்ல
பண்பிலும் மனித
ஜாதியாயிரு
முகத்தோற்றத்தை
மட்டுமல்ல
அகத்தோற்றத்தையும்
அழகுபடுத்து
கல்வியில் மட்டுமல்ல
ஒழுக்கத்திலும்
சிறந்துவிளங்கு
உன்னை மட்டுமல்ல
நின் அயலானையும் நேசி
வீட்டை மட்டுமல்ல
நாட்டையும் காத்துநில்
பொருளை மட்டுமல்ல
அருளையும் தேடிக்கொள்.

*அ.யாழினி*
*மட்டக்களப்பு.*

## மரணப் படுக்கையில்

பூத்துச் சிரித்த மலர் புழுதியில் கிடந்தது
நேற்றுப் பார்த்த முகம் சிதைந்து கிடக்கின்றது
பார்த்துப் பழகிய கண்கள் விரிந்து கிடக்கின்றன
காத்திருக்கும் பெற்றோர் கனவைக் கலைத்தது

சதி செய்து இருளானது வாழ்க்கை
கதி அற்றுப் போகின்றது மனிதம்
விதி வந்து தன் போக்குப் போகுமே
நதி போல் துன்பம் வந்து சேர்ந்ததே!

*வரகுணன்.*

## பாலைவனப் பூக்கள்

இப்பொழுது என்
பாலைவனங்கள்
நம்பிக்கைப் பூப்பூக்கின்றன
ஆனால் நானோ
இத்தனை நாளும்
சாம்பல் மேடாய்க்கிடந்த
இதயத்தில் துளிர்விட்ட
நம்பிக்கைப் புல்வெளியும்
கருகுவதாய் உணர்கிறேன்

என் தேசத்து முட்செடிகளில்
இரத்தம் காய்ந்து விட்டதாகவும்
ஓநாய்களின் காலடித்தடம்
அழிந்து வருவதாகவும் நினைத்தேன்
இல்லவேயில்லை

விடுதலை வானம்
விரித்திருப்பதாய் நினைத்தேன்
எனினும் இப்பொழுது
இறக்கைகள் கனக்கின்றன
இந்த மண்ணில்
எம்மைச் சுற்றியும்
அறுபடாத முடிச்சுக்கள்
எம் கை விலங்குகள் உடைந்து
கழுத்தில் இறுகுகின்றன

சமாதான வானில் சரசமாடியபடி
காத்திருக்கின்ற கழுகுகள்
என் தேசத்தில் சுதந்திரம்
இருப்பதாகவும் இல்லாததாகவும்
கண்ணாமூச்சி ஆடுகிறது
ஆனால்
என் பாலைவனப் பூக்களோ!
முட்கம்பிகளுக்குள்
தலைகளை ஆட்டியபடி
இதுதான் சுதந்திரமென
மௌனப் புன்னகை புரிகின்றன

*ஏ.நிர்ஷியன்,*
*விசுவமடு.*

## தவிருக்கிறேன்

தென்றலாய் வருடிய - நீ
புயலானது ஏன்
றோசா இதழாகிய - நீ
முட்களாகியது ஏன்
பனியாக படர்ந்த - நீ
நெருப்பாகியது ஏன்
சுகமாகவிருந்த - நீ
வலியாகியது ஏன்
தித்திப்பாகிய - நீ
இயங்கமறுப்பது ஏன்
என் இதயத்தை
வேலால் துளைத்த
உன்னை
புரிந்துகொள்ளமுடியவில்லை
புரிந்து கொள்ளடி - உன்
வரவுக்காக தினமும்
தவமிருக்கின்றேன்

*சி.சிவா,*
*முகமாலை தெற்கு.*

## முழுமையான இனம்

காகம் கேட்கின்றது?
ஓ..... மனிதா
கூவும் என்பதற்காக
கூடு கட்டத் தெரியாத
குயிலை நேசிக்கலாமா?
குயிலுக்கு தாய்மை
தெரியுமா?
பொறுப்பை உணருமா?
கரைந்தாலும் நாம்
முழுமையான இனம்
புரிந்து கொள்வாயா?

*அ.அசோக்,*
*வேலணை.*

## கவனி மக்களே!

அப்பாவி மகனை பிடித்து
அடித்து அவன் இடுப்புடைத்து
செவிகளினுள் பேனாவைத்து
அடித்து
தலையோடு கழுத்துக்கு சொப்பிங்
பை
போட்டுப் பிடித்து
கால்களுக்கு விலங்கு பூட்டி
பிஞ்சு விரல்களுக்கு குண்டூசி குத்தி
கவனி மக்களே!

தலைக்கு புத்தகம் வைத்து அடித்து
தரையில் போட்டு மிதித்து
தாகத்திற்கு உப்புத்தண்ணீர்
கொடுத்து
தண்ணீரினுள் தலையை அழுத்தி
கவனி மக்களே!

காயங்களுக்கு மிளகாய் தூள்
போட்டு
கயிற்றில் தொங்க விட்டு
கதறக் கதற காலால் உதைத்து
சுடுமணலில் போட்டு
கவனி மக்களே!

மரணப் படுக்கையில் கிடக்க
மறுபடி மருந்து எடுக்க
மன்னிப்புக்கு இடம் இல்லை உடல்
மறைப்பு உடைகளை அவிழ்த்து
மானம் கெட்ட சித்திரவதை செய்து
கவனி மக்களே!

ஆயுதங்கள் இல்லாமல் கூட
இச் சமூகம் சித்திரவதை செய்வதை
கவனி மக்களே!

*ச.ஆனந்தராஜி,*
*களுத்துறை சிறை.*

## காதல்

காதலே - என்
கண்ணீர்கடல் வற்றிவிட்டது
இனி எங்கே தண்ணீர்குடித்து
உன் தாகம் தீர்க்கப் போகிறாய்.

*இ.கெங்கா*
*தருமாபுரம்.*

## விதி

கனவுகளில் ஒன்றாக
வாழ்ந்தோம்
காலை சந்திப்பில் அதையே
கதைப்போம்
இன்று என்னை ஏமாற்றிவிட்டு
எங்கோ சென்றுவிட்டாய்
அதுசரி எமக்கு விவாகரத்து
கொடுத்ததுதான் யாரடி?

*உறுமா,*
*யாழ்ப்பாணம்.*

## புன்னகை

வசந்தம் தொலைந்த
என்மனதின்
வாழ்கைவெற்றிடத்தை
எந்தப் புன்னகையால் - இனி
பூரணப்படுத்த முடியும்?

*கே.ராசன்*
*பெரியகுளம்.*

## வெறுப்பு...!

என் குருதிகள் வெளியேற
என் உணர்வுகள் போராட
எனக்கில்லை ஒரு கூடு
இருந்தென்ன உயிரோடு

*இராமலிங்கம் வனஜா,*
*தாளையடி.*

## உயிரே அம்மா

உழைக்கின்றேன் - ஆனால்
உனக்கில்லை
கஞ்சி குடித்தாலும்
காணாமல் போனாலும்
உனக்கில்லை நான்சொந்தம்
இந்த ஈழத்திற்கே சொந்தம்.

*ப.சு.ராஜா*
*திருகோணமலை.*

## கோபம்

கரையை அலை தொட்டால்
யாருக்கும் கவலையில்லை
மலரைதென்றல் தொட்டால்
எவருக்கும்
பொறாமையில்லை
நிலவை முகில் மறைத்தால்
ஒருவருக்கும் கோபமில்லை
உன்னை நான் தொட்டால்
ஊருக்கு ஏன் என் மேல்
கோபம்...?

*கே.ராசன்.*
*பெரியகுளம்.*

### குறுங் கவிதைகள்

எமது அன்புக்குரிய வாசகர்களே! நீங்கள் வழக்கமாக அனுப்பிவைக்கும் கவிதைகளுடன் குறுங்கவிதைகளும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. நான்கு வரிகளுக்கு மேற்படாத உங்கள் குறுங்கவிதைகளை ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள். தரமான கவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க காத்திருக்கின்றது உங்கள் அபிமான சுடர் ஒளி. பிரதி வாரமும் உங்கள் குறுங்கவிதைகள் எங்கள் கவிதைப் புனல் பகுதிக்கு அழகு சேர்க்கும். உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி

குறுங் கவிதைகள்
கவிதைப் புனல்
சுடர் ஒளி,
35, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14



# வயதாகும் போது அதிக அளவு புரத உணவும் உடற்பயிற்சியும் தேவை

இம்முறை எமது அன்றாட உணவில் இடம்பெறும் ஊட்டச் சத்தாகிய புரதத்தினைப் பற்றி ஆராய்வோம். புரதம் அமினோ அமிலங்கள் எனும் அடிப்படை அலகினால் ஆக்கப்பட்டது. 64 விதமான அமினோ அமிலங்கள் புரதத் தொகுப்பில் ஈடுபட்டாலும் அதில் 20 விதமானவை அவசியமான அமினோ அமிலங்கள் என அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவை எமது உடலினால் தொகுக்கப்பட முடியாதவை. உணவினால் மட்டுமே உட்கொள்ளப்படக் கூடியவை. எமது அன்றாட சக்தித் தேவையில் புரதம் 10% - 15% சக்தியினை வழங்குகின்றது.

சாதாரணமாக ஒரு நாளைக்கு 250g புரதம் உடலினால் தொகுக்கப்படுகின்றது. உணவினால் 70g உட்கொள்ளல் போதுமானது. இந்த 70g என்பது மிகத் தரமான புரத உணவாக இருத்தல் வேண்டும். அசைவம் உண்பவர்கள் இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றினோடும், சைவ உணவு மாத்திரம் உண்பவர்கள் துவரம் பருப்பு, பாசிப்பயறு, உழுந்து, காளான், சோயா, சிறகு அவரை, அவரை போன்ற உணவுப் பொருட்களினோடும் தேவையான புரதத்தினை ஈடுசெய்து கொள்ளலாம். இறைச்சி வகைகள் பொதுவாக எல்லாவிதமான அவசிய அமினோ அமிலங்களையும் உள்ளடக்கி இருக்கும். சைவ உணவை உட்கொள்ளும் போது எல்லா விதமான புரத உணவுகளையும் மாறி மாறி உட்கொள்ளும்போதே அவர்களது புரதத் தேவை பூர்த்தியாகின்றது.

வயதாகும்போது உடலினால் தொகுக்கப்படும் புரதத்தின் அளவு குறைகின்றது. இதனால் அவர்களது தசைத் தொகுதிகள் பலவீனமடையும்போது உடல் தொழிற்பாடுகளும் மந்தமடைகின்றன. இதனைத் தடுப்பதற்கு இவர்கள் அதிக அளவு புரத உணவினை உட்கொள்வதோடு உடற்பயிற்சிகளிலும் ஈடுபடல் வேண்டும். சிறுவர்களைப் பொறுத்தவரை அவசியமான அமினோ அமிலங்களை போதியளவு உட்கொள்ளாவிடின் உடல் புரதத் தொகுப்புப் பாதிக்கப்பட்டு அவர்களது விருத்தி வேகம் பாதிக்கப்படும். எனவே எல்லா வயதினருமே தேவையான அளவு புரதத்தினை உட்கொள்ள வேண்டும். சிலர் உடற்பயிற்சியின்போது தசைத் தொகுதியை விருத்தி செய்வதற்காக அதிகளவு செயற்கைப் புரதங்களை உள்ளெடுக்கின்றனர். இது மிகவும் தவறான நடவடிக்கையாகும். தகுதி வாய்ந்த ஒரு வைத்தியரினதோ, ஊட்டவியலாளரினதோ ஆலோசனை இன்றி இவ்வாறு உட்கொள்ளல் ஈரல், சிறுநீரகம் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஏனெனில் தேவைக்கு அதிகமாக உடலில் புரதம் சேரும்போது அது ஈரலில் உடைக்கப்பட்டு, சிறுநீரகத்தினோடு கழிவாக அகற்றப்படுகின்றது. இதனை நைதரசன் சமநிலை பேணல் என அழைப்பர். அதிக செயற்கைப் புரதத்தினை உட்கொள்ளும்போது அது இச் சமநிலையைப் பாதிக்கும். எனவே இவ்வாறு பயன்படுத்துவோர் இது விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும்.




**புரதம் எமது உடலில் பலவிதமான தொழிற்பாடுகளில் பங்கெடுக்கின்றது. அவையாவன**

**1. உடல் கட்டமைப்பினைக் கட்டியெழுப்புவதில் புரதம் பெரும் பங்காற்றுகின்றது. அவையாவன தசைத் தொகுதி விருத்தி, பல், எலும்பு விருத்தி ஆகியனவாகும்.**

**2. உடலிலுள்ள நொதியங்கள் பலவற்றின் கட்டமைப்புக்கூறாக புரதம் காணப்படுகின்றது. நொதியங்கள் உடலின் சமிபாட்டுத் தொழிற்பாட்டிற்கும், சுவாசத் தொழிற்பாட்டிற்கும் மிகவும் அவசியமானவை ஆகும்.**

**3. சில வகையான ஹோமோன்களின் உருவாக்கத்திற்கும் புரதம் அவசியமானதாகும். உதாரணமாக இன்சுலின் ஹோமோன் புரதத்தினாலேயே ஆக்கப்பட்டது.**

**4. உடலின் நீர், கனியுப்புச் சமநிலை பேணப்படுவதிலும் புரதம் பங்களிப்புச் செலுத்துகின்றது.**

**5. உடல் பிற பொருளெதிரியாக்கி (Anti bodies) உருவாக்கம், குருதியில் உள்ள செங்குருதிக் கலங்களின் உருவாக்கம் ஆகியவற்றிலும் புரதம் பங்காற்றுகின்றது.**

அனைத்து புரதங்களுமே அமினோ அமிலங்களால் ஆக்கப்பட்டன. ஒவ்வொரு விதமான அமினோ அமிலங்களும் ஒவ்வொரு விதமான தொழிற்பாடுகளை நிகழ்த்துகின்றன.

ஆர்கினின் (Arginine) என்னும் அமினோ அமிலம் குருதிச் சுற்றோட்டத்தை ஒழுங்குபடுத்துவதிலும், நோய் எதிர்ப்பு சக்தியைப் பேணுவதிலும் பங்காற்றும். அத்துடன் உடலில் நைத்திரிக் அமிலச் சமநிலையைப் பேணுவதிலும் உதவும். இதனை மேலதிகமாக உள்ளெடுக்கும்போது Q10 போன்ற மாத்திரைகளையும் உள்ளெடுக்க வேண்டும். ஆர்கினின் உடலில் கொலஸ்திரோல், LDL போன்ற கொழுப்புகளைக் குறைப்பதனோடு இருதய நோயிலிருந்து பாதுகாப்பளிக்கும். இது மனிதனின் காம உணர்வினைத் தூண்டுவதிலும் உதவும்.

குளுடாமின் (Glutamine) புரதத் தொகுப்பினைக் கூட்டி தசைத் தொகுதி விரக்திக்குப் பெரும் பங்காற்றும். அறுவை சிகிச்சையின் பின் உடல் தேறுவதற்கும், உடல் எடையைக் குறைப்பதற்கும், மூளையைச் சுறுசுறுப்பாக்குவதற்கும் உதவும். அதிக உடற்பயிற்சி செய்பவர்கள் இதனை மேலதிகமாக உட்கொள்வர்.

லைசின் (Lysine) உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை விருத்தி செய்யும். அத்துடன் கண்ணில் திரை படர்தல் (Cataracts), இருதய நோய் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பளிக்கும்.

பீனைல் அனலீன் (Phenylalanne) மன அழுத்தம், முதுகு வலி, நரம்பு நோய்கள் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பளிக்கும். அத்துடன் பசியைக் குறைத்து உடல் மெலிவதற்கு உதவும். அதிக கோப்பி அருந்துவதால் ஏற்படும் Caffeine இன் தாக்கத்திலிருந்து விடுதலையளிக்கும்.

மெதியோனின் (Methionine) மன அழுத்தம், ஈரல் நோய், மூட்டு நோய்கள் (Osteoarthritis), மூளையில் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பளிக்கும். Glutathione நச்சகற்றிலும், பெண்களில் முடி உதிர்வதைத் தடுப்பதிலும் பெரும் பங்கு ஆற்றும். அத்துடன் இருதய நோய் ஏற்படுவதைக் குறைக்கும்.

Taurine நீரிழிவு நோய், உயர் குருதி அழுத்தம் ஆகியவற்றினைக் குறைக்கும். அத்துடன் கொழுப்பு அனுசேபத்தை அதிகரித்து உடலில் கொழுப்பு தேங்குவதைத் தடுக்கும்.

கானிடைன் (Carnitine) இருதய நோயைக் குறைப்பதில் பெரும்பங்காற்றும். இதனை மாத்திரைகளாகக் கொடுப்பதினோடு நெஞ்சு வலி, இருதயத் துடிப்பில் உள்ள குறைபாடுகளைக் குறைக்கும்.

அடுத்த வாரம் கொழுப்பு, W3 கொழுப்பமிலம், W6 கொழுப்பமிலம், தேங்காயிலுள்ள சாதக பாதக நிலைபற்றி ஆராய்வோம்.

தவநாயகம் மகிந்தன் BSc (Nutrition)
ஊட்டவியலாளர்,
வயம்ப பல்கலைக்கழகம்.



## ஈரான் பதிலடி தரும்

"அணுகுண்டு தயாரிக்கப் பயன்படும் தொழில் நுட்பத்தை முழு அளவில் பெற்றுள்ளோம். இனி எவரேனும் எங்களைத் தாக்கினால் தக்க படிலடி கொடுப்போம்'' என்று ஈரான் அதிபர் அகமதி நிஜாத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அவர் ''எங்கள் நாட்டு இளம் விஞ்ஞானிகள் கடும் முயற்சி செய்து அணுகுண்டு தயாரிப்பதற்குப் பயன்படும் யூரேனியம் செறிவூட்டும் தொழில் நுட்பத்தில் வ்வல்லமை பெற்றுள்ளனர். இதை நாங்கள் ஆக்கப்பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம். அணுகுண்டு தயாரிக்கும் திட்டம் எதுவும் எங்களுக்கு இல்லை.

ஆனால் எதிரிகள் யாராவது எங்களிடம் அத்து மீறினால் சரித்திரத்தில் என்றென்றும் நினைவு கூரத்தக்க வகையில் அவர்களுக்குப் பதிலடி கொடுப்போம்'' என்றும் எச்சரித்துள்ளார்.

ஈரான் - ஈராக் நாடுகளுக்கு இடையில் 1980 இலிருந்து 88 வரை நீண்ட போர் நடந்தது. அந்தப் போரின் போது ஈரானிடமிருந்து ஈராக் கைப் பற்றிய கொரம்ஸார் பகுதியை 1982 ஆம் ஆண்டு ஈரான் மீட்டது. அந்த வெற்றி விழாவில் பேசிய போதே ஈரான் அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஆப்கான் முஸ்லிம்களின் உண்ணாவிரதம் அயர்லாந்தில் முறியடிப்பு

அயர்லாந்தில் தஞ்சம் கேட்ட 41 ஆப்கான் முஸ்லிம்கள் டப்ளின் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்து 7 நாட்களாக உண்ணாவிரதம் இருந்தனர். இந்த நிலையில் தேவாலயத்திற்குள் நுழைந்த பொலிஸார் அவர்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

உண்ணாவிரதத்தை கைவிடச் செய்வதற்கு தேவாலய நிர்வாகிகள் முயற்சி மேற்கொண்டனர். இதற்குப் பலன் கிடைக்காததால் இந்தப் பிரச்சினைகளை அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் வீதியில் போக்குவரத்தை நிறுத்தி தேவாலயம் இருக்கும் இடத்தைச் சுற்றிவளைத்து தேவாலயத்துள் புகுந்து உண்ணாவிரதம் இருந்த ஆப்கானிஸ்தான் முஸ்லிம்களை அப்புறப் படுத்தினர்.

இந்நிலையில் நீதித்துறை அமைச்சர் மைக்கல் மெக்டோவல் தஞ்சம் கோருபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம், அவர்களின் விண்ணப்பங்கள் சிலவற்றை ஏற்கனவே அரசு நிராகரித்து விட்டது என்று கூறினார்.

## இந்தியா பாகிஸ்தான் மற்றும் ஈரான் இணைகின்றன

அமெரிக்காவின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஈரானிலிருந்து பாகிஸ் தான் ஊடாக இந்தியாவுக்கு இயற்கைவாயு எடுத்துச் செல்லும் பாரிய குழாய் அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லப் போவதாக ஈரான் பாகிஸ்தான் மற்றும் இந்தியா கூழுரைத்துள்ளன.

இத்திட்டத்துக்கு 7 பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று நாடுகளும் இந்திட்டத்துக்கான இறுதி உடன் படிக்கையில் ஜூன் மாதம் கைச்சாத்திடலாம் என நம்பிக்கை கொண்டுள்ளன.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க முயல்வதாக சந்தேகிக்கும் அமெரிக்கா அதனுடன் வர்த்தகத்தை மேற்கொள்வதிலிருந்து இந்தியா மற்றும் பாகிஸ்தானைத் தடுக்க முயற்சி செய்து வருகிறது.

இதற்குப் பதிலாக துருக்மெனிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானூடாக வாயுக் குழாய் அமைக்கும் மற்றொரு யோசனைக்கு அமெரிக்கா ஆதரவளிக்கின்றது.

## அகதி அந்தஸ்து வழங்க பாலியல் உறவுக்கு அழைப்பு

லண்டனில் குடிவரவு நடைமுறை நிலையத்தில் அகதி அந்தஸ்து கோருவோர் மீது பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

18 வயதான சிம்பாவே நாட்டைச் சேர்ந்த யுவதிக்கு அகதி அந்தஸ்து விண்ணப்பத்துக்கு உதவி செய்து தருவதாகக் கூறி குடிவரவு அதிகாரி பாலியல் உறவில் ஈடுபடுவதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ளார் என்று லண்டன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிம்பாவே யுவதியை தன்னைச் சந்திக்குமாறு உற்சாகப்படுத்திய குறிப்பிட்ட உயரதிகாரி 90 நிமிட சந்திப்பின்போது எவ்வாறு அவருடைய வழக்கில் வெற்றி பெறலாம் என்பது தனக்குத் தெரியுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவரால் தனக்கு உதவி செய்ய முடியுமா என்று அந்த யுவதி கேட்டபோது தன்னுடன் விடுதியொன்றுக்கு வருமாறு அவளை அழைத்துள்ளார் அவர். நாங்கள் தனிமையில் இருக்கும்போது அதுபற்றித் தெரிவிப்பேன். ஏனென்றால் நீ பாலியல் உறவை வைத்துக் கொள்ளப் போகிறாய் என்று சொல்லியிருக்கிறார் அவர்.

இப்போது இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அந்த அதிகாரி யுவதியின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே உதவ முன்வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் ஜனாதிபதி இந்தியப் பிரதமருக்கு பாராட்டு

காஷ்மீர் தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் மன்மோஹன்சிங் பேச்சு நடத்தியதற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.


காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண காஷ்மீரைச் சேர்ந்த, ஹுரியத் உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்களுடன் பிரதமர் மன்மோஹன்சிங் கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை பேச்சு நடத்தினார். அப்போது முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்து வேறுபாடு கொண்டுள்ள காஷ்மீர் தலைவர்கள் கருத்துவேறுபாடுகளை மறந்து நெருங்கி வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையில் பிரதமர் மன்மோஹன்சிங் நடத்திய பேச்சுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற ஒரு விருது வழங்கும் விழாவில் முஷாரப் இந்தப் பாராட்டைத் தெரிவித்தார்.


# வன்னிரெக்கின் அறிவியல் பகிர்வு


Vanni Tech
Vanni Institute of Technology


## அலுவலக மற்றும் வியாபார முகாமைத்துவத்தில் நேரத்திட்டமிடல் மற்றும் தொடர்பாடலில் Microsoft Outlook இன் பங்களிப்பு




Microsoft Outlook - ஏனைய ஈமெயில் மென்பொருள்களைவிட இது இலகுவானதாக இருப்பதற்குக் காரணம், இது Microsoft Officeஇல் உள்ள சகல மென்பொருள்களோடும் இசைந்து போகக்கூடியதாகவும், பயன்பாட்டிற்கு மிகவும் எளிதாகவும் இருப்பதாகும்.







உங்களுக்கு வந்துள்ள ஈமெயில்களை, மேலே காட்டப்பட்டுள்ளவாறு Tools Menutp இல் உள்ள Send/Receive பிரிவைக் click செய்வதன் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

**யசோதரன் , மாணிக்கம்**

பதிவிறக்கம் செய்யப்பட்ட ஈமெயில்களை View Menuவில் உள்ள Arrange By உபபிரிவில் கூறப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தலாம்.

அதேபோல் View Menuவில் உள்ள Reading Pane உபபிரிவில் கூறப்பட்டுள்ளவாறு பார்வையிடும் முறையை வடிவமைக்கலாம்.

புதிய ஈமெயில்களை அனுப்புவதற்காக தயார் செய்ய File Menu -> New -> Mail Messageஐ click செய்வதன் மூலம் உருவாக்கலாம். இவற்றிற்கான முகவரிகளை To என்ற Optionஐ Click செய்வதன் மூலம் ஏற்கனவே உங்களிடம் உள்ள Contactsஇல் இருந்து பெறலாம்.




ஈமெயில்களை Microsoft Wordஇல் தயாரித்தும் அனுப்பலாம். அதேபோல் Outlookஇலும் Word போல் தயாரிக்கும் வசதிகள் அனைத்தும் உள்ளடங்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

(தொடரும்)

## இன்றைய உலகில் இணையம்



இணையத்தில்ல் சிறுவர்களுக்கு பல பரிசுப் போட்டிகளும் உள்ளன. அவைகளுக்கான இணையத்தள முகவரிகள் வருமாறு.

Yahooligans!

http://www.yahooligans.com/entertainment/contests/

Dr.Browen's incredible contest club.

http://www.contest club.com

www4 kidz weekly contest

http://www.4kidz.com

### இணையம் ஆரம்பித்தது எப்படி?

இணையத்தின் தாத்தா ஆர்ப்பாநெட் (Arpanet) என்கிற இணைப்பு. அமெரிக்க அரசாங்க பாதுகாப்பு அமைச்சரகம் (விமான, ராணுவ, கடற் படையின் தலைமைச் செயலகம்) 1969இல் ராணுவத்துக்குச் சொந்தமான கணினிகளை இணைக்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன் முக்கிய அம்சம் இணைப்பின் ஏதாவது ஒரு பகுதி ராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்டாலும் மற்றொரு மார்க்கமாக அதைப் பயன்

**சி.ஜனனி, வி.கலைமதி**

படுத்த முடியும் என்பதாகும். அடுத்த கட்டமாக 1980களில் அமெரிக்க தேசிய அறிவியல் நிறுவனம் National Science Foundation ஆர்ப்பாநெட் காட்டிய வழியில் சில சூப்பர் கணினிகளை (Super Computers) ஒன்றுடன் ஒன்றுடன் இணைத்து அந்த கணினிகளைப் பயன்படுத்த எல்லாக் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் அனுமதித்தது. 1987இல் இது சமாளிக்க முடியாமல் போனது. அதனால் இணைப்பில் புது வேகம் வந்து மாறுதல்கள் வந்தன. இது தான் இணையத்தின் ஆரம்பம். 1990களின் ஆரம்பத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மட்டுமன்றி தனிநபர்களுக்கும் இணையத்தில் இணைப்புக் கொடுக்கும் வசதி வந்தது. ஐரோப்பாவில் சுவிஸ் நாட்டிலுள்ள செர்ன் (CERN) எனும் அணுத்துகள் இயற்பியல் ஆராய்ச்சி நிலையம் **World Wide Web** எனும் உலகளாவிய இணைப்பு வையக விரிவு வலை முறையைக்

(தொடரும்)

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் அமைப்பினால் நிறுவப்பட்ட ஓர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் ஆகும். வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் ஆனி மாதம் 2003 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிறுவகத்தின் இலக்குகள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை கற்பிப்பதும், உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், அவர்களை சர்வதேச சந்தையில் போட்டிக்குத் தயார்ப்படுத்துவதும் ஆகும்.


வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின்மூன்றாம் தொகுதி மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட கணினி அறிவூட்டல் சம்பந்தமான இலத்திரனியல், வலையமைப்பு. மென்பொருள் ஆகிய பிரிவுகளில் பெரும்பாலும் 9ஆம், 10ஆம், ஆண்டு மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப பாடவிதானத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இது மாணவர்கள் தங்களின் வீடுகளில் இருந்தவாறே தொழில்நுட்ப அறிவை விரிவடையச் செய்யும்.

## ஆர்வமூட்டும் இலத்திரனியல்

### எதனை நாம் நேரோட்டமின்சாரம் (DC) என்கின்றோம்.

மின்சாரத்தின் இருமுனைகளான நேர்முனை (Positive), மறைமுனை (Negative) ஆகிய இரு முனைகளையும் எக்கணத்திலும் மாற்றஞ்செய்யாது அதே ஏற்றத்துடன் மின்னை வழங்குமாயின் அதனையே நாம் நேரோட்ட மின்சாரம் (Direct Current - DC) என அழைக்கின்றோம். நேரோட்ட மின்சாரத்தில் (DC) நேரேற்றத்தையும் (Possitive) மறையேற்றத்தையும் (Negative) மாறுபடாமல் இனங்கண்டு கொள்வதற் காகவே நேரேற்றத்திற்கு '+' (Possitive) சிவப்பு, மண்ணிறம், ஆகிய நிறங்களையும் மறையேற்றத்திற்கு '-' (Negative) நீலம், கறுப்பு போன்ற நிறங்களையும் கொண்ட வடங்களை (Wire) பயன்படுத்துகின்றோம். மின்கலங்கள் (Batteries), மின்னேற்றிகள் (Chargers), சூரியக்கலங்கள்(Solarcell) போன்றவற்றின் மூலம் நாம் நேரோட்ட மின்சாரத்தைப் (DC) பெற்றுக் கொள்கின்றோம்.

மின்விளக்குகள் (Torch Lights), வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிகள், நேரோட்ட மின்விளக்குகள் (DC Lights), மின்மாற்றிகள் (Inverters) போன்றவற்றினை நாம் நேரோட்ட மின்சாரத்திலேயே (DC) பயன்படுத்துகின்றோம். இதன் குறியீடு '...' அடையாளம் எங்குங் காணப்படுமாயின் அது நேரோட்ட மின்சாரத்தைக் (DC) குறிப்பதாக இருக்கும்.



### மின்னழுத்தத்தினையும் (Voltage), மின்னோட்டத்தினையும் (Ampere) எவ்வாறு வேறுபடுத்தி விளங்கிக் கொள்ளலாம்?

இப்பொழுது உங்கள் வீட்டிலுள்ள நீர்த்தாங்கி ஒன்றினைச் சிறு உதாரணத்திற்காக எமக்குத்தந்துதவுங்கள். அந்நீர்த் தாங்கிக்கு நீரினை நிரப்புவதற்காக ஒரு குழாயும், நீரினை விநியோகஞ் செய்வதற்கான வேறு ஒரு குழாயும் இருக்கும். அந்நீர்த்தாங்கியினை ஒரு மின்கலம் (Battery) ஒன்றிற்கு

**வே.வசந்தகுமார், பி.மார்ஷல், வ.பிரசன்னா, பா.றஜீவ்குமார், கு.சதிஸ்போல், அ.திவாகரன், அ.திருக்குமரன், க.கோகுல்நாத்**

ஒப்பாக வைத்துப் பார்ப்போமாயின் நீரத் தாங்கியினுள் நீரினை நிரப்புவதானது மின்கலத்திற்கு (Battery) மின்னேற்றம் (Charge) செய்வதைப்போன்றதாகும். இப்போது நீர்த்தாங்கியில் காணப்படும் நீரின் உயரத்தினால் ஏற்படும் அழுத்தவிசைதான் நாம் மின்சாரத்திற் பயன்படுத்தும் மின்னழுத்தம் (Voltage) ஆகும். தாங்கியிலுள்ள நீரின் தன்மை எப்படி மாறாமலிருக்கின்றதோ அதேபோல் இந்த மின்னழுத்தமானது நாம் மாற்றும் வரை மாறுபடாது. இதனையே நாம் ஒரு கடத்தியின் இரு முனைகளுக்கிடையிலான அழுத்த வித்தியாசத்தினை மின்னழுத்த வித்தியாசம்(Voltage) என்கிறோம்.

(தொடரும்...)

# தமிழ் உணர்வினால் குமுறும் ஒரு படைப்பாளி

**கே: எப்படி எழுத்துத்துறைக்கு வந்தீர்கள்?**

ப: நான் இலங்கையில் பிறந்தவன். ஆனால் எனது மூதாதையர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். என் தந்தையார் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் இந்தியாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளைத் தான் வாங்கி வசிப்பார். ஆனந்த விகடன், கல்கி, தினமணி போன்ற இதழ்களைத் தான் வாங்குவார். ஆனந்த விகடனில் அப்போது வெளிவந்த சிறுவர் வண்ண மலர் என்ற பகுதியை நான் விரும்பி வாசிப்பேன். அதனால் கதைகள் எழுத வேண்டும் என்ற உந்துதல் எனக்கு சிறுவயதிலே ஏற்பட்டு விட்டது. எனது தந்தையார் நல்ல நகைச்சுவை உணர்வுள்ளவர். அதன் காரணமாகவும் கதைகள் எழுத வேண்டும் என்ற ஆர்வமும் எனக்குள் ஏற்படுவ தற்கு காரணமாக அமைந்திருக்கும். இந்த உணர்வு என்னோடு வளர்ந்து வந்தது. நான் கடல் கடந்து சென்ற பின்னரும் அந்த உணர்வு என்னை விடவில்லை. அதன் காரணமாகவே இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுத்தாளனாக மாறியுள்ளேன்.

**கே: நீங்கள் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளிலும் வாழ்ந்திருக்கிறீர்கள். இம் மூன்று நாடுகளிலும் தமிழை எப்படி வளர்க்கிறார்கள்?**

ப: இலங்கை எழுத்தாளர்கள் தமிழை வளர்க்க வேண்டும் என்ற பற்றுடன் தீவிரமாக இருக்கிறார்கள். ஏனெனில் தமிழின் எதிரிகள் யார் என்பதை அவர்கள் இனம் கண்டு கொண்டுவிட்டார்கள். எனவே தமிழை அடையாளப்படுத்தும் தீவிரம் அவர்களிடம் காணப்படுகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு மயக்க நிலை காணப்படுகிறது. தமிழுக்கு யார் எதிரி என்பதை அவர்கள் இன்னும் கண்டுகொள்ளவில்லை. அதனால்தான் இந்த துயரமான நிலை.

அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழர்களுக்கு தமது எதிரி யார், தங்களுடைய வாழ்க்கைக்கு எது சிக்கலாக வரும் என்பதும் தெரியும்.

வெளிநாட்டில் இருந்து சென்று குடியேறிய மக்கள் என்று பார்க்கும்போது தமிழ் நாட்டிலிருந்தும் மக்கள் சென்று அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார்கள். இன்று அமெரிக்காவுக்கு சென்று குடியேறியவர்களில் அதிகமானவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே!.

அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மன், பிரான்ஸ், நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளில் இலங்கையிலிருந்து சென்று குடியேறியவர்களே அதிகம்.

**எழுத்தாளர் மாத்தளை சோமு**

எழுத்தாளர் மாத்தளை சோமு ஓர் இலங்கை எழுத்தாளர். இந்த மண்ணில் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். எனினும் இந்தியாவிலும் அவுஸ்திரேலியாவிலும் நீண்ட காலத்தை செலவழித்தவர். செலவழித்துக் கொண்டிருப்பவர். சிறுகதை, நாவல், குறுநாவல், ஆய்வுக் கட்டுரை, பயணக் கட்டுரை, அறிவியல் கட்டுரை என பலவற்றையும் தமிழுக்குத் தந்தவர். மிகுந்த தமிழ் பற்றுக் கொண்டவர். 'நமக்கென்றொரு பூமி', அவன் ஒருவனல்ல, அந்த உலகத்தில் இந்த மனிதர்கள், எல்லை தாண்டா அகதிகள், அவர்களின் தேசம், அவன் வாழத்தான் போகிறான், தமிழர் கண்ட அறிவியல், அவுஸ்திரேலிய அனுபவங்கள் எனும் நூல்களைத் தந்தவர். அவருடன் இடம்பெற்றதொரு நீண்ட உரையாடலில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தமிழர் உணர்வு எவ்வாறு இருக்கின்றது என அவர் உதிர்த்த கருத்துக்களை மட்டும் இங்கே தருகிறேன்.

இலங்கையிலிருந்து சென்றவர்களுக்கும், தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்களுக்கும் வித்தியாசம் உண்டு. தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் ஒரு சுகமான வாழ்க்கையைத் தேடிச் சென்றவர்கள். அவர்களுக்கு வேறு உந்துதல்கள் இல்லை. ஆனால் இலங்கைத் தமிழர்கள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே சென்றவர்கள். அவர்கள் தமிழ் உணர்வோடு போனார்கள். வாழ்கிறார்கள்.



தமிழை முன்னிலைப்படுத்தி அரசியலில் வெற்றி கண்ட திராவிடக் கட்சிகளே தமிழ்மொழி பயிற்சி மொழியா, பேச்சு மொழியா என்ற மயக்கத்தில் இருக்கின்றன. தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு திராவிடக் கட்சிகள்தான் அதிகமாக ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளன. அவர்கள் நினைத்திருந்தால் தமிழை என்றோ ஆட்சி மொழியாக்கி இருக்கலாம். பத்தாம் வகுப்பு அல்லது எட்டாம் வகுப்பு வரையிலாவது தமிழை கட்டாய பாடமாகக் கொண்டு வந்திருக்கலாம்.

**தமிழகத்தில் தமிழ்க்கல்வியின் நிலை என்ன?**

தமிழ் நாட்டின் பெரும்பான்மையான மக்களின் மத்தியில் ஆங்கிலம் கற்றுக் கொண்டால்தான் வாழலாம் என்ற ஓர் எண்ணத்தை விதைத்திருக்கிறார்கள். ஆங்கிலம் உலகமொழிதான். யார் இல்லை என்றார்கள். ஆனால் ஆங்கிலம் எடுபடாத நாடுகளும் உள்ளன. அவை முன்னேற்றமடையவில்லை என்று சொல்லமுடியாது. பிரான்ஸ், ஸ்பெயின், நோர்வே போன்ற நாடுகள் எல்லாம் தமது தாய்மொழியை பிரதானப்படுத்தியே உலகம் வியக்கும் முன்னேற்றம் கண்டுள்ளன.

தமிழ் நாட்டில் இருப்பவர்கள் அமெரிக்காவில் குடியேறப் போகிறோம் என்ற மயக்கத்தில் ஆங்கில மோகத்தை தம்முள் அதிகரித்துக் கொண்டு தமது கலாசாரத்தையும் மொழியையும் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வி முறையைப் பொறுத்தவரையில் இங்கே அறிவை வளர்க்கக்கூடிய கல்வி இல்லை. தொழிற்கல்விதான் இருக்கிறது. ஒரு மருத்துவப் படிப்பு படித்தவருக்கு மருத்துவம்தான் தெரியும். கட்டடக்கலை படித்தவருக்கு கட்டடம் பற்றித்தான் தெரியும். இங்கே அறிஞர்களை உருவாக்கக்கூடிய கல்வி முறை இல்லை. உலகத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய கல்வி முறை இருந்தால்தான் தமிழன் உணர்வோடு இருப்பான்.




தயாரிப்பு: கே. விஜயன்

முதலில் இரண்டு விசயங்களை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். தமிழ்நாட்டில் கல்வி கற்றவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அறிவு பெற்றவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள் என்பது எனது அபிப்பிராயம்.

மாத்ரூ பூமி என்பது மலையாளப் பத்திரிகை. இது கேரளத்திலிருந்து வெளிவருகிறது. கேரளத்தின் பிரதான எழுத்தாளர்களெல்லாம் இதில் எழுதுகிறார்கள். அவர்கள் இந்தியாவின் ஒரு மாநிலத்தவராக இருந்தாலும் மொழியை உயர்வாக மதிக்கிறார்கள். உணர்வோடு இருக்கிறார்கள். குவைத் நாட்டில் மலையாளிகளுக்கு ஒரு மலையாளப் பத்திரிகை வெளிவருகிறது. ஆனால் அமெரிக்காவில் தமிழர்களின் எண்ணிக்கை ஒன்றரை இலட்சம். ஒரு பத்திரிகை வெளிவருகிறதா என்ன? இதுதான் தமிழ்நாட்டு தமிழனின் இலட்சணம். அவன் பணம் தேடுவதிலேயே குறியாக இருக்கிறான்.

**கே: எதிர்காலத்தில் தமிழகம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

தமிங்கலம் என்ற புதிய மொழி தமிழகத்தில் பிறக்கக்கூடும். அதனுடைய தலைநகரம் சென்னையாக இருக்கும். தமிழகத்தில் இரண்டு வகை தமிழர்கள் இருப்பார்கள். ஆங்கிலம் தெரிந்த தமிழர்கள், ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் என்போரே அந்த இரு வகையினர். இவர்களிடையே பெரிய முரண்பாடும், அடிதடியும் வரக்கூடும். எதையும் சும்மா வேடிக்கையாக விட்டுவிடக்கூடாது அல்லவா? இவற்றை முளையிலே கிள்ளி எறிய வேண்டாமா?

-கே.வி-

## சுவைத்தேன் ரசித்தேன்

*ஆறு வித்தியாசங்கள்*

*வில்லனாகவும், நகைச்சுவை நடிகனாகவும் தொலைக்காட்சித் தொடர்களில் கலக்கிக் கொண்டிருப்பவர் எம்.எஸ்.பாஸ்கர். அவர் கூறும் வில்லனுக்கும், காமெடியனுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்கள் தமிழ் சினிமா உலகின் பொமிலா வடிவத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.*

*1. காமெடியன்னா எல்லோரையும் சிரிக்க வைக்கனும். வில்லன்னா தானா சிரிக்கனும்.*

*2. வில்லன்னா கிளைமாக்ஸ்லே திருந்திடனும். காமெடியன்னா எப்பவும் திருந்த வேண்டியதில்லை.*

*3. காமெடியன்னா ஹீரோ டான்ஸ் ஆடும்போது கூட சேர்ந்து ஆடத் தெரியனும். வில்லன்னா நிறுத்துங்கடான்னு சொல்லத் தெரிஞ்சா போதும்.*

*4. ஹீரோவுக்கு மாறுவேஷம் போட்டா அவன்தான் காமெடியன். அது ஹீரோதான்னு தெரியாம திணறினால் அவன்தான் வில்லன்.*

*5. வில்லன் சரியில்லைன்னா வில்லன்தான் தோற்பார். ஆனா காமெடியன் சரியில்லைன்னா படமே தோத்திடும்.*

*6. வில்லன் ஹீரோவான்னா அது ஆன்ட்டி ஹீரோ. காமெடியன் ஹீரோவான்னா அது நாட்டி ஹீரோ.*

*(அட, பட, ஷோக்கா சுக்குதே)*




## ஒரு தேசியக் குரல்

''இங்கு நூல் வெளியீட்டுத்துறை எப்படி இருக்கிறது?''

''சக்கை போடு போடுது''

''எப்பிடிங்கிறீங்க?''

''பின்னே! முன்பெல்லாம் ஒரு சிறுகதை தொகுப்பு, ஒரு கவிதை தொகுப்பு, இல்லே ஒரு நாவல் இதுதானுங்க வெளிவரும். இப்ப அப்பிடிங்களா? மரதன் பந்தய ஓட்டம் மாதிரி, ஒரே நேரத்துலே முப்பது நாப்பது புத்தகங்கள் இல்லே வெளிவருது''

''அடி சக்கை''

''இப்புடி சபாஷ் போட்டா போதாதுங்க. இதை யாரு செய்ராங்கன்னு கவனிச்சு சபாஷ் போடனும்''

''அடேயங்கப்பா! பொல்லாத ஆசை உங்களுக்கு''

''இருக்காதா பின்னே!''

ஒரு இந்திய நூல் வெளியீட்டாளருக்கும், நம்ம ஊர் பத்திரிகைக் குஞ்சு ஒன்றுக்கும் இடையே நடந்த உரையாடல் இது.

இந்த நூல் வெளியீட்டாளர் பல நெளிவு சுழிவுகளுக்கு இடையேயும் புகுந்து விளையாடி சாதனை படைக்கும் ஜாம்பவான். கடுமையான எதிர்ப்புகளுக்கும் முகம் கொடுத்து பொல்லாத பவுன்சர்களையெல்லாம் சிக்சர், சிக்சராக விளாசித் தள்ளிய முன்னாள் அதிரடி டெண்டுல்கரைப் போல, எதிர்ப்புகளை பவுண்டரிக்கு விரட்டிக் கொண்டிருப்பவர். நமது பத்திரிகைக் குஞ்சு இப்படியான ஒருவருடன்தான் பெரிய லெவலில் கதை விட்டுக் கொண்டிருந்தது.

நமது நூல் வெளியீட்டாளர் ரொம்பவும் புகழ் படைத்தவர். அவராக சம்பாதித்தது மட்டும் அல்ல. அது தந்தை வழிச் சொத்தாகவும் திகழ்கிறது.

அடடா உத்தியோகம் புருஷ லட்சணம் என்பதற்கேற்ப நூல் விநியோகத் துறையில் சுவிஸ், லண்டன், கனடா என உலக 'டிரிப்' படிக்கும் வாலிபனாக சுற்றித் திரிபவர்.

பத்திரிகைக் குஞ்சுக்கு நவீன இலக்கியம், கலாசாரம், நூல், வெளியீடு என ஒரு மண்ணும் தெரியாவிட்டாலும், இந்த கறுப்புக் கண்ணாடி பற்றி கன்னா பின்னாவென எழுத்துக்கள் சகல பத்திரிகைகளிலும் தோன்றவே ஏதோ தலைபோகிற விஷயம் நடக்கிறது என்பதாக பரபரப்படைந்தார். அதைத் தொடர்ந்து ஐயா கொழும்பு வந்துள்ளார் என்ற விஷயத்தையும் மோப்பம் பிடித்துக் கொண்டு பேனையும் கையுமாக திறந்த வாயுடன் அவரைத் தேடி பறந்து விட்டார். இந்த பரபரப்புக்குப் பின்னால் ஒரு திகம்பர ரகசியம் புதைந்து கிடக்கிறது. இதை கண்டுபிடிக்க துப்பறியும் சங்கர்லாலை படைத்தவரின் மைந்தனுக்கு கஷ்டமா என்ன?

நூல் வெளியீட்டாளருக்கு புத்தகம் பதிப்பதும், அதை பரவலாக விநியோகம் செய்வதுமே பரமார்த்த சிந்தனை. பத்திரிகைக் குஞ்சுவின் உள்ளக் கிடக்கையை புரிந்து கொண்டார். விடுவாரா! பேச்சை நைசாக ஆரம்பித்து விட்டார்.

''பத்திரிகையாளராச்சே எழுத்தாலே நாட்டு மக்களை ஆட்டிப் படைச்சிக்கிட்டு இருப்பீங்க, கதை, கவிதைன்னு எழுதி தள்ளியிருப்பீங்க, இந்தியாவிலே போட்டிடுவோம். சுவிஸ், கனடான்னு விநியோகிச்சிடுவோம். அப்புறமென்ன நீங்க புகழ் பெற்ற சர்வதேச எழுத்தாளராகிடுவீங்க. லண்டன் என்ன, கனடா என்ன ஒரே இன்விடேசன்தான். தமிழில் எழுதி, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, நோபல் பரிசையும் உங்கள் நாவல் தட்டிக்கொள்ளலாம்...''

அடப்பாவி!

என்ன இப்படி ஒரு புழுகு என்று மலைச்சு பொய்ட்டீங்களா. நம்ம பத்திரிகைக்குஞ்சும் இப்படித்தான்.

ஆடிப்போய்விட்டது.

''இலங்கையர் புத்தகங்களை நீங்கள் பிரசுரிப்பதற்கு கடுமையான எதிர்ப்பாமே. யார் இதற்குப் பின்னால் கச்சை கட்டிக்கொண்டிருக்கிறார்கள்?'' இது பத்திரிகைக்குஞ்சின் கேள்வி.

''இலங்கையில் புத்தகம் போடுபவர்கள். சில மூத்த எழுத்தளர்கள்!''

''ஏன் அப்படிச் செய்கிறார்கள்?''

''எல்லாம் தேசியப் பற்றுத்தான். பின்னால வியாபார நோக்கமும் இருக்கிறது.''

''தேசியப் பற்று என்றால்?''

கலகலவென சிரிக்கிறார் மிஸ்டர் கறுப்புக் கண்ணாடி மைந்தன். பத்திரிகைக்குஞ்சுவுக்கு திமுக்கென்கிறது. 'எட, என்ன இப்படி கேட்டுட்டேன்' என்று தன்னையே ரகசியமாகக் குட்டிக்கொண்டு, ஏதோ நகைச்சுவையை ரசிப்பது போல பலமாகச் சத்தமிட்டுச் சிரித்து 'விளங்குது விளங்குது' என்று சமாளித்துக் கொண்டார். என்றாலும் விட்டாரா...

''எங்கள் மூத்த எழுத்தாளர்கள் தேசிய பற்றுள்ளவர்கள். சமூக வளர்ச்சியே அவர்கள் படைக்கும் இலக்கியத்தின் அடிப்படை நோக்கம். சர்வதேச விநியோகத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. சாதாரண மக்களிடமே எமது இலக்கியம் சென்றடைய வேண்டும் என்ற உன்னத இலட்சியம் படைத்தவர்கள்...''

பத்திரிகைக் குஞ்சுக்கு அதிசயமாகவிருந்தது. நாமா இப்படி பேசினோம் என்று மலைப்புத் தோன்றியது. ஏதோ காட்டாம் சொல்ல வேண்டும் என்ற உந்துதல் மனதில் திடீரென கொப்பளிக்கவே பத்திரிகைக்குஞ்சு இப்படி பேசியது. என்றோ பத்திரிகையில் எழுதிய இலக்கியக் கூட்ட உரையொன்று நினைவுக்கு வந்திடவே அதையே கொட்டித் தீர்த்தது.

கறுப்புக் கண்ணாடி மைந்தனுக்கு நாடியில் நமைச்சல், சொரிந்து கொண்டே யோசனை செய்தார். அதன்பிறகு அவர் மெதுவாக அவிழ்த்துவிட்ட திகம்பர இரகசியத்தைக் கேட்டு பத்திரிகைக் குஞ்சு தடாலென விழுந்துவிட்டது.

நூல் வெளியீட்டாளருக்கு எதிராக காட்ட சாட்டமாக குரலெழுப்பி அது நாட்டுத் துரோகச் செயல் என்று போராடிய ஒரு மாபெரும் எழுத்தாளரின் நூல் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் போல கூட்டமாக வெளிவரும் அடுத்த ஒரு தொகை நூல் வெளியீட்டில் இடம்பிடித்து வெளிவருகிறது என்ற தகவல்தான் அது.

அடப்பாவமே!

★அமெரிக்காவில் உள்ள ஸடுஸ்பரி நகரைச் சேர்ந்த பிச்சைக்காரன் டிம்பாக்கெட். அவனது பிச்சைப் பாத்திரத்தில் ஒருநாள் ஒரு வைர மோதிரம் விழுந்தது. அதை அலங்காரத் துக்கான மலிவு விலை மோதிரம் என டிம்பாக்கெட் நினைத்தான்.

பின்னர் தான் அது 2.5 கரட் எடையுள்ள வைர மோதிரம் என அவனுக்குத் தெரியவந்தது. 28 நாட்களுக்குள் எவரும் அதற்கு உரிமைகோராவிட்டால் அது அவனுக்கே சொந்தமாகும். அவன் அதை ஒரு நகைக்கடைக்குக் கொண்டுபோய் விற்க முயன்றபோது அந்த மோதிரம் அவனுக்கே சொந்தமானது என்பதை நிருபிக்க எந்த ஆதாரமும் இல்லாததால் அவனால் அதை விற்க முடியவில்லை. எனவே அவன் அந்த மோதிரத்தைப் பொலிஸில் ஒப்படைத்து விட்டான்.

பொலிஸார் அந்த வைர மோதிரம் பிச்சைக்காரனின் பாத்திரத்துக்கு எப்படி வந்தது என விசாரணை நடத்தினர். அப்போது ஒரு ருசிகரத் தகவல் வெளியானது.

அதை ஒரு காதலன் தனது காதலிக்கு நிச்சயதார்த்தப் பரிசாக கொடுக்க முயன்றிருக்கிறான். காதலி திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்த காதலன் மோதிரத்தை பிச்சைக்காரனின் பாத்திரத்தில் வீசி எறிந்திருக்கிறான் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

★ ★ ★ ★

★நாய்களுக்கான இன்டர்நெட் ரேடியோ தாய்லாந்து நாட்டில் தொடங்கப்படவுள்ளது.டோக் ரேடியோ(Dog Radio)தாய்லாந்து கொம் என்ற பெயருடைய இந்த இன்டர் நெட் ரேடியோ ஊடாக வாய்ப்பாட்டு மற்றும் வாத்திய இசை நிகழ்ச்சி 24 மணி நேரமும் ஒலிபரப்பப்படும்.



இசை கேட்பது நாய்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று இந்த ரேடியோ நிலையத்தின் உரிமையாளர் கூறினார்.இசை கேட்டு சில நாய்கள்

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

வாலை ஆட்டுகின்றன. என்றும் சில நாய்கள் தரையில் படுத்துக் கிடக்கும் போது தலையைத் தூக்குகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.அவர் நடத்திவரும் நாய்வளர்ப்புப் பள்ளியில் பயிலும் 10 மாணவர்கள் இன்டர் நெட் ரேடியோவில பணியாற்றத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

★ ★ ★ ★

★உத்தரப்பிரதேச தலைநகரான லக்னோவில் ஜோதிடர்களுக்கான மாநாடு நடந்தது. மாநாட்டில் கலந்துகொண்ட ஜோதிடர்கள் பலரும் ராகுல் காந்தியின் ஜாதகத்தை அலசி ஆராய்ந்தனர்.

ராகுல் காந்திக்கு 2007இல் கண்டிப்பாக கல்யாணம் நடக்கும் என அனைவரும் கணித்தனர். மணமகள் யார் என்பதில்தான் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தது. ''அவர் வெளிநாட்டுப் பெண்ணை மணப்பதற்குத்தான் வாய்ப்பிருக்கிறது'' என்றனர் சிலர்.



''இல்லை, இல்லை இந்திய வம்சாவளியைச்சேர்ந்த பெண் வெளிநாட்டில் பிறந்திருக்கிறார். அவர்தான் சோனியாவுக்கு மருமகளாக வருவார். சோனியாவின் ஒப்புதலோடு திருமணம் கோலாகலமாக நடக்கும்'' என்பது பலரது கருத்து.

''அடுத்த இந்தியப் பிரதமர் ராகுல்தான். பிரியங்கா தேர்தலில் நிற்க சோனியா அனுமதிக்க மாட்டார். கிரக சூழ்நிலை சாதகமாக இல்லை'' என எல்லாச் சோதிடர்களும் அடித்துக் கூறினார்கள்.

★ ★ ★ ★

★18 கரட் தங்கத்தில் கைக்கடிகாரம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கடிகாரத்துக்குப் பெயர் 'காட்டியர்'. இது ரோமானிய எண்களில் மணி மற்றும் நிமிடங்களைக் காட்டுகின்றது. 'காட்டிய'ரின் முகப்பில் மரகதக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. நீச்சல் பிரியர்களுக்கு ஒரு செய்தி. இதைக் கட்டிக்கொண்டு 30 அடி ஆழம்வரை தண்ணீருக்குள் போனாலும் இதனுள்ளே தண்ணீர் போகாது. விலை 15 லட்சம்.



★ ★ ★ ★

★ஒரே நேரத்தில் 853 பயணிகள் அமர்ந்து பயணம் செய்யக்கூடிய வகையில் உலகின் மிகப்பெரிய இரண்டு அடுக்கு விமானமான ஏ 380 விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு இறக்கையின் நீளம் 50 அடி. (ஏறக்குறைய கிரிக்கெட் பிட்ச் அளவு)விமானத்துக்குள் கடைகள், சலூன், ஹோட்டல், விளையாட்டு நிலையங்கள் உள்ளன. விமானத்தின் விலை ரூ.1377 கோடி. இதுவரை 159 விமானங்களுக்கான ஓடர் இந்த விமானத்தை தயாரிக்கும் நிறுவனமான எயர் பஸ் நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளதாம். இந்தியாவின் தனியார் விமான நிறுவனமான 'கிங்பிஷர்' 5 விமானங்களுக்கு ஓடர் செய்துள்ளதாம். இந்த விமானங்கள் 5 உம் 2010 இல் வழங்கப்படும் எனத் தெரிகிறது.

★ ★ ★ ★

★தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, மொசாம்பிக் நாடுகளின் எல்லையில் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 46 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது இப்பூங்கா.

விலங்குகளின் நடமாட்டத்துக்காக மேற்சொன்ன மூன்று நாடுகளும் தங்களின் நாடுகளின் எல்லையில் போட்டிருந்த தடுப்பு வேலியை அகற்றியுள்ளன. விலங்குகளை பாதுகாப்பதற்கு ஒரு கூட்டு ஒப்பந்தத்தையும் இந்த நாடுகள் செய்து கொண்டுள்ளன.

இப்பூங்காவில் பெரும் எண்ணிக்கையில் சிங்கங்கள் உலா வருகின்றன.

★ ★ ★ ★

*காய்ந்த சருகாய் நான்*
*சுழன்றடிக்கும்*
*காற்றாய் நீ!*
*என்னை எங்கே*
*இழுத்துச் செல்கிறாய்?*
*நான் பார்க்கிறேன்*
*எங்கும் நீ தான்*
*தெரிகிறாய்!*
*நீ வந்து தங்கிய*
*என் இதயம்*
*இனி எதையும் தாங்கும்!*

★ ★ ★ ★

★என் ஹஸ்பண்ட் சரியாய் இல்லை என்ன செய்வது?
சஸ்பென்ட் பண்ணிவிடு.

★பெண்களிடம் ஆண்கள் விரும்புவது எது?
தங்களிடம் இல்லாததை.



**ஒருவர்:**- என்ன! உடம்பு முழுக்க கட்டுப்போட்டிருக்கிறாயே?

**மற்றவர்:**- லாண்டரிகாரர் ஒருவரின் மகளுக்கு காதல் கடிதம் கொடுத்தேன். அவர் துவைச்சு எடுத்திட்டார்.

# ஆயுதக் களைவை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளது. இந்த நாடுகளை அவை வீழ்ந்துள்ள படுகுழியில் இருந்து மீட்டெடுத்தால் தான் அவற்றின் பூகோள கேந்திர மற்றும் பிராந்திய நலன்களைப் பாதுகாக்க முடியும் என அமெரிக்கா நம்புகிறது. அதனால் தான் விடுதலை அமைப்புகள் மீது தடைவிதித்து பேச்சுவார்த்தைக்கு இழுத்து வந்து அரைகுறைத் தீர்வுகளை திணித்து பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட முயற்சிக்கின்றது.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கும் இத்தகைய அழுத்தங்களைச் செலுத்தி யாசீர் அரபாத்தை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று இஸ்ரேலுடன் கைகுலுக்க வைத்தது அமெரிக்கா . ஒரு அரை குறைத் தீர்வை முன்வைத்து, 'ஏற்றுக் கொள்ளுங்கள் நாம் அனைத்தையும் செய்கிறோம்' என்றெல்லாம் அது கூறியது. அரபாத்தும் அதையெல்லாம் நம்பி ஏற்றுக் கொண்டார். இன்று என்ன நடக்கிறது.

பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் விமானத்தாக்குதல் நடத்துகிறது. புல்டோஸர்கள் பாலஸ்தீன மக்களின் வீடுகளை இடித்துத்தள்ளுகின்றன. இதை இன்று யாரும் தட்டிக் கேட்க முன்வருவதில்லை.

பாலஸ்தீனத்தில் ஹமாஸ் என்றொரு இயக்கம் இல்லாது போயிருந்தால் முழு பாலஸ்தீன மக்களையுமே இஸ்ரேல் அழித்து ஒழித்திருக்கும். ஹமாஸ் இயக்கம் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாமல் தனது ஆயுதங்களைப் பாதுகாத்ததால்தான் இன்று பாலஸ்தீன மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளும் ஹமாஸ் இயக்கத்தின் நிலையிலேயே இருக்கிறார்கள். சர்வதேச அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் மிரட்டலுக்கோ அல்லது தடைகளுக்கோ அடிபணிய அவர்கள் தயாராக இல்லை.

## ஏந்திய ஆயுதங்கள் தமிழ் மக்களுக்கே

அதனால் தான் இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை தொடர்பாக ஆராய்வதற்கு நோர்வே அனுசரணையாளர் வந்துள்ள நேரத்தில் அவர்கள் வருகையானது களநிலைமையில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதாக தாம் நம்பவில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் வருகை விடுதலைப் புலிகளை அடுத்தகட்ட ஜெனிவாப் பேச்சுக்கு கொண்டுவருமென அரசாங்கம் எதிர்பார்க்கின்ற போதிலும் சமாதானச் சூழ்நிலையொன்று உருவாக்கப்படும்வரை தாம் பேச்சுவார்த்தைகள் எதிலும் ஈடுபடப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

* அத்துடன் தாம் ஏந்தியிருக்கும் ஆயுதங்கள் தமிழ் மக்களால் தமக்கு அளிக்கப்பட்டவை எனவும்

* எந்த ஒரு நாட்டுக்கும் தமது ஆயுதங்களைக் கீழே போடும் படி கூறும் உரிமை கிடையாதென்றும்

* தமிழ்மக்களின் பாதுகாப்பு சுதந்திரம் விடுதலை ஆகியவற்றை உறுதிப்படுத்திய பின்னர் தமிழ்மக்களின் தேசிய கட்டமைப்புகளான தேசிய இராணுவம் மற்றும் கடற்படை ஆகியவற்றுக்கு அந்த ஆயுதங்களை மாற்றமுடியும் என்றும்

*அதுவரையில் தமிழ்மக்களின் பாதுகாப்பு அரணாக ஆயுதங்களை விடுதலைப் புலிகளே வைத்திருப்பார்கள் என்றும்

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பு தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ் மக்களோ ஆயுதங்களைக் கீழே வைத்து, தமிழீழக் கோரிக்கையைப் புறம்தள்ளி சிங்கள அரசிடமோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்திடமோ சரணடையத் தயாராக இல்லை என்பதையே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

## ஆச்சே விடுதலை இயக்கம்

இங்கே முக்கியமான ஒரு விடயத்தை இலங்கை அரசுக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

கிழக்கு தீமோர் சுதந்திர இயக்கம் ஆச்சே விடுதலை இயக்கம் ஆகியவற்றைப் போல தமிழீழ விடுதலைப் புலிகளும் நாம் ஏற்கனவே கூறியதைப் போல தமக்கெனக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை வைத்திருக்கின்றனர். அத்துடன் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசத்தில் தனியான நீதி நிர்வாக, பாதுகாப்புத்துறைகளை இயக்கியும் வருகின்றனர்.

இந்தக் களநிலையை அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியமும் தென்னிலங்கையும் விளங்கிக் கொள்ள வேண்டும். தென்னிலங்கை அரசைப் போலவே இந்தோனேசிய அரசாங்கமும் ஆச்சே மக்களது தனி நாட்டுக் கோரிக்கையை முறியடிக்கலாம் என்ற பகற்கனவில் மிதந்துகொண்டு இருந்தது. அவர்களின் போராட்டத்தை முறியடிப்பதில் முனைப்புடன் செயல்பட்டது.

ஆனால் பலம் பொருந்திய இந்தோனேசிய இராணுவத்தால் ஆச்சே மக்களது சுதந்திரப் போராட்டத்தை முறியடிக்க முடியவில்லை. இறுதியில் இந்தோனேசிய அரசு வேறு வழி எதுமின்றி ஆச்சே மக்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள முன்வந்தது.

## பொருத்தமற்ற தீர்வுவேண்டும்

எனவே தென்னிலங்கை அரசும் பேரினவாதிகளும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றினை முன்வைக்க முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை அமுல் நடத்தும் விடயத்தில் ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் முன்னின்று செயல்படுகின்றபோதும் பொருத்தமான அதிகாரப் பகிர்வை அவை நிராகரிக்க வில்லை என்பதையும் தமிழ்மக்களின் மனக்குறைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அவை கூறி உள்ளதையும் தென்னிலங்கை மறந்து செயல்படமுடியாது.

எனவே தமிழ்த்தலைமை ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டத்தை நோக்கி காய்களை நகர்த்த தென்னிலங்கை தவறுமாயின் நெருக்கடி மேலும் உக்கிரமடையலாம்.

இன நெருக்கடி தீவிரமடையுமாயின் நாடு அ[illegible]தாளத்துக்கே தள்ளப்படும். எனவே வெளிநாட்டுத் தடைகள் மூலம் விடுதலைப் புலிகளை - அவர்களின் போராட்டத்தை - தகர்த்துவிடலாம் என்ற மாயையில் இருந்து அரசாங்கம் விடுபட்டு ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்காத வரை அரசாங்கமோ மக்களோ இந்த நாட்டில் அமைதியாக இருக்க வழி பிறக்கப் போவதில்லை.

# கண்ணாடி – ஸ்பூன்



படத்தைப் பார்த்ததும் இது ஏதோ வித்தியாசமான சமாச்சாரம் என்பது புரிந்து இருக்கும். கண்களில் அணியும் கண்ணாடியில் உள்ள காது கம்பிகளை உணவுகளை எடுத்துச்சாப்பிடும் ஸ்பூன் மற்றும் குச்சி போல பயன்படுத்த முடியும். ஜப்பான் நாட்டில் உள்ள கண்ணாடிகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று இந்த புதிய வடிவிலான கண்ணாடிகளை வடிவமைத்துள்ளது.

இன்றைய நாகரிக மனிதனின் வாழ்க்கை அவசர கதியில் இயங்குகிறது. ஓர் இடத்தில் அமர்ந்து சாப்பிடுவதற்கு கூட நேரம் இன்றி நின்றுகொண்டு சாப்பிடுவதை காண முடிகிறது. மேலும் துரித வகை உணவுகள் அதிக அளவில் மனிதர்களின் சாப்பாட்டு பட்டியலில் இடம் பிடித்து விட்டன.

இதற்கு ஏற்ற வகையில் புதிய கண்ணாடிகளை தயாரித்துள்ளனர். இந்த கண்ணாடிகளில் உள்ள காது கம்பிகளை தனியாக குச்சி போல பயன்படுத்தி உணவினை சாப்பிட முடியும். ஜப்பான் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த வகை கண்ணாடிகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 214

சொற்சிலம்பம் 214 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜூன் 11 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன் 18 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 25 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.212க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு−14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 214

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | |
| ■ | | ■ | 13 | | ■ | | ■ |
| 14 | | 15 | | ■ | 16 | | 17 |
| | ■ | 18 | | 19 | | ■ | |
| 20 | | | ■ | 21 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 212

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ந் | 2 தா | 3 தி | ■ | 4 வெ | ண் | 5 மை |
| ப் | ■ | 6 வ | ட | க் | கு | ■ | ய |
| 7 பா | 8 சு | ர | ம் | ■ | 9 மா | 10 த | ம் |
| 11 வி | த | ம் | ■ | 12 கா | ன | ம் | ■ |
| ■ | ந் | ■ | 13 அ | ல | ம் | ப | ல் |
| 14 அ | தி | 15 கா | ர | ம் | ■ | ட் | ■ |
| 16 க | ர | ப் | பு | ■ | 17 க | ட | ல் |
| 18 தி | ம் | பு | ■ | 19 ப | ல | ம் | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.214

### இடமிருந்து வலம்

1. சதத்தில் அரைவாசி.
4. தேர்தலில் எண்ணப்படுவது இது.
6. சுக்கு, மிளகுடன் இதுவும் சேர்ந்தால் திரிகடுகம்
7. பிரித்தல், வேறுபடுத்தல்
9. பொருத்தமான நிலை/ பொருள்/ அர்த்தம்.
11. சிராய்.
12. கவர்ச்சி/கவரும் தன்மை.
13. வழங்கு
14. தோடு
16. பாடல்
18. தலைமை வகிப்பவன்
20. நாள்
21. உடல் வளைத்தல்/ தலை சாய்த்தல்

### மேலிருந்து கீழ்

1. ஒரு தமிழ் மாதம்
2. அச்சு வாகனம் ஏற்றுதல்
3. உமிழ் நீர் சொரி.
4. இளைஞர்/ யுவர்.
5. பொல்லாங்கு செய்தல்
8. ஒரு இராசி/ நல்வரவு கூற முன்னால் வைப்பது
10. தப்புச் செய்.
12. அடகு
13. பின்புறத்தில் அமைந்திருக்கும் இடம்
14. வெட்ட உதவும் கருவி.
15. சமயம்.
16. திருமணமாகாத பெண்
17. இவளும் பெண்ணே.
19. பிரி

## சொற்சிலம்பம் போட்டி இல. 211

1. பு. தேவகரன்,
   இல.52, அம்மன் வீதி, கந்தர்மடம்,
   யாழ்ப்பாணம்.
2. ஆன் டிலுக்ஷி டேவிட் ரவிக்குமார்,
   இல 82, புதுச்செட்டித் தெரு,
   கொழும்பு 13.
3. ஆர்.காயத்திரி,
   இல . 28, ஸ்கந்தபுரம்,
   கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

1. க. கமலேஸ்கவரன்,
   இல.192, ஆறுமுக வீதி,
   வட்டக்கச்சி, கிளிநொச்சி.
2. திருமதி. பத்மா அலெக்ஸாண்டர்,
   இல. 18, சௌமியபுரம்,
   கொட்டகலை.
3. யோ. டொ. ஸ்பெக்,
   இல.59/1, மெனிங் டிறைவ்,
   மட்டக்களப்பு
4. அ. விஜோதினி,
   விஜோஸ்ரோர்ஸ், முருகனூர்,
   வவுனியா.
5. இ. ஆறுமுகம்,
   தொட்டிலடி, சங்கானை.
6. பொன். கனகரத்தினம்,
   சங்கரப்பிள்ளை – வீதி,
   ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
7. வி. செல்வநாயகம்,
   ''சாருஜா'' சிவன் கோவில் வீதி,
   புத்தூர்.
8. லூ. கிருசாந்தி,
   இல.45, மூர் வீதி, மன்னார்.
9. என். ஜெகநாதபிள்ளை,
   அன்னமலை, நாவிதன் வெளி,
   கல்முனை.
10. க. தனஜா,
    கொல்லவிளங்களம்,
    வவுனிக்குளம்.

# கருணாநிதியின் அரசியல் சாணக்கியம்

தமிழக சட்டமன்றத் தேர்தலில் கூட்டணிக்கட்சிகளுடன் கைகோத்து ஐந்தாவது முறையாக தமிழக முதலமைச்சராக வெற்றி வாகை சூடியிருக்கிறார் கலைஞர் கருணாநிதி.

எம். ஜி. ஆர். கூட மூன்று தடவைகள் தான் தமிழக முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார். ஆனால் தமிழக மக்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்த கலைஞர் கருணாநிதி எதைக்கொடுத்தால் எப்படி மக்கள் தனக்கு வெற்றியைத் தருவார்கள் என்பதை தனது அரசியல் சாணக்கியத்தினால் மிகச் சரியாக எடைபோட்டு பல்வேறு பத்திரிகைகளின் கருத்துக்கணிப்புகளையெல்லாம் தவிடு பொடியாக்கி வெற்றிக்கொடி நட்டுவிட்டார், தனது திரைப்படக்கவர்ச்சி யினால் அரும்பாடுபட்டு மக்களிடையே செல்வாக்கினை வளர்த்துக்கொண்டு தருணம் பார்த்துத்தான் எம். ஜி. ஆர். அரசியல் நீரோட்டத்தில் கலந்தார். ஆனால் கலைஞானம் மற்றும் இலக்கிய ஆற்றல் மிக்க கருணாநிதிக்கு ஆரம்பத்திலிருந்தே அரசியலில் ஆர்வமிருந்தது.

இவர் எம். ஜி. ஆர். நடித்த மருதநாட்டு இளவரசி திரைப்படத்துக்கு முதன்முதலாக 1950இல் கதை, திரைக்கதை வசனம் எழுதிய போது எம். ஜி. ஆருடன் தொடர்பு ஏற்பட்டது. திராவிட முன்னேற்றக்கழகம் தோற்றுவித்த உறுப்பினர்களில் இவரும் ஒருவர். இக்கழகத்தில் 1961 இல் இவர் பொருளாளராக இருந்தார். எதிர்க்கட்சித் துணைத் தலைவராக 1962 - 67 இல் பணிபுரிந்தார். 1957இலிருந்து 2006 வரை போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் இவர் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் 1969-71 வரையிலும், பின்பு 1971-76இலும், 1989-1991 வரையிலும் பின்பு 1996 இலும் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

இவர் 1950இலிருந்து 1989 வரை கிட்டத்தட்ட 20 திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை வசனமும் 1947இலிருந்து (ராஜகுமாரி) 1996 (புதிய பராசக்தி)வரை திரைக்கதை வசனம் எழுதிய படங்களின் எண்ணிக்கை 32 ஆகும். 18 படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார்.

கலைஞர் கருணாநிதி தனது அரசியல் வாழ்வில் பல்வேறு சோதனைகளை, இக்கட்டான சூழ்நிலைகளை சந்தித்திருக்கிறார். தோல்விகளைக்கண்டு துவளாத இவர் பீனிக்ஸ் பறவைபோல சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் ஆற்றல் மிக்கவர்.



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியின்போது இவரின் வீட்டிலிருந்து பலவந்தமாக அடித்து இழுத்துவரப்பட்டபோது தமிழ உணர்வுள்ளவர்கள் கொதித்தெழுந்தார்கள். அந்த சமயத்தில் கலைஞரை வெறும் ஒரு அரசியல்வாதியாக பார்க்கவில்லை. தமிழனாக, தங்களின் மூத்த சகோதரனாக, தந்தையாகத்தான் பார்த்தார்கள். ஆடம்பரம் மற்றும் அராஜக அரசியலை விரும்பாத தமிழ் மக்கள் மறுபடியும் கலைஞருக்கு வாய்ப்பளித்து அவரை அரியணையில் ஏற்றி அழகு பார்த்திருக்கிறார்கள்.

கலைஞர் கருணாநிதியின் இந்த வெற்றிக்கு ரூபா 2க்கு ஒரு கிலோ அரிசி மற்றும் கலர் டி. வி. மட்டுமா காரணம். நிச்சயமாக இல்லை. இரண்டாவது முறையாகவும் ஜெயலலிதாவுக்கு அமோக ஆதரவை வழங்கினார்கள் தமிழக மக்கள். இன்னமும் மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் நினைவுகளை மறக்காமலிருக்கும் அதிகமான கிராம பாமர மக்கள் ஜெயலலிதாவை ஆட்சிபீட மேற்றுவதன் மூலம் தங்களின் எம் .ஜி.ஆர். விசுவாசத்தை காட்டினார்கள்.

எம். ஜி. ஆர். போலவே அமைதியான ஆடம்பரமற்ற சிறந்த ஆட்சியை ஜெயலலிதா வழங்குவார் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். தேர்தலின்போது பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கிய ஜெயலலிதா அவற்றை நிச்சயமாக நிறைவேற்றுவாரென அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இவரின் ஆட்சி அரச ஊழியர்களின் உரிமைகளை நசுக்குவதாக இருந்தது. தோழியின் உறவினர்களுக்கு மட்டுமே நல்வாழ்க்கையை ஏற்படுத்துவதாக இருந்தது. தனக்கு தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில்தான் முன்னர்தன் எதிரிகளாக இருந்த வைகோ, திருமாவளவன் போன்றவர்களுக்கு அதிக தொகுதிகளை கொடுத்து அவர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

குமுதம் போன்ற தமிழக முன்னணி பத்திரிகைகள் சிலதனது தேர்தல் கருத்துக் கணிப்புகளில் ஜெயலலிதாவே அமோக வெற்றியுடன் ஆட்சி அமைப்பார் என ஆருடம் கூறியிருந்தன.

ஆனால் அந்தக் கருத்துக்கணிப்புகள் கடைசி நேரத்தில் கருணாநிதிக்கு சாதகமாக அமைந்துவிட்டன.

ஒருபுறம் வைகோ, திருமாவளவன். இன்னொரு புறம் நடிகர் விஜய்காந்த் என்று பலமான எதிர்ப்புகள் இருந்தபோதும் அவற்றை எல்லாம் தவிடுபொடியாக்கி தமிழ்நாட்டை மறுபடியும் ஒரு தமிழனே ஆட்சிசெய்யக்கூடிய அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 50 வருட அரசியல் வாழ்வை பின்னணியாக கொண்டிருக்கும் கலைஞர் ஒரு பரந்த அரசியல்வாதியாக திகழ்கிறார். குடும்ப ஆட்சியை ஊக்குவிக்கிறாரென்ற குற்றச்சாட்டினை மேலெழுந்தவாரியாக இவர்மேல் சிலர் சுமத்தினாலும்கூட அது தவறில்லை என்றே மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஏனென்றால் அறிஞர் அண்ணாவுக்குப்பின் அவரின் வாரிசுகள் எவரும் அரசியலுக்கு வரவில்லை. அதே போல வாரிசே இல்லாத எம். ஜி. ஆருக்குப் பின் அவரின் ரசிகர்கள், அபிமானிகள் அரசியல் அநாதையானார்கள். ஆனால் கலைஞர் கருணாநிதியைப் பொறுத்த வரையில் அவருக்குப்பின்னால் அவரால் வளர்க்கப்பட்ட அரசியல் வாரிசுகளான ஸ்டாலின், தயாநிதி மாறன், மு.க. அழகிரி போன்றவர்கள் அவரின் வழியைப்பின்பற்றி ஆட்சிநடத்தத் தயாராக இருக்கிறார்கள்.

ஏற்கனவே தேர்தலில் வாக்களித்தபடி ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாவுக்கு கொடுப்பதற்கான உத்தரவை பதவி ஏற்ற அன்றே வழங்கிய கருணாநிதி இலவச தொலைக்காட்சிப்பெட்டியை வழங்குவதற்கான செயற்றிட்டமொன்றையும் தற்போது உருவாக்கிவருகின்றார். ஈழத்தமிழர்கள் தொடர்பாக அவர் இன்னும் தெளிவான கொள்கை ஒன்றை முன்வைக்காதபோதும் எப்படியாயினும் அண்டை மாநில மொன்றில் தமிழர் ஒருவர் ஆட்சி பீடமேறியிருப்பது தமிழர்கள் அனைவருக்கும் புதிய உற்சாகத்தையும் எதிர்கால நம்பிக்கையையும் தோற்றுவித்திருப்பது மட்டும் உண்மை......!

**பாலா. சங்குப்பிள்ளை**

# எனது அன்புக்குரிய சகோதரிகளே!

நம்பிக்கைதான் நம் வாழ்க்கையை உயர்த்துகிறது. நம்பிக்கை நம் வாழ்வில் இனிமை சேர்க்கிறது. நம்பிக்கை ஐந்து எழுத்து வார்த்தை தான். ஆனால் அது இல்லையேல் வாழ்க்கையே இல்லை. நம்பிக்கையில் தான் இந்த உலகமே இயங்குகின்றது.

நம்பிக்கையில் சிறந்தது தன்நம்பிக்கைதான். முதலில் ஒவ்வொருவரும் தன்னை நம்ப வேண்டும். எதையும் சாதிக்க என்னால் முடியும் என்பதே தன்னம்பிக்கை. அந்த நம்பிக்கை எங்களிடம் இருந்தால் எதையும் சாதித்து விட எம்மால் முடியும். நம்பிக்கைக்கு உள்ள ஆற்றலை அளவிட முடியாது. தன்னம்பிக்கை இருந்துவிட்டால் இமயத்தைக்கூட கடந்துவிடலாம்.

சிறுவயது முதலே ஓர் இலட்சியத்தை வகுத்துக் கொண்ணுங்கள். கிடைத்த வாய்ப்பை அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதை நழுவ விடாதீர்கள். ஆனால் பொறுமையாக இருக்கிறோம் என நினைத்துக்கொண்டு வெட்டிப் பொழுது போக்காதீர்கள். அந்த நேரத்தில் செயல்திட்டங்களைத் தீட்டுங்கள். தீட்டிய திட்டங்களைச் செயல்படுத்துங்கள். எதையும் புதுமையாகச் செய்ய முயற்சியுங்கள்.

ஒரு காரியத்தில் ஒன்றிப் போவதுமிகவும் அவசியம். வெற்றியின் இரகசியம், ஈடுபட்ட காரியத்தில் ஒன்றிப்போவதுதான். அது எந்தக் காரியமாக இருந்தாலும் அதில் முழு ஈடுபாடு உங்களுக்கு இருக்க வேண்டும். வீட்டுவேலையாக இருக்கட்டும், படிப்பாக இருக்கட்டும் அல்லது விளையாட்டாக இருக்கட்டும். எடுத்த காரியத்தில் உங்களை முற்று முழுதாக ஈடுபடுத்திக்கொண்டால் வெற்றி நிச்சயம்.



வெற்றி என்பது வாழ்வில் நாம் எவ்வளவு உயர்ந்திருக்கிறோம் என்பதைக்கொண்டு அளவிடப்படுவதில்லை. ஆனால் நாம் விழும்போது எத்தனைமுறை மீண்டும் எழுந்து நிற்கிறோம் என்பதைக்கொண்டே அளக்கப்படுகிறது. மீண்டும் மீண்டும் எழும் திறமையே எமது வெற்றியைத் தீர்மானிக்கிறது.

வெற்றி என்பது அதிர்ஷ்டம் என்று எண்ணிவிடவேண்டாம். அது தேடி வரும் என்று எதிர்பார்க்காமல் அதற்கான தளங்களை உருவாக்குங்கள். வெற்றியாளர்களாக வேண்டுமென்றால் முதலில் தோல்வியைக்கண்டு அஞ்சாதிருக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

தோற்கத் தோற்க மனம் புண்படுகிறது. செயல் மேன்மையுறுகிறது. இன்றைய தோல்வி நாளைய வெற்றிக்கான அறிவிப்பு என்பதை உங்கள் மனதில் இருத்திக்கொள்ளுங்கள். ஆகவே முதலில் உங்கள்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். முன்னர் கூறியதைப்போல நல்ல திட்டங்களைத் தீட்டி அவற்றுக்கு செயல்வடிவம் கொடுங்கள். வாழ்க்கையில் வெற்றி உங்களுக்கே.

நன்றி

மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்.

ஞானம்

# பெண்

## வரி விலக்கு

குமரொன்று
கட்டுநாயக்காவில்
கால் பதிக்கிறது
குவைத் சென்று
ஆறுமாதம்தான்
அதற்குள்
திரும்பிவிட்டாள்.
தூக்க முடியாத
சுமைகள்
தோள் கனக்கும்
பொருட்கள்
இறக்குமதித் தீர்வைகள்.
அவள் வயிற்றில்
வெளிநாட்டுக்
கருவொன்று
தீர்வைக்குத் தப்பிவிட்டது.

ஆதூர் மதுரன்

# கூந்தல் கறுப்பு!



சில பெண்களின் கூந்தல் விளம்பர மாடல்களில் வரும் பெண்களின் கூந்தல் மாதிரி அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் திகழ்கிறதே! அதுபோன்ற கூந்தல் வளம்பெற என்ன செய்வது என்று சிந்திக்கிறீர்களா?இதோ உங்களுக்காக சில குறிப்புகள்:

ஒவ்வொரு நாளும் தலைமுடியை வாரி, காலை, மாலை இரு வேளைகளிலும் சீவி சுத்தம் செய்யுங்கள். பேன், பொடுகு வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஓய்வெடுக்காமல் வேலை, வேலை என்று டென்ஷனாக அலைபவர்களுக்குக் கூந்தல் வறண்டு விடுவது இயற்கையே. கூடுமானவரை ஓய்வு எடுத்துக்கொள்வது அவசியம்.

நாள்தோறும் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, மேற்கொள்வதால் இரத்த ஓட்டம் சீராகும். சீரான இரத்த ஓட்டம் கூந்தல் வளத்திற்கு உதவும்.

இரவில் ஏழு மணி நேரத் தூக்கம் அவசியம். இரவில் சரிவரத் தூங்காதவர்களுக்கு நாளடைவில் தலைமுடி கொட்டுவதைக் கவனித்திருப்பீர்கள்.

கூடுமானவரை தலைமுடியை இயற்கையாக உலர்த்துங்கள். ஹேர் டிரையர் உபயோகிப்பது நல்லதல்ல.

மன உளைச்சல் இல்லாமல் மனதை அமைதியாக வைத்திருப்பதன் மூலம் தலைமுடி கொட்டுவதைத் தவிர்க்கலாம்.

சத்துள்ள உணவுப் பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்வது கூந்தல் வளத்திற்கு நல்லது.

தினமும் ஏதாவது ஒரு பழம் சாப்பிட, கூந்தல் இயற்கைப் பொலிவுடன் திகழும்.

அன்றாடம் நீங்கள் உண்ணும் உணவில் ஒருவேளை உணவாவது இயற்கை உணவாக இருப்பது நல்லது. அதாவது பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்ற சமைக்கப்படாத உணவுப் பொருளை உண்ணுவது நல்லது.

ஒரு நாளைக்கு குறைந்தது எட்டு டம்ளர் தண்ணீர் அருந்துங்கள்.

வைட்டமின்கள் பி, இ, சி, கே ஆகியவற்றை தினமும் உணவுப்பொருட்கள்மூலம் கிடைக்குமாறு செய்யுங்கள். இந்த வகை வைட்டமின்கள் கூந்தல் பராமரிப்புக்கு இன்றியமையாதவை.

அதிக அளவில் கொழுப்புப் பொருட்களை சேர்த்துக்கொள்வது கூந்தல் வளத்திற்கு நல்லதல்ல.

பால், பாலைச்சார்ந்த பொருட்கள் ஆகியவற்றை மிக அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ளாதீர்கள். வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் ஏற்றது.

கறிவேப்பிலையை அதிக அளவில் சேர்த்துக்கொள்வதாலும் இளநரை, பித்தநரை மாறி கரு கருவென கூந்தல் வளரும். கறிவேப்பிலையை உலர வைத்துப் பொடி செய்து உணவுடன் சேர்த்துக்கொள்ளலாம்.


கரிசலாங்கண்ணி எனும் மூலிகை வகையை வாங்கி இடித்து சாறு எடுத்து தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி வடிகட்டிவைத்து தலைக்குத் தடவி வர கூந்தல் நன்கு வளரும்.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தனித்தனியே சீப்பு வைத்திருப்பது அவசியம். சீப்பை வாரம் ஒரு முறை தண்ணீரால் கழுவி சுத்தம் செய்ய வேண்டியதும் அவசியம்.

# கத்தரிக்காய் தயிர்ப்பச்சடி

தேவையானவை:-

புளிக்காத புது தயிர் - 1 கப்.
சிறிய கத்தரிக்காய் - 4
தேங்காய் துருவல்- 2டேபிள் ஸ்பூன்.
பச்சை மிளகாய்- 2
பூண்டு 2 பல்
உப்பு- தேவைக்கு ஏற்ப
**தாளிக்க**
கடுகு- அரை டீஸ்பூன்
எண்ணெய்- தேவையான அளவு.



**செய்முறை:-** கத்தரிக்காயை நீளவாக்கில் மிக மெல்லியதாக நறுக்கிக்கொள்ளுங்கள். தேங்காய், பச்சை மிளகாயை அரைத்துக்கொள்ளுங்கள். பூண்டைத் தோலுரித்து நசுக்கி வையுங்கள். எண்ணெயைக் காயவைத்து நறுக்கிய கத்தரிக்காய் துண்டுகளை சிறிது சிறிதாகப் போட்டு நன்கு வேகவிட்டு எடுங்கள். ஒரு டிஷ்யூ பேப்பரில் போட்டு எண்ணெய்யை எடுத்துவிடுங்கள். பரிமாறும் பொழுது பொரித்த கத்தரிக்காய், தேங்காயும் பச்சை மிளகாயும் அரைத்த விழுது, நசுக்கிய பூண்டு, உப்பு ஆகியவற்றை தயிருடன் சேர்த்து நன்கு கலந்து, கடுகை தாளித்துக் கொட்டுங்கள். வித்தியாசமான ருசியுடன் இருக்கும் இந்த தயிர் பச்சடி.

# வாரம் ஒரு கேள்வி-பதில்

**வயது 22, நான் க. பொ. த. உயர்தரம் கற்றுக்கொண்டிருக்கின்றேன். என்னை விரும்பும் ஒருவர் தனது காதலை எனக்குத் தெரிவித்துவிட்டார். நானும் அவரை விரும்புகின்றேன். ஆனால் அவரது சாதி எங்கள் காதலுக்கு குறுக்கே நிற்கின்றது. அவரது பெற்றோர் என்னைத் திருமணம் செய்வதற்கு ஏற்றுக்கொள்வார்கள். எனது பெற்றோர் அவரைத் திருமணம் செய்து கொண்டால் என்னையும் அவரையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நாங்கள் இருவரும் இணைந்து வாழ என்ன செய்யலாம். மிகவும் அன்பான, ஆதரவான ஆலோசனை கூறவும்.**

**சதீஸ் அனுமாலா,**
**பரந்தன்**

அன்புக்குரிய சகோதரி அனுமாலா,

உங்கள் காதல் பாதையில் சாதி குறுக்கிட்டு இருப்பது எதிர்காலத்தில் நீங்களும் உங்கள் உள்ளம் கவர்ந்தவரும் மணம் செய்து கொள்வதில் பிரச்சினையாக இருக்கப் போகிறது என்று கவலைப்படுகிறீர்கள் இல்லையா?

சாதி இரண்டொழிய வேறில்லை. என்று பாடிச் சென்றிருக்கிறார் ஔவையார். ஆண்சாதி, பெண் சாதி என்ற இரண்டு சாதிகள் மட்டுமே உள்ளன என்பதே அவரது நல்வாக்கு.

எனவே சாதியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். திருமணவாழ்க்கை அமைதியாக அமைவதற்கு கணவன் மனைவிக்கிடையே ஆழமான அன்பும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும்தான் முக்கியமே தவிர சாதி அல்ல. உங்கள் காதலர் உங்கள் மீது மாறாத அன்பு கொண்டுள்ளார் உங்கள் மனம் நோகாது உங்களுடன் என்றும் வாழ்க்கை நடத்துவார் என்று நீங்கள் நம்பினால் அவரையே திருமணம் செய்து வாழ்க்கை நடத்துவதே நல்லது.

உங்கள் பெற்றோர் உங்களது காதலரது சாதியை முன்வைத்து உங்கள் காதலுக்கு குறுக்கே நிற்பார்களானால் அவர்களை உங்கள் காதலுக்கு பச்சைக்கொடிகாட்ட வைப்பது உங்கள் பொறுப்பு. எறும்பு ஊரக் கல் தேயும் என்று சொல்வார்கள். எனவே உங்கள் மாறாத காதலைப்பற்றியும் உங்கள் காதலரது நற்பண்புகள் பற்றியும் கால நேரம் பொருத்தமாக வரும்போதெல்லாம் உங்கள் பெற்றோருக்கு எடுத்துச் சொன்னால் காலப்போக்கில் அவர்கள் உங்களது காதலுக்கு சம்மதம் தருவார்கள். தன்நம்பிக்கையுடன் திட்டமிட்டுச் செயற்படுங்கள். வெற்றி உங்களுக்கே என வாழ்த்துகின்றேன்...

விஷால்

# பல்சுவை கதம்பம்





## செக்ஸ் பற்றி எழுதிக் குவிக்கிறார் புருனா



5 வருடங்களுக்கு முன்பு அவர் ஒரு பிரபல விலை மாது. தனது உடலை மூலதனமாக வைத்து ஒரே நாளில் பல லட்ச ரூபாய்களை அள்ளிக் குவித்தவர். அவரது பெயர் புருனா. பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர்.

தனது இளம் வயதில் பெற்றோரை இழந்ததன் காரணமாக விலைமாதுவான இவர் இணைய தளத்தின் மூலமாகவும் தனது வியாபாரத்தை நடத்தி வந்தார். கடந்த வருடம், தொழிலைக் கைவிட்டு இணையதளம் மூலமாக செக்ஸ் தொடர்பான கட்டுரைகளை எழுதி வருகிறார். பிரேசில் பத்திரிகைகளிலும் நிறைய எழுதிக் குவிக்கிறார். இதனால் 'பிரேசிலின் டார்லிங்' என்ற பெயரே இவருக்கு வந்து விட்டது. கடந்த ஆண்டு 'தி ஸ்கார்பியன்ஸ், ஸ்வீட் வெனோம்' என்னும் பெயரில் இவர் விலைமாதுத் தொழில் குறித்த தனது அனுபவங்களை எழுதி புத்தகமாக வெளியிட அது முதல் பதிப்பிலேயே ஒரு லட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தது. தான் விலைமாதுவாக இருந்தபோது சம்பாதித்த பணத்தை விட இந்தப் புத்தகத்தின் மூலம் 3 கோடி ரூபாயை புருனா சம்பாதித்து இருக்கிறார்.

போர்த்சிய மொழியில் அவர் எழுதிய அந்தப் புத்தகம் தற்போது ஸ்பானிஷ், ஆங்கில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படவுள்ளது. இப்போது இந்தப் புத்தகத்தை தழுவி ஹொலிவுட் படம் எடுக்க இருக்கிறார்கள்.

இதில் ஓர் ஆச்சரியமான விஷயம் என்ன வென்றால் இவரது புத்தகத்தை 80 சதவீத பெண்கள் படித்திருக்கிறார்கள் என்பதுதான். அதுவும் 13 முதல் 35 வயது வரையுள்ள பெண்கள்.

புருனாவின் நிஜக்கதை ரொம்பவும் சோகமானது. அனாதையாக இருந்த அவரை குழந்தைப் பருவத்தில் ஒரு தம்பதிகள் எடுத்து வளர்த்தனர். சிறுமியாக இருந்த போதே அவளுக்கு அத்தனை கெட்ட பழக்கங்களையும் சொல்லிக் கொடுத்து போதைப் பழக்கத்திற்கும் அடிமையாக்கினார்கள். பிறகு முழுநேரமாக அவளை விபசாரத் தொழிலில் இறக்கிவிட்டிருக்கிறார்கள்.

ஒரு முறை 'இனி நான் விபசாரத்தில் ஈடுபடமாட்டேன்' என்று மறுத்தபோது 'உன்னை ஜெயிலில் தள்ளி கம்பி எண்ண வைத்துவிடுவேன்' என்று அந்த வளர்ப்புத் தம்பதியினர் மிரட்டியிருக்கிறார்கள். வேறு வழியில்லாமல் இன்னும் சிறிது காலம் விலைமாதா இருந்துள்ளார், புருனா. சரியாக படிக்காததால் புருனாவால் நல்லதொரு வேலைக்கும் போக முடியவில்லை. இதனால் இணையதளம் மூலமாக வாசகர்களின் செக்ஸ் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆலோசனை கூறி வருகிறார். டி.வி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று ஆலோசனை அளிக்கிறார்.

"பெரும்பாலானவர்கள் தங்களது சம்பாத்தியத்தை உடல் சுகத்திற்காகத்தான் செலவிடுகிறார்கள் என்பதை நான் அந்தத் தொழிலில் இருந்த போது அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டேன். அந்த அனுபவம்தான் இப்போது எனக்கு ஆலோசனை தர உதவி செய்கிறது" என்கிறார், புருனா.

## ஐஸ்வரியா மீதும் வன்முறை



அண்மையில் இடம்பெற்ற (Cannes) திரைப்பட விழாவில் கலந்துகொண்ட உலக அழகியும் நடிகையுமான ஐஸ்வரியாராயின் பக்கமே, அங்கு திரண்டிருந்த அத்தனை பார்வையாளர்களின் கண்களும் திரும்பி இருந்தன. திரையில் மட்டுமல்ல அரங்கிலும் அழகு நட்சத்திரமாக ஜொலித்தார் ஐஸ்வரியா.

ஐஸ்வரியாவின் மனதில் ஆழப்பதிந்திருந்த காயங்களும் சிறிது வெளிப்பட்டன என்று தெரிகிறது. குடும்ப வன்முறையினால், தானும் பாதிக்கப்பட்டதாக அங்கு தெரிவித்த ஐஸ்வரியா அத்துடன் நிறுத்திக் கொண்டார்.

பொலிவூட் நடிகர் சல்மான் கானுக்கும் ஐஸ்வரியாவுக்கும் இடையில் மூகிழ்ந்த காதல் உறவு நீண்ட காலம் நீடிக்காமல் மடிந்து போனதற்கு சல்மான்கானின் வன்முறைகளே காரணம் என்று அங்கு இருந்த பார்வையாளர்கள் கிசுகிசுத்துக்கொண்டனர்.

## அன்னையர் தினத்தில் அழுதார் ஹில்டன்



பிரபல ஹொலிவூட் நடிகை பரீஸ் ஹில்டன் தனது கவர்ச்சியால் எப்போதும் ரசிகர்களை ஜொள்ளு விட வைப்பவர். தினமும் ஆடையை மாற்றுவது போல நாளுக்கு ஒரு காதலனை மாற்றுவார்.

சமீபத்தில் ரிக் சால்மன் என்ற காதலனோடு விருந்து ஒன்றில் அரைகுறை ஆடையுடன் அவர் ஆட்டம் போட்ட படம் பத்திரிகைகளில் வெளியாகி பரபரப்புக் கிளப்பியது.

அண்மையில் உலகம் முழுதும் பரபரப்பாகக் கொண்டாடப்பட்ட அன்னையர் தினத்தின் போது தனது தாயாரான காதிஹில்டனுக்குப் பரிசளிப்பதற்கென 10,000/= அமெரிக்க டொலர் பெறுமதி உடைய பொருட்களை வாங்கி அவருக்கு அனுப்பி வைத்தாராம்.

பரிசுப் பொதியைக் கொண்டு சென்ற சிப்பந்தி அதை ஹில்டனின் வீட்டுவாசலில் வைத்துவிட்டு அழைப்பு மணியை அழுத்திய போது அவ்வழியே வந்த திருடனொருவன் திருதிப்பெனப் பாய்ந்து அந்தப் பரிசுப்பொதியை அபகரித்துச் சென்றுவிட்டானாம். அன்னையர் தினத்தில் ஹில்டன் அழுதுவடித்ததுதான் மிச்சம்.






## உள்ளாடை

இந்த உள்ளாடையின் மதிப்பு 10 லட்ச ரூபாய் என்றால், நம்பமுடிகிறதா? உண்மைதான். கொலம்பியா நாட்டில் நடந்த உள்ளாடை அணிவகுப்பு விழாவில் இந்த புதிய உடை அறிமுகப்படுத்தப் பட்டது. கொலம்பியா நாட்டில் கல்லூரி மாணவிகள் இந்த ஆடையை விரும்பி வாங்கிச் சென்றார்கள்.

## உதட்டில் முத்தம்



கூச்சப்படாமல் கவர்ச்சி காட்டும் தேஜாஸ்ரீயின் பேச்சிலும் கூச்சம் கிடையாது. தேஜாஸ்ரீயை சந்தித்தபோது சொன்னார்:-

"கவர்ச்சி காட்டுவது எனக்கொரு பிரச்சினையாக இருந்ததில்லை. தமிழ் நடிகர்களில் எல்லோரையும் எனக்குப் பிடிக்கும். ஒரு சிலர் என்னோடு ஆடும் போது கையை வைத்துக் கொண்டு சும்மா இருப்பதில்லை. ஆனால், என்ன விரல் வித்தை காண்பித்தாலும் நான் யாரையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை.

நேரடியாக காமிரா முன் உதட்டோடு உதடு சேர்த்து முத்தம் கொடுத்து நடிக்கச் சொன்னாலும் நடிப்பேன் ஆனால், காமிராவுக்கு பின்னால் எனக்கு நடிப்பு வராது!" என்றார், தேஜாஸ்ரீ

தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு வருகை தரும்படி தொண்டமானுக்கும் அஸீஸுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மலையகத்தில் தனித் தொழிற்சங்கம் நிறுவும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது தான் ஆச்சரியத்துக்குரியது. மன்னார் மாநாட்டுக்கு தொண்டமான் வருகை தரவில்லை. ஆனால் அஸீஸ் வந்திருந்தார். மலையக மாவட்டங்களில் தமிழரசுக்கட்சி தொழிற்சங்கங்களை அமைப்பதன் மூலமும், செல்வநாயகத்துக்கு இருக்கும் கௌரவத்

அவர்களுக்குரியவர்களாய் இருந்தார்கள். ஆனால் வடக்கிலுள்ள தமிழர்கள் ஒருபோதும் அவர்களுடன் இனங்காட்டிக்கொள்ளாதவர்கள். அவர்களின் அடையாளத்தின் ஒரு பகுதியாகவிருக்கும் அந்தத் தலைவர்களை மீறி அவர்களை ஓரங்கட்டிவிட்டு அந்த மக்களை சென்றடைய முயல்வது சரிவராது என்று எடுத்துக்கூறினேன். அது நடைமுறைச் சாத்தியமற்றது மட்டுமல்ல கொள்கையளவிலும் வியூக முறையிலும் கூட தவறானது என்று விளக்கினேன்.

இந்திய தேசிய காங்கிரஸ் ஜின்னாவோடும் , முஸ்லிம் லீக்கோடும் பேச்சுவார்த்தைகள் நடத்தி தோல்விகண்டு விரக்தி அடைந்திருந்தவேளையில்

அளவுக்கு முடியுமோ அந்த அளவு உச்சத்துக்கு அவர்களுக்கு உதவி புரிந்தது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் மலையகத் தமிழ்க் குடும்பங்கள் ஆயிரக்கணக்கில் கப்பலில் ஏற்றி அனுப்பப்படும் பிரச்சினை வந்தபோது இதைக் குறிப்பாகக் கவனிக்க முடிந்தது.

மன்னார் மாநாட்டுக்குப் பிறகு நான் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கையை விடுத்தேன். அதில் கட்சியின் முடிவு குறித்து கவலை தெரிவித்தேன். மேலும் மலையகத்தில் ஏற்கனவே நிலை கொண்டுள்ள தொழிற்சங்கங்களுக்கு போட்டியாக தமிழரசுக்கட்சி தொழிற்சங்கம் அமைக்கப்போவது அந்த மக்களின் ஒருமைப்பாட்டைக் குலைத்துவிடும்,

இருந்தார். அவருடைய கணவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் இணைந்து கட்சியை ஆரம்பித்தவர் சி. பி. டி. சில்வா. என்றாலும் கூட்டணி ஏற்பட்டதன் பின்னர் கட்சித்தலைமைப் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டார்.

1964 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைப்பதற்கான சிம்மாசன உரை நிகழ்வு அடுத்து வந்தது. இந்த உரையில் லேக் ஹவுஸ் பத்திரிகை ஸ்தாபனத்தை தேசியமயமாக்கும் யோசனை இடம்பெற்றிருந்தது. இந்த ஸ்தாபனம் வழக்கமாக ஐ. தே. கட்சியை ஆதரிக்கும் போக்கைக் கொண்டது. அக்கட்சியின் நெருங்கிய ஆதரவாளர்களுக்கு சொந்தமாய் இருந்தது.

# சி.பி.டி. சில்வா தலைமையிலான 13 பேர் எதிர்க்கட்சிக்குத் தாவ அரசு கவிழ்ந்தது!

தோற்றத்தைக்கொண்டும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் என்ற நிலையிலிருந்து தொண்டமானையும் அஸீஸையும் துரத்தியடித்துவிடலாம் என்று திருச்செல்வம் நம்பியிருந்தார்.


சி. பி. டி. சில்வா

நான் இந்த ஏற்பாட்டை எதிர்த்து நின்றேன். வடக்கிலிருந்து இலங்கைத் தமி[illegible] தலைமைத்துவத்தை மலையக மக்கள்மீது திணிக்கும் முயற்சி ஒருபோதும் வெற்றிபெறமாட்டாது என்று நான் கூறினேன். இம்மாதிரியான எந்த முயற்சியும் கடந்தகால

ஜின்னாவோடு இணக்கம்கண்டு பிரிவினையைத் தவிர்க்கும்படி ராஜகோபாலாசாரியார் கொடுத்த ஆலோசனையையும் மீறி ஜின்னாவையும் முஸ்லிம் லீக்கையும் புறம் தள்ளிவிட்டு முஸ்லிம் மக்களை நேரடியாக அணுக [illegible] தேசிய காங்கிரஸ் [illegible] ன் விளைவு [illegible] தையும் நான் [illegible] பாலாச் [illegible] ன்று [illegible] னாவை [illegible] கதுடன் [illegible] லும் [illegible] ராக [illegible] புதிதாக [illegible] வத்திற்கு [illegible] ா, [illegible] கத்தில் [illegible] றையானது [illegible] ருந்த [illegible] என்பதாக [illegible] த வகையில் [illegible] மானம் [illegible] திர்ப்பு [illegible] டந்த [illegible] லப்பாடு

அவர்களைப் பலவீன மாக்கிவிடும் என்று கூறியிருந்தேன். இந்தக் கூற்று கட்சியின் தீர்மானம் கட்சிக்குள்ளிருந்தே விமர்சிக்கப்படுவதாக எடுத்துக்கொள்ளப் பட்டிருக்க முடியும். அத்துடன் கட்சிக்குள் பிளவு ஒன்று ஏற்படப்போவதைக் காட்டுவதாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம்.

அந்தச் செய்தி வெளிவந்த அன்று சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினரும் என்பெயரைக் கொண்டவருமான வி. என். நவரத்தினம் திருமதி பண்டாரநாயக்க அரசில் கல்வி அமைச்சராக விருந்த (பின்னர் ஐ.தே.க. அரசு காலத்தில் ஒட்டாவாவில் இலங்கைத் தூதுவராக இருந்தவர்.) பி. பி.ஜி. கலுகல்லவின் அமைச்சுக்கு தனது தொகுதியின் ஆசிரியர் ஒருவரின் பிரச்சினை தொடர்பாக சென்றார். பத்திரிகை படித்துக்கொண்டிருந்த அமைச்சர் சிரித்த முகத்துடன் நவரத்தினத்தை வரவேற்று அவரது பிரச்சினையைக் கேட்டு தீர்த்துவைப்பதாக ஒப்புக்கொண்டதுடன் அவர் விடுத்த அறிக்கையை தாம் பத்திரிகையில் படித்ததாகவும் மிகத்திறமான அறிக்கை என்றும் துணிச்சலான நடவடக்கை என்றும் பாராட்டினார். நவரத்தினம் புன்சிரிப்புடன் அமைச்சர் சொன்னதைக் கேட்டுக்கொண்டு தனது காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார்.

இது சாதாரண ஒரு விடயம்தான். ஆனால் சிறு விடயத்தையும் பயன்படுத்தி

இந்தப் பத்திரிகைகள் கடுமையான தாக்குதல்கள் மூலமும் ஒருதலைப்பட்ச விமர்சனங்கள் மூலமும் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றமிழைத்திருந்தன. எதுவானாலும் அதனை தேசியமயமாக்கியது,



அத்தியாயம் 48

ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கையே! இந்த நடவடிக்கையை சி. பி. டி. சில்வா பிரிவினர் எதிர்த்தனர்.

சிம்மாசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது வாக்களிப்பு நடைபெறவிருந்த அன்று சி. பி. டி. சில்வா தனது 13 ஆதரவாளர்களுடன் சபையின் குறுக்கே நடந்து எதிர்க்கட்சிப்பகுதியில் போய் அமர்ந்துகொண்டார். இவ்வாறு செய்வதற்கு ஐ. தே. கவுடன் என்ன விதமான பேரம் பேசியிருந்தார்கள் என்பது எவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

ஆளும் கூட்டணி சிறுபான்மையாக்கப்பட்டு விட்டது. தோல்வி நிச்சயம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. பிரேரணையின் மீது கடைசி நிமிட உரைகள் நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரது ஆதரவைப் பெற்று விடக்கூடும் முயற்சிகள் செய்யப்பட்டன.

விரும்பியிருந்தால் அரசை வீழ்ச்சியுறுவதிலிருந்து காப்பாற்றக்கூடிய நிலையில் தமிழரசுக்கட்சி மட்டுமே இருந்தது. அரசாங்கத்தின் பல முக்கிய பிரமுகர்கள் தமிழரசுக் கட்சியுடன் பேரம் பேச வந்தார்கள்.

## தமிழரசுக்கட்[illegible] வைப் பெறுவதற்கு பீலிக்ஸ் டயஸ் ந[illegible]வார்த்தை தோல்வி

சம்பவங்களைக்கிளறுவதாக இருக்கும். கடந்தகால வரலாறு உதவக்கூடியதாகவும் இல்லையென்று சுட்டிக்காட்டினேன்.

தொண்டமானும் அஸீஸும் பெரிய சொத்துரிமையாளர்களாகவும் வணிகர்களாகவும் இருந்து தொழிலாளர்களாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அந்தத் தலைவர்களும் அவர்களின் பிராந்தியப்பிரிவுத் தலைவர்களும் அந்த மக்களைச் சார்ந்தவர்களாய் -

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு , தொடர் அரசியல் கட்டுரையாக 'சுடர்ஒளி' வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

சரியென நிருபித்தன. செல்வநாயகத்தின் பெயரையும் மதிப்பையும் சிலர் பயன்படுத்திக்கொள்ளப்போகிறார்கள் என்று நான் சந்தேகம் கொள்ள நேர்ந்ததும் அந்தக்காலகட்டத்தில் தான். மலையகத்தில் திறக்கப்பட்ட கட்சியின் தொழிற்சங்கக் காரியாலயங்களுக்கு முடுவிழா நடத்தவும், மேல் நடவடிக்கைகளைக் கைவிடவும் வெகுகாலம் பிடிக்கவில்லை. இதற்காக சத்தியாக்கிரக நிதியில் இருந்து பெரும் தொகைப் பணமும் விரையமாக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே இது ஒரு முறையாக திட்டமிடப்படாத நடவடிக்கையாகவே இருந்துள்ளது.

### சிங்களத் தலைவர்களின் அக்கறை

கட்சியின் இந்த செயற்பாடுகள் அனைத்தையும் அரசு தலைவர்கள் மிக அக்கறையுடன் அவதானித்து வந்துள்ளார்கள். தமிழர்கள் மத்தியில் இலங்கைத் தமிழர், கிழக்கிலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் என்றவாறெல்லாம் பிரிவுகள் இல்லாமல் ஒருமைப்பாடு வளர்ந்துவிடுமோ என்று சிங்களத் தலைவர்கள் அச்சம் கொண்டிருந்தார்கள்.

தமிழரசுக்கட்சி மலையகத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்த ஒருமைப்பாடு ஒருபோதும் ஏற்படப் போவதில்லை என்ற அவர்களின் எண்ணத்தை மேலும் உறுதிப்படுத்தியது. தமிழர் தொடர்பான எந்தவொரு செயற்பாட்டிலும் இந்த எண்ணம் எந்த

தமிழரசுக்கட்சியை உடைத்தெறிவதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கத் தலைவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சிறு உதாரணமே. ஆனால் அவைகளைக்கண்டுகொள்ள கண்களும் தகுதியும் மன்னார் மாநாட்டுக்குப்பிறகு வந்த தலைமைக்கு இல்லாமல் போயிற்று. பின்னர் வந்த ஆண்டுகளில் இது நிருபணமாயிற்று

திருமதி பண்டாரநாயக்கா அரசின் (1960-65) இறுதிக் காலத்தில் தான் சமசமாஜக்கட்சியுடனான கூட்டணி ஏற்பட்டது. அதனால் அக்கட்சி பதவியில் அதிக காலம் இருக்கவில்லை. நான்கு ஆண்டுகள் பதவியிலிருந்த பின் 1964 டிசெம்பரில் அரசு வீழ்ச்சியடைந்தது. எனவே சமசமாஜக்கட்சி மீண்டும் அரசியல் பதவிகளை அனுபவிக்க மேலும் 5 ஆண்டுகள் காத்திருக்க நேர்ந்தது. அரசு வீழ்ச்சியடைந்ததற்கு பல காரணங்கள் கூறப்பட்டுவந்தன.

சுதந்திரக் கட்சிக்குள் சமசமாஜக் கட்சியினர் ஊடுருவுவதை அக்கட்சியின் ஒரு பிரிவினர் கடுமையாக எதிர்த்தனர். சி.பி. டி.சில்வாவின் தலைமையிலான

தமிழில் 'பேனா'

இந்தப் பிரிவினர் சமசமாஜக்கட்சியின் கூட்டணியை வெறுத்தனர். அக்கட்சியின் நாடாளுமன்ற கட்சித்தலைவராக சி. பி. டி. சில்வாவே இருந்தார். திருமதி பண்டாரநாயக்க இரண்டாம் நிலையில்

நீதிமன்றங்களில் தமிழ்மொழி பாவனைக்கு சிறிது இடம்கொடுக்கலாம் என்று சிறிமாவோ விரும்பியும் அதற்கு இடம் கொடுக்காதவரான நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காதான் முதலில் வந்து வெட்கமின்றி பேரம் பேச ஆரம்பித்த பிரமுகர். வாக்குறுதிகளையும் கோரிக்கைகளையும் அவர் முன்வைத்து நின்றார். அரசை பதவியில் நீடிக்க உதவும் படியும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்ற சந்தர்ப்பம் தரும்படியும் கோரிநின்றார். தனிப்பட்ட முறையிலும் அவர் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு வாக்குறுதி தருவதற்கு முன்வந்தார். கடந்தகால அனுபவங்களால் விரக்தியுற்றிருந்த தமிழரசுக்கட்சி அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டது. அரசு தோற்கடிக்கப்பட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

தொடரும்

# கள்வனின் காதலி

**சிறுகதை**

பாலா.சங்குப்பிள்ளை

"ஏய் சின்னசாமி வயித்தைப் பசி கிள்ளுது. நீ என்னடான்னா பெரிய மகான் மாதிரி கொளுத்துற வெயில்ல வெறுங்காலோட யோசனையோட நடை போட்டுக்கிட்டிருக்கே... உன்னோட சேர்ந்து ஒரு மாசம் ஜெயில்ல இருந்தாச்சி. கையில மடியில ஒண்ணுமில்லை.... பசி தாங்கலை.."

"டேய் பெரியசாமி உனக்கு ஒண்ணு தெரியுமா.... திறமையான பூனைக்கு கொழுத்த எலி கிடைக்கும். ஆத்தாமேல சத்தியம் உனக்கு விருந்தே வச்சிடுறேன்....."


"ம்... இதுல ஆத்தாவெல்லாம் இழுக்காதே. ஆத்தா ஆடு வளர்த்தா, கோழி வளர்த்தா... ஆனா வருத்தப்படலை. உன்னை மாதிரி எருமைமாட்டை வளர்த்துவிட்டதனால இப்போ சிறுமைப்பட்டுக்கிடக்கிறா...."

"சும்மா வழவழன்னு கதைச்சி வெறுப்பேத்தாம நான் சொல்றதை கேளு. முதல்ல வயிறார சாப்பிடுவோம். அப்புறமா நல்ல திட்டம் போடுவோம்....."

"ஆமா ஏற்கனவே உன் திட்டத்தை கேட்டு நடந்ததாலத்தான் உன்னோட சேர்ந்து நானும் உள்ளுக்குப் போனேன்....."

"ஏய்... சும்மா கத்தாம சொல்றதை மட்டும் கேளு.... இப்போ நாம அந்த ஹோட்டலுக்குப் போறோம். ஒவ்வொரு நாளும் சரியா எட்டு மணிக்கு கல்லாவுல காசு எடுக்கிறவன் சாப்பிடப் போயிடுவான். வேறொருவன் வந்திடுவான். இந்த இடத்துலதான் நாம விளையாடப் போறோம்.....கொஞ்சம் காதைக் கொண்டுவா...."

"அட உன் திட்டம் நல்லா இருக்கே...."



இருவரும் அந்த உணவகத்தினுள்ளே சென்றார்கள். கூட்டம் அதிகமாக இருந்தது. இருவரும் பயமேதுமில்லாமல் வயிறார சாப்பிட்டார்கள். அப்போது எட்டு மணியாகியது. இருவரும் சாப்பிட்டு முடித்து சாப்பாட்டுக்கான பில்லுடன் வரிசையாக நின்று பணம் கொடுத்துக்கொண்டிருந்தவர்களுடன் வரிசையில் நின்றார்கள். பெரியசாமி- பணம் கட்டவேண்டிய இடம் வந்தபோது காசு வாங்கிக்கொண்டிருந்தவன் எழுந்து வெளியே போகவே வேறொருவன் வந்து அமர்ந்தான். இப்போது அவன் பெரியசாமியைப் பார்த்தான். பெரியசாமி பேசாமல் நின்றான்.

"எங்கே பணம்?" அவன் கேட்டான். பெரியசாமி கோபத்துடன் அவனைப்பார்த்தான்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன். எங்கே மீதிப்பணம்?"

"என்னது மீதிப்பணமா... இதோ பில் இருக்கின்றது. நீங்கள் இன்னும் பணமே கொடுக்கவில்லை...."

"என்ன விளையாடுகிறீர்களா..... சுளையா இருநூறு ரூபா கொடுத்துவிட்டேன். சாப்பிட்டது போக மிகுதி தொண்ணூறு ரூபா நீங்கள் தான் தரவேண்டும்....."

"நீங்கள் பணமே கொடுக்கவில்லை. பின் எப்படி நான் மிகுதிப்பணம் தரமுடியும்....!

"உங்களுக்கு முன்னாலிருந்தவர்தான் பணம் வாங்கினார். இரண்டு நூறுரூபா நோட்டுகளை நான்தான் எண்ணிக் கொடுத்தேன். வேண்டுமானால் கல்லாவைப் பாருங்கள்......"

"நான் கொடுத்த நோட்டுகள் இலேசாக மடிந்திருக்கும். இரண்டிலும் எழுத்திலும் எண்ணிலும் நூறு ரூபா என எழுதியிருக்கும். இரண்டுமே மண்நிறமானவை....."

அப்போது சின்னசாமி குறுக்கிட்டான்.

"யோவ் உங்க ரெண்டுபேரோட சண்டையில நான் கொடுத்த நூறுரூபாவை மறந்துடாதீங்க. எனக்கு மிகுதி அறுபது ரூபா தரவேண்டியிருக்கு....."

கல்லாவிலிருந்தவன் தலையைப்பிடித்துக்கொண்டு பிரமை பிடித்ததைப்போல விழிக்க சின்னசாமியும் பெரியசாமியும் மெதுவாக உணவகத்தை விட்டு நழுவி வெளியே வந்தார்கள்.

அந்த விலை மதிப்புள்ள அழகான கார்- கொழும்பு பிரதான வீதியில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. உள்ளே- விலையுயர்ந்த கோர்ட்,சூட்டுடன் சின்னசாமியும், பெரியசாமியும் அமர்ந்திருந்தார்கள். காரை மிக நிதானமாக ஓட்டிக்கொண்டிருந்த ஓட்டுநரின் பக்கத்தில் வாட்ட சாட்டமான அந்த முரட்டு மனிதன் அமர்ந்திருந்தான். அவன் உதட்டுக்கும் மூக்குக்கும் இடையிலிருந்த அந்தப் பெரிய மீசை அடிக்கடி துடித்துக்கொண்டிருந்தது.

"ஏய் சின்னசாமி என்கிட்டே பத்தாயிரம் வாங்கி பத்துநாளைக்கி மேலாயிடிச்சி. வட்டியோட சேர்த்து பன்னிரண்டாயிரம். இப்போ இந்த காரை வேறே மூணு மணித்தியாலத்துக்கு வாடகைக்கு கேட்டிருக்கே. எல்லாமா சேர்த்து பதின்நான்காயிரமாயிடிச்சி" எப்படி என் கணக்கை தீர்க்கப்போறே....?"

"யோவ் கந்துவட்டி கண்ணுசாமி சும்மா தொணதொணன்னு அறுக்காதே. நாங்க இல்லாட்டி உனக்கேது சம்பாத்தியம். தோட்டத்து பங்களாவுல சாதாரண அப்புவாயிருந்த நீ உன்னோட தொரகிட்ட என்னமோ தப்பு பண்ணிட்டு கொழும்புக்கு ஓடி வந்துட்டே. இங்கே மலையக மக்கள் தலையில மசால அரைச்சிக்கிட்டு ஆங்கபோட்ட ஓட்டுல மந்திரியாகிக்கிட்டு சுகபோகம் அனுபவிச்சிக்கிட்டிருக்கிற மந்திரி கால்ல விழுந்து அவரோட பீ. ஏ. அவுகிட்டே. அப்புறம் என்ன அவரு துருவுறதுல விழுந்ததை நைசா நீ உருவி உருவி ஒரு மாதிரி கார் பங்களான்னு ஆயிட்டே. என்னை மாதிரி ஏமாந்த சோணகிரிகள்கிட்டே மீட்டர் வட்டிக்குப் பணம் கொடுத்தே. நாங்களும் ஒழுங்கானவங்க இல்லை. அதுனால உன்னைமாதிரி ஆலுங்ககிட்ட மாட்டிக்கிட்டோம்....."

"இங்கபாரு சின்னசாமி. அனாவசியமா பேசி என் நேரத்தை வீணாக்காதே. மினிஸ்டர் ராத்திரி தேர்தல்ல பேசுறதுக்காக மலையகம் போறாரு.... அவருக்கு பயண ஏற்பாடு நான்தான் செய்யணும். அதுனால உறுதியா சொல்லு பணம் கிடைக்குமா கிடைக்காதா?"

"யோவ்..... நாங்க திருடனுங்கதான். ஆனா நியாயமானவங்க. நீயும் உன் தலைவரும் பொய்யும், புரட்டும் பேசி அப்பாவி மக்களோட சொத்தை கொள்ளையடிக்கிறீங்க. கொள்கையேயில்லாம கேவலம் பட்டம் பதவிக்காக நாக்கைப் போட்டு பொய்பேசி அவங்க வாக்கை திருடுறீங்க. ஆனா நாங்க வயித்துப்பிழைப்புக்காக திருடுறோம். இல்லாமைதான் எங்களை இந்த நிலைமைக்கு கொண்டு வந்திருக்கு.சரி..... உன்கிட்ட எங்களுக்கு என்ன பேச்சு. நாங்க சொல்ற மாதிரி நீ நடந்துக்க.... சொன்னபடி உன் பணம் உன் கைக்கு வரும்......"

அந்தக் கார் மிக பிரபல்யமான அந்த பெரிய ஹோட்டல் முன்னால் வந்து நின்றது. பெரிய பணக்காரர்கள் மட்டுமே சாப்பிடக்கூடிய அந்த ஹோட்டலில் சாதாரண வாடிக்கையாளர்களை பார்ப்பது அரிதிலும் அரிது. கண்ணுசாமி ஏதோ சொல்ல வாயெடுத்தார். சின்னசாமி முறைக்கவே பேசாமல் அவர்கள் இருவருடனும் உள்ளே நுழைந்தார். அன்று அந்த ஹோட்டலில் விசேஷ சிற்றுண்டியாக மரக்கறி போண்டாவும் தேங்காய் சட்னியுமாக இருந்தது. சின்னசாமி, பெரியசாமி, கண்ணுசாமி மூவரும் ஆளுக்கு இரண்டு போண்டாக்களை சாப்பிட்டார்கள். சின்னசாமி சாப்பிட்டதற்கான பணத்தைக்கொடுத்து போண்டா மிக சுவையாக இருந்ததாகவும் மேற்கொண்டு இருபது போண்டாக்களை பார்சல் செய்து வைத்திருக்கும்படியும் போகும் போது அதை எடுத்துச் செல்வதாகவும் ஹோட்டல் முகாமையாளரிடம் அதற்குரிய பணத்தையும் கொடுத்துவிட்டு காரில் ஏறினான்.

அவனின் நடவடிக்கைகள் எதுவுமே பெரியசாமிக்கு விளங்காவிட்டாலும் அவன் ஒன்றுமே பேசவில்லை. சின்னசாமியுடன் மூன்று வருடங்களாக அவன் ஒன்றாக பழகி வருகிறான்: காரணமில்லாமல் அவன் எதையுமே செய்யமாட்டானென்பது அவனுக்குத் தெரியும்.

இப்போது அந்தக்கார் மிக பிரபல்யமான அந்த நகைமாளிகைக்கருகில் நின்றது. கண்ணுசாமியை காரிலேயே இருக்கச்சொல்லிவிட்டு பெரியசாமியுடன் சின்னசாமி மாளிகையினுள்ளே நுழைந்தான். அண்மையில் திறக்கப்பட்ட அந்த நகைமாளிகையின் உரிமையாளர் மிகவும் மரியாதையுடன் அவர்களை உபசரித்து அமர வைத்தார். உடனடியாக அவர்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது. சின்னசாமி அலட்சியமாக உரிமையாளரைப் பார்த்தான். எங்களுக்கு ஐம்பது லட்சத்துக்கு நகைகள் தேவைப்படுது. என்னோட தங்கைக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கு. அமெரிக்காவுல இருந்து மூத்த அண்ணன் போனவாரம்தான் வந்தாரு. அவருக்கு நிறைய வேலையிருக்கு. உங்களோட நகைகள் தரமானதா லேட்டஸ்ட் டிசைன்னா இருக்கான்னு அண்ணன் பார்க்கணும். அவர் ஓகே சொல்லிட்டா ஐம்பது லட்சம் வியாபாரம் உங்களுக்கு கிடைக்கும். அதுனால இப்போதைக்கு முப்பதாயிரத்துக்கு மட்டும் நகை குடுங்க..... அவர் சரின்னுட்டா மிச்சத்தை உடனே வாங்கலாம்......"

ஐம்பது லட்ச வியாபாரம் என்றவுடனேயே உரிமையாளருக்கு வாயெல்லாம் பல். சுமார் பத்து நிமிடத்தில் முப்பதாயிரத்துக்கு சின்னசாமி நகைகளை வாங்கினான். பில் போடப்பட்டது. சின்னசாமி பத்தாயிரத்தை எடுத்து உரிமையாளரிடம் நீட்டினான் . உரிமையாளர் புரியாமல் அவனைப்பார்த்தார்.

"முதலாளி அவசரத்துல பத்தாயிரத்தை மட்டும்தன் கொண்டுவந்தேன். என்னிடம் காசோலை இருக்கு ஆனா முதல் வியாபாரம் இல்லையா- காசோலை கொடுக்கிறது நல்லா இருக்காது. நீங்க விரும்பினா என்னோட கார்ல உங்கள் கடையில் வேலைசெய்யிற நம்பிக்கையான ஒருவரை அனுப்புங்க. எனக்கு ரொம்ப வேண்டியகடையொன்னு இருக்கு. அங்கே மிகுதி இருபதாயிரத்தைக் கொடுத்தனுப்புறேன்...."

உரிமையாளர் சந்தோஷத்துடன் நகைகளை சின்னசாமியிடம் கொடுத்து தன் கடைப் பையனையும் அனுப்பி வைத்தார். கடைப் பையனுடன் அந்தக்கார் மறுபடியும் வேகமாக ஓடியது. அந்த ஹோட்டலை அண்மித்ததும் கார் நின்றது. சின்னசாமி கார் ஓட்டுநரிடம் 'ஹோர்ன்' அடிக்க சொன்னான். சத்தம்கேட்ட ஹோட்டல் முகாமையாளர் வெளியே வந்து எட்டிப்பார்த்தார். சின்னசாமி காரிலிருந்தவாறு சத்தமிட்டான்.

"அந்த இருபதை இந்தப் பையனிடம் கொடுத்துவிடுங்கள்......" முகாமையாளர் சரியெனத் தலையசைக்க கடைப்பையன் காரை விட்டு கீழே இறங்கி ஹோட்டலுக்குள் நுழைய கார் மறுபடியும் வேகமாக ஓடியது. சின்னசாமி நகைகளை வெளியே எடுத்தான்.

"இந்தா கண்ணுசாமி..... இதுல பதினைந்தாயிரம் பெறுமதியான நகை இருக்கு. இனி உனக்கும் எங்களுக்கும் எந்தக் கடனும் இல்லை. எங்களை அந்த இடத்தில் இறக்கிவிடு..... நாங்க பஸ்ல போய்க்கிறோம்......"

சின்னசாமியும், பெரியசாமியும் காரிலிருந்து இறங்கினார்கள்; பஸ்ஸில் ஏறினார்கள்; இறங்கினார்கள்; நடந்தார்கள்; அந்த சிறிய அறையை அடைந்தார்கள். உடை மாற்றினார்கள். சின்னசாமி களைப்புடன் அந்த உடைந்த கயிற்றுக்கட்டிலில் அமர்ந்தான். பெரியசாமி அனுதாபத்துடன் அவனைப் பார்த்தான்.

"சின்னசாமி..... எதுக்காக இவ்வளவு கஷ்டப்படுறே. கஷ்டப்பட்டுத் தேடுற பணத்தை சந்தோஷமா அனுபவிக்காம யாருக்குக் குடுக்குறே.... எனக்கு ஒண்ணுமே புரியலை. இந்த ரெண்டு வருஷமாத்தான் இப்படி செய்யிறே. கேட்டா ஒண்ணுமே சொல்ல மாட்டேன்னுறே. நான் ஐஞ்சு வருஷமா உன்னோட இருக்கேன். தோட்டத்துல சோத்துக்கு வழியில்லாமத்தான் உழைச்சி பிழைக்க இங்கே கொழும்புக்கு வந்தேன். ஆனா நேர்மைக்கு இங்கே வேலையில்லைன்னு ரொம்ப சீக்கிரத்திலேயே தெரிஞ்சுகிட்டேன். பணமில்லாம பசியோட வீதியில சுருண்டு கிடந்த என்னை நீதான் காப்பாத்தி கூட்டிவந்தே. நீ செய்யிற தொழில் நேர்மையானதில்லையென்று எனக்குத் தெரியும். வீணா வேதாந்தம் பேசி காலத்தை வீணாக்க நானும் விரும்பலை. ஏன்னா எனக்கும் அங்க குடும்பம் இருக்கு. அவங்களை காப்பாத்துறது என்னோட கடமை. ஆரம்பத்துல நீ திருட்டு மூலமா சம்பாதிச்ச பணத்தை ரொம்ப ஜாலியா செலவு செஞ்சே. ஆனா இந்த ரெண்டு வருஷமா உன் செயற்பாடுகள் எல்லாமே புரியாத புதிரா இருக்கு. உன் நலன்ல அக்கறையுள்ளவன்னுற முறையில கேட்குறேன்.

(27 ஆம் பக்கம் பார்க்க)



'ஆதி'யால் ஆட்டம் கண்ட விஜய் அடுத்து கொடுக்கிற படம் அதிரடியாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் என்பதும் தெரியும். அதுக்காக அவர் கடந்த ஆறு மாதமாகக் கதைகள் கேட்டுக்கொண்டிருக்கிறார். எந்தக் கதையுமே கிடைக்கவில்லையாம். கடைசியாக 'பங்காரம்' படத்தை ஒரு கோடிக்கு மேல் விலைகொடுத்து வாங்கினார். அதுவும் வீணாகப்போக... இப்போது அதே தெலுங்கிலிருந்து மஹேஷ்பாபு நடித்த 'போக்கிரி'யை வாங்கியிருக்கிறார். இந்தப்படத்தை டான்ஸ் மாஸ்டர் பிரவுதேவா இயக்கப்போகிறார். அஜித் நடித்த 'பரமசிவன்' படத்தின் தயாரிப்பாளர் ரமேஷ் தான் இந்தப் படத்தை தயாரிக்கப்போகிறார். ஆனால் இந்தமுறை விஜயின் கணக்கு வேறுமாதிரி இருக்கிறது என்ன? பாலா, அஜித் இருவரும் சேர்ந்து இயக்குவதாக இருந்த 'நான் கடவுள்' படம் சில காரணங்களால் நின்றுவிட்டது. அந்தப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடிக்க பவனாவை ஒப்பந்தம் செய்து வைத்திருக்கிறார்கள். அதே பாவனாவை தன்னோடு ஜோடி சேர்க்க ஆசைப்படுகிறார் விஜய். அதற்கான வேலைகள் தடல்புடலாக நடந்துகொண்டிருக்கின்றன. அது எப்படி?

# அசின், த்ரிஷாவைவிட்டு புதிய ஜோடிக்கு வலை வீசுகிறார் விஜய்





எம்.எஸ்.பிரபுவின் உதவியாளராகப் பணியாற்றியவர் பரணி. 'வாலி', 'ரமணா', 'நாட்டாமை' (ஹிந்தியில் ரஜினி நடித்தது), 'தவமாய் தவமிருந்து' என பல படங்களில் எம்.எஸ்.பிரபுவிடம் பணி புரிந்துவிட்டு குண்டக்க மண்டக்க படம் ஒன்றை தனி ஆவர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார் பரணி. 'நீ வேணும்டா செல்லம்' படத்தின் பாடல் காட்சிகளில் பரணி

# சிம்ரனுக்கு பிறகு கவர்ச்சிகரமான உடல்வாகு உள்ள நடிகை நமீதா

கைவண்ணம் காட்டியிருப்பதைப் பார்த்து எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்க... நாமும் அவருக்கு ஒரு பாராட்டைச் சொன்னோம்.

ஒளிப்பதிவில் உங்களுடைய தனித்துவம் என்ன என்று கேட்க. 'நீ வேணும்டா செல்லம்' படத்தில் என்ன அதிசயம் இருக்கிறது என்கிறார்.

"பாடல் சாலக்குடியில் எடுக்கப்பட்டது. மலைக்கு மேலே எங்களால் ஜெனரேட்டரை கொண்டுசெல்ல முடியவில்லை. காரணம் 600 மீட்டருக்கு மேல் கேபிளை இழுக்க முடியவில்லை. வேறு வழி? வேறு வழி இல்லாமல் அந்தப் பாடலைஅப்படி இப்படி முடித்து விட்டோம். அந்தப் பாடலைப் பார்த்த என் குருநாதர் பிரபு பலமுறை பாராட்டிவிட்டார். இப்படி சூழ்நிலைக்கேற்ப பல பல விஷயங்களை பண்ணுவேன்".

"இதுவரை யாரும் படம் பிடிக்காத அளவிற்கு நமீதாவை படம்பிடிச்சிருக்கிறீங்களே?" சிம்ரனுக்குப் பிறகு

"கவர்ச்சியான உடல்வாகான நடிகை நமீதா. அழகான விஷயங்களைப் பார்த்தால் கமெரா கண்கள் சும்மா இருக்குமா" என்று சொல்லிவிட்டு சிரிக்கிறார் பரணி.



# கடவுளுக்கே சோதனை

'நான் கடவுள்' படத்தின் மூலம் இணையவிருந்த அஜித், பாலா இருவரும் பிரிந்துவிட்டதாக பேசப்படுகிறது. இது குறித்து அப்படம் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்தபோது அது நிஜம் தான் என்பது புரிந்தது.

சரி பாலாவின் படத்தின் அடுத்த ஹீரோயின் யார்? 'சித்திரம் பேசுதடி' நரேன் என்கிறார்கள். அதுவும் உறுதி செய்யப்படவில்லையாம்.

அடுத்து அஜித் நடிக்கவுள்ள படத்தை சேலம் சந்திர சேகர் தயாரிப்பார் என்று கூறப்படுகிறது.

இது குறித்து அஜித்திடம் விசாரித்தபோது நான் இன்னும் எந்த முடிவுக்கும் வரவில்லை என்று கூறுகிறார்.

கடவுளுக்கே சோதனை!

# சிரஞ்சீவியுடன் ஊர் சுற்றும் த்ரிஷா

காலில் சக்கரமும், தோளில் சிறகும் முளைக்காததுதான் குறை பறந்து கொண்டேயிருக்கிறார் த்ரிஷா. குளியல் சி.டி. அம்பலத்துக்கு வந்தத த்ரிஷா முகம் காட்ட மறுக்கிறார் என்று நீங்கள் நினைத்தால் அது தப்பு தமிழில் த்ரிஷாவை பார்ப்பது அத்தி பூத்தால்போல் ஆகிவிட்டது என்ற தெலுங்கு திரையுலகிலும் இதே நிலைதான். அங்கு நம்பர் ஒன் ஸ்தானத் இருக்கும் த்ரிஷாவின் திருமுகத்தை ஆந்திரா வாசிகளும் நேரில் பார்ப்பது அரிதாகிவிட்டது. அவர் நடிக்கும் படங்களில் குறைந்தது இரண்டு பாடல் காட்சிகள் வெளிநாட்டில் எடுக்கப்படுவதால் தான் நடிக்கும் படத்தின் நாய கருடன் வெளிநாட்டு டூர் அடிப்பதற்கே நேரம் சரியாகி விடுகிறது. கடைசிய சிரஞ்சீவியுடன் வெளிநாடு பறந்துள்ளார்.

# சுஜிபாலா இடுப்பில் நாடா கட்டிய ஹீரோ

கதைக்கு மூளையை செலவிடுகிறார்களோ இல்லையோ கிளாமர் காட்சிகளுக்கு பஞ்சமில்லாமல் யோசிக்கிறார்கள் இயக்குனர்கள். படப்பிடிப்பு தளத்துக்குள் நுழைந்தபோது அங்கு பார்த்த காட்சி தலையில் அடித்துக் சொல்ல வைத்தது. நாயகி சுஜிபாலாவின் இடுப்பில் இரண்டு அங்குல உயரத்திற்கு சுற்றப்பட்டிருந்த பாவாடையில், அவிழ்க்கப்பட்டிருந்த நாடாவை பல்லால் இறுக்கி சுருக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார் ஹீரோ பிரதாப்.

இதுவென்ன புது சாதனை...! என்று இயக்குனர் ஏ.எம்.பாஸ்கரிடம் கேட்டால் "நம்ம கண்டுபிடிப்புத்தான்.." என குதூகலிக்கிறார். "தொப்புள்ள பம்பரம் விட்டாச்சு, ஆம்லெட் போட்டாச்சு அதுதான் கொஞ்சம் புதுசா யோசிச்சு ஹீரோயின் பாவாடை நாடாவை பல்லால் கட்டிவிடுற மாதிரி கிளுகிளுப்பான சீன் பிடிச்சோம்" என்கிறார்.

கதைப்படி சுஜிபாலா ரிப்போர்ட்டராகவும், ஹீரோ பிரதாப் சுஜியின் காலேஜ் மேட்டாகவும் வருகிறார்கள். இருவரும் டூயட் ஆடும் கனவு பாடலில்தான் இப்படி ஒரு காட்சி வருகிறதாம்.. படப்பிடிப்பு முடிந்ததும் வந்த சுஜிபாலாவிடம் இந்த சீனை நடிக்க எப்படி சம்மதிச்சீங்க என்றால், "நடிப்பதற்கு வந்துட்டா எது எப்படி என்றாலும் நடிச்சுத்தானே ஆகணும்" என்றார் கூலாக.

அடப் பாவமே... கை நீட்டி காசு வாங்கிட்டால் கதாநாயகியும் கதாநாயகனும் கண்டதையும் செய்ய வேண்டியிருக்கே?



# காவல்துறையின் கெடுபிடிக்குள் காதல் கடிதம் வெளிவருகிறது



ஆகாயம் இத்தனை நாள் மண் மீது விழாமல் தூணாகத் தாங்குவதே காதல் தான்! ஆண்டாண்டு காலங்கள் பூப்பூக்க அழகான காரணமே காதல்தான் இவ்வாறு இதமான காதலை 'காதல் கடிதம்' திரைப்படத்தின் ஊடாக இயக்குனர் முகேஷ் அவர்களின் கை வண்ணத்தில் காதலுக்கு புது அர்த்தம் கொடுத்திருக்கின்றார்.

இலங்கையும் இந்தியாவும் இணைந்த கதையுடன் ஈழத்தின் சிறப்பை மெருகூட்ட வந்த இந்திய படப்பிடிப்பு குழுவிற்கு இங்கு என்ன நேர்ந்தது. 'காதல் கடிதம்' திரைப்படத்திற்கு இரண்டு நாட்கள் கொழும்பு பல்கலைக்கழகம்சென்னை இசைக்கல்லூரியாக மாற்றப்பட்டு படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த அந்த வேளை திடீரென அங்கு வந்த சி.ஐ.டியினர் படப்பிடிப்பை நிறுத்தி எல்லோரையும் விசாரணை செய்தனர். ஆள்அடையாள அட்டை மற்றும் ஆவணங்களை பரிசோதனை செய்தனர். சில மணி நேரம் படப்பிடிப்பு தாமதமடைந்தது. இதைத் தொடர்ந்து திரைப்படக்கூட்டுத்தாபனத்துக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. அங்கிருந்து உயர் அதிகாரிகள் நேரில் வந்து சி.ஐ.டியினருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பின்னர் அவ்விடத்தைவிட்டு வெளியேறினர். அதன் பின்னர் தொடர்ந்து படப்படிப்பு நடைபெற்றது.

இவ்வாறு பல சிரமத்தின் மத்தியில் படப்பிடிப்பு செய்யப்பட்ட 'காதல் கடிதம்' திரைப்படத்தை இன்னும் சில வாரங்களில் வெண்திரையில் காணலாம்.

# சினி மினி

★ சிம்ரனுக்கு தமிழில் வாய்ப்புகள் கிடைக்காததால் தெலுங்கில் ராஜசேகர் இயக்கும் படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதுவும் சிம்ரன் குண்டாக இருப்பதை காரணம் காட்டி அந்த வாய்ப்பும் கை நழுவிப்போயுள்ளது.

★ சிம்பு இயக்கும் 'வல்லவன்' படத்தில் ரீமாசென்னும் ஒரு நாயகி. தன்னை முழுப்பாடலில் நடிக்க வைப்பதாகக் கூறி அரைபாடலில் மட்டும் நடிக்க வைத்த சிம்பு மீது கோபம் கொண்டு சிம்பு மீது வழக்கு தொடர இருப்பதாக மிரட்டல் விட்டிருக்கிறார்.

★ 'சிவாஜி' படத்திற்கான பாடல் காட்சி ஒன்று ஸ்பெயின் நாட்டில் ஒளிப்பதிவு செய்யப்பட இருக்கிறது. இதற்காக ரஜினி, ஸ்ரேயா, ஷங்கர், ஒளிப்பதிவாளர் ஆகியோர் உட்பட முப்பது பேர் ஸ்பெயின் சென்றிருக்கிறார்கள். இக்குழுவில் பிரவுதேவாவ்ும் இடம்பெறுகிறார்.

★ உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களின் எதிர்ப்பை சம்பாதித்த 'தி டாவின்சி கோட்' வசூலில் புதிய சாதனை படைத்திருக்கிறது. எதிர்ப்பு தெரிவித்த கிறிஸ்தவர்களே படத்தில் அப்படி என்னதான் இருக்கிறது என்று சொல்லி படத்தை பார்ப்பதற்கு கூட்டம் கூட்டமாக நிற்கிறார்கள்.

★ விலங்குகள் நலவாரியத்திடம் அனுமதிபெற்ற பின்னரே விலங்குகளை படத்தில் பயன்படுத்த வேண்டும். அப்படி அனுமதி பெறாமல் 'இம்சை அரசன் 23-ம் புலிகேசி'யில் குதிரைகளை பயன்படுத்தியதால் இப்படம் வெளியாவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

★ 'வீரச்சாமி'யில் அறிமுகமாகிய மேக்னா நாயுடு சிம்புவின் 'சரவணா' படத்தில் செம குத்தாட்டம் போட்டிருக்கிறார். இவர் தமிழை விட இந்திக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்.

# தியாவின் ஸ்னூபி

தியாவின் புதிய வீட்டினுள் உள்ள மீன்தொட்டியில் நீந்திக் கொண்டிருக்கும் வாஸ்து மீனைப்பார்ப்பவர்கள் அதன் விலையைக் கேட்டால் வாயைப் பிளப்பார்கள். மலேசியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்த மீனின் விலை இருபது ஆயிரம் ருபா. அதற்கு ஸ்னூபி என்று செல்லப் பெயர் இட்டுள்ள தியா, "இது வீட்டில் இருந்தால் போதும் கஷ்டம் அண்டாது. என்ன சோதனை வந்தாலும் அது ஏற்றுக் கொள்ளும்" என்றார். தினமும் இந்த வி.ஐ.பிக்கு 5 சின்ன மீன்களை உணவாக கொடுக்க வேண்டுமாம்.

# பலிவுட் பேய்



பலிவுட்டில் பேய்ப் படங்களுக்கு எப்போதுமே தனி மார்க்கெட்தான். பிரபலமான ராம்சேகலை குடும்பத்தினர் இதுவரை 30 பேய்ப்படங்களுக்கு மேல் தயாரித்து கோடிக் கணக்கில் சம்பாதித்தவர்கள்.

அவர்களின் அடுத்த படம் 'ஆத்மா' விரைவில் வெளிவர இருக்கிறது. இப் படத்தில் பேயாக நடித்திருப்பவர் அள்ளித்தந்த வானம் பட ஹீரோயின் நேகா. படத்தில் தான் நடித்த படத்தை பார்த்தே மயக்கமாகி விழுந்துவிட்டாராம். மேக்-அப் இல்லாமல் நடித்திருப்பாரோ என்னவோ.

இப்படம் இந்தியிலும் வெளியாகும். அதே நாளில் தமிழிலும் வெளியாகிறது.

# பரத்தின் வருத்தும்



'பாய்ஸ்' படத்தில் நான்கு ஹீரோக்களில் ஒருவராக நடித்த பரத் இன்றைய தேதியில் நாலுபேர் பாராட்டக் கூடிய இளம் நடிகர். 'வெயில்', 'கூடல் நகர்', 'சென்னைக் காதல்' என்று தொடர்ந்து வெளிவர இருக்கிறது பரத்தின் மிரட்டல் படங்கள். ஆனாலும் 'காதல்' படத்தை மையமாக வைத்தே பரத்தின் படங்கள் அலசப்படுகின்றன. 'காதல்' தமிழரின் தலைசிறந்த படங்களில் ஒன்று என்று கூறுகிறார்கள்.

அது மிகப்பெரிய வெற்றியை பெற்றதால் எனது மற்ற திரைப்படங்களை 'காதலுடன்' ஒப்பிட்டுப் பார்த்து ஒதுக்குகிறார்கள் என்று வருத்தப்படுகிறார் பரத்.

# பாழடைந்த கிணற்றில்

மகன் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் வீடு வந்து தம்முடன் காலத்தை கடத்துவான் என டூம் தம்பதிகள் காத்திருந்தனர். மகன் வரவில்லை. ஆனால் அன்னை ஒரு கனவு கண்டாள். தன் மகன் கொலை செய்யப்படுவதாக அந்த கனவு அமைந்திருந்தது. பொலிஸில் முறைப்பாடு செய்தார்கள். இன்ஸ்பெக்டர் கொலின் விழுந்து விழுந்து சிரித்தான். அப்புறம்...! அட வாசியுங்களேன்.






எழுதுவது: கே.வி

மகன் எரிக் கிடமிருந்து கடிதம் வந்திருந்ததால் டூம் தம்பதிகள் அளவு கடந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்து விட்டிருந்தார்கள். முதுமையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த அவர்கள் ஒரே மகன் எரிக் எப்போதும் தம்முடனே இருக்க வேண்டும் என கனவு காண்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே.

எரிக் இராணுவத்தில் சேவையாற்றி வந்தான். இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்ததும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று மகன் தம்மோடு வந்து இணைந்து கொள்வான் என்றே அந்த வயோதிப தம்பதி நினைத்தது.

பெற்ற மனங்கள் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைத்து விட்டது போலும். அவன் தனது இராணுவ நண்பனொருவனுடன் சேர்ந்து வியாபாரத்தில் இறங்கி விட்டான்.

இப்பொழுது அவனிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. 'அம்மா, அப்பா சுகமாக இருக்கிறேன். இதோ உங்களைப் பார்க்க புறப்பட்டு விட்டேன்' என்று அன்பொழுக எழுதியிருந்தான். கடிதம் பெற்றோரை உணர்ச்சி கொள்ள வைத்தது.

அன்று முழுவதும் எதனையும் சாப்பிடாமல் மகனின் வருகைக்காக டூம் தம்பதி காத்திருந்தது.

யேசுவே! நடுச்சாமம் கடந்தும் அவன் வரவில்லை. நிமிடங்கள் மணித்தியாலங்களாகி, மணித்தியாலங்கள் நாட்களாகி, நாட்கள் வாரங்களாகின. மகன் வரவில்லை.

ஒருநாள் நடுச்சாமத்தில் திருமதி டூம் வீலென கிரீச்சிட்டு அலறினாள். படுக்கையிலிருந்து உருண்டு விழுந்த மிஸ்டர் டூம் "ஐயோ! என்ன நடந்துவிட்டது" என எழுந்து நின்று கத்தினார். அவருடைய கால்கள் படபடவென பயத்தால் ஆடின. ஒருபோதும் அவ்வாறு அலறாத மனைவியின் கதறல் அவரை நடுங்க வைத்தது.

தூக்கத்திலிருந்து திடுக்குற்று விழித்த திருமதி டூம், போர்வையை தூக்கி எறிந்துவிட்டு, ஓடோடிச் சென்று சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மகனின் படமருகில் சென்று அதனைப் பார்த்து, தொட்டு முகர்ந்து கொண்டு கதறினாள்.

'ஐயோ'! என் கண்மணியே உன்னை கொன்றுபோட்டு விட்டார்களே! என நெஞ்சு வெடிக்குமாப் போல் அலறினாள்.

ஒன்றுமே புரியாமல் தடுமாறி கதிகலங்கிப்போன மாஸ்டர் டூம் ஓடிப்போய் சுவரில் தலையை மோதிக் கொண்டிருந்த மனைவியின் தோள்பட்டையைப் பிடித்து, இழுத்து அணைத்து "ஐயோ! என்ன சொல்கிறாய் டார்லிங்" என பதறினார்.எல்லாம் ஒரு கனவு ஏற்படுத்திவிட்ட பதற்றம்.

ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது திருமதி டூம் அந்தக் கனவைக் கண்டாள்.அக்கனவில் துப்பாக்கிச் சூட்டிற்கு மகன் இலக்காவதையும், மகனுடைய சடலம் பாழடைந்த கிணறொன்றில் புதைக்கப்படுவதாகவும் அந்தக் கனவு இருந்தது.

"கனவுதானா? என ஆசுவாசப் படுத்திக் கொண்ட மிஸ்டர் டூம் மனைவியை அமைதிப்படுத் தினார். "பைத்தியம்! பைத்தியம்! மகனுக்கு ஒன்றும் ஏற்பட்டிருக்காது. நம் மகன் இராணுவ வீரன். அவனை யார் என்ன செய்ய முடியும்? எல்லாம் உன் கற்பனை. சும்மா அலட்டிக் கொள்ளாதே" என்று ஆறுதல் சொன்னார்.

என்றாலும் திருமதி டூமினால் அமைதியாக இருக்க முடியவில்லை. அதுவும் 'மகன் வருவதும் அடியோடு நின்று போய்விட்டதால் அவள் அடிக்கடி அச்சத்தினால் கத்தினாள். கணவனை சதா நச்சரித்தாள். பொலிஸில் போய் முறையிடும் படியாகச் சொன்னாள். ஆனால் மிஸ்டர் டூம் அவளை நிம்மதியாக இருக்கும் படியும் ஒரு கனவைப் போய் உண்மை என சொல்லி புகார் செய்தால் பொலிஸார் அதைப் பதிவு செய்யமாட் டார்கள். கேலி செய்வார்கள் என்றும் கூறி மறுப்புச் சொன்னார். ஆனால் எரிக்கின் தாயார் விட்டபாடாக இல்லை. என்னதான் மனைவியை சமாதானப்படுத்தினாலும் மிஸ்டர் டூமிற்கும் மனதில் நிம்மதி போய்விட்டது. எனவே மனைவியையும் கூட்டிக்கொண்டு முதலில் தனது மகன் வியாபாரத்தை காப்புறுதி செய்திருப்பதாகச் சொன்ன கம்பெனி நினைவுக்கு வரவே அதனைத் தேடிச் சென்றார்.

காப்புறுதி நிறுவனத்தின் முகாமை யாளரை காணச் சென்றதும் மிஸ்டர் டூமிற்கு தலைகால் புரியாத சந்தோஷம் ஏற்பட்டது. அந்த முகாமையாளர் அவருடைய பாலிய கால நண்பன் ரிச்சர்ட்டாகவிருந்ததுதான் அந்த மகிழ்ச்சிக்கும் காரணம்.

இருவரும் சந்தோஷத்தில் கைகுலுக்கிக் கொண்டார்கள். டூம் தனது மகன் குறித்துச் சொன்னார். அவன் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் வியாபாரத்தில் குதித்து விட்டதாகவும் ஆனால் அவன் எங்கிருக்கிறான், என்ன வியாபாரம் செய்கிறான் என்று தமக்கு தெரியவில்லையென்றும், பல மாதங்களாக அவன் எங்களை பார்க்க வராததினால் மனம் நொந்திருப்பதாகவும் சொன்னார்.

'ஓ! ரொம்பவும் துக்கமான கதை' என நெற்றியில் தட்டிக்கொண்ட முகாமையாளர் "அதுசரி, இப்போ நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"மகனைப் பற்றிய விவரங்கள் வேண்டும். அவனை சந்திக்க வேண்டும். இல்லையென்றால் மண்டையே வெடித்துவிடும் போலிருக்கிறது. அவனுடைய அம்மா அரைப்பைத்தியமாகிவிட்டாள். போதாததற்கு ஒரு கொலைகார கனவை கண்டு மகனை யாரோ கொன்றுவிட்டார்கள் என சதா ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறாள்" என்று படபடவென்று சொல்லிக்கொண்டே போனார்.

இவர் இப்படி சளசளவென கதை சொல்லிக் கொண்டிருந்தபோதே முகாமையாளர் பல பைல்களை புரட்டத் தொடங்கி எதையோ கண்டுபிடித்துவிட்டார். அவர் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது.

"மிஸ்டர் டூம் கவலையை விடுங்கள். இதோ மகன் நம் நிறுவனத்திற்கு வியாபார அபிவிருத்திக்கென பணம் கேட்டு அனுப்பி வைத்துள்ள கடிதங்கள் இருக்கின்றன. அதுமட்டுமின்றி அவருக்கு ஏதோ ஒரு நஷ்ட ஈடாக ஏராளமான பணமும் கொடுத்து உதவியிருக்கிறோம்" என்று சொல்லிக் கொண்டு சில பத்திரங்களையும் நீட்டினார்.

மிஸ்டர் டூம் தம்பதிகள் மகிழ்ச்சியில் பூரித்துப் போனார்கள். ஏனெனில் அவை இரண்டொரு நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள கடிதங்களாகவிருந்தமையால் அன்னையின் துர்க்கனவு பொய்யாகிவிடும் என்ற மகிழ்ச்சியே அது.

மிஸ்டர் டூம் ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு ஆவலோடு அவற்றில் கண்களை ஓட்டினார்.

மகனின் கையெழுத்தின் மீது அவர் பார்வை ஓடியபோது கண்மணிகள் சுருங்கின. சில ரகசியமான குறியீடுகளை அவர் மகனுக்கு கற்றுக்கொடுத்திருந்தார். அவை மிகவும் நுணுக்கமானவையாகும். அந்த குறியீடுகள் அதில் காணப்படவில்லை.

நிச்சயமாக இது மகனுடைய கையெழுத்தல்ல என்பதை அவர் கண்டு கொண்டார். இந்த விவரத்தை சொன்னபோது முகாமையாளர் வெலவெலத்துப் போனார். பாலிய நண்பன் ஆச்சே என்று உதவப் போய் ஆசாமி வேலைக்கே உலை வச்சிட்டானே என்று அசூசையுடன் முணுமுணுத்துக் கொண்டார்.

ஏதோ பாரதூரமான விஷயம் நடந்துவிட்டிருக்கின்றது என்பதை ஊகிக்க மிஸ்டர் டூமிற்கு அதிக நேரம் எடுக்கவில்லை. மனைவியிடம் எதுவும் சொல்லாமல் மகனின் கணக்கு வழக்கு இருப்பதாகச் சொன்ன வங்கிகளுக்குச் சென்றார். அங்கும் மகனின் போலி கையெழுத்தில் பணம் அறவிடப்பட்டிருப்பதைக் கண்டார். இனியும் அமைதியாக இருப்பது சரியல்லவென நினைத்த அவர் பிரதேச புலனாய்வுத் துறையினரிடம் சரணடைந்து சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் கொலின் என்பவரிடம் சகல விஷயங்களையும் சொன்னார்.

சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் கொலின் ஒரு தமாஷான பேர்வழி. திருமதி டூமின் கனவு குறித்து மிஸ்டர் டூம் குறிப்பிட்டபோது, கொழுத்த சதைப்பிடிப்பான அந்த இன்ஸ்பெக்டர் கடகடவென சப்தமிட்டு விழுந்து விழுந்து சிரித்தான். இந்தமாதிரி ஆன்மீகமான விஷயங்களையெல்லாம் அவர் நம்புவதில்லை.

"அகஸ்தா கிறிஸ்டியின் துப்பறியும் நாவல்களை அம்மா அதிகமாக படிப்பார்களோ" என கிண்டலாகக் கேட்டான். மிஷ்டர் டூமிற்கு மூக்குச் சிவந்துவிட்டது. மனைவியை அளவுக்கு அதிகமாகவே 'லவ்' பண்ணுகின்ற அவர்,

"இல்லை. அவள் பைபிளைத் தவிர எதையும் தொடுவதில்லை" சினம் தெறிக்கச் சொன்னார்.

"ஓ! அப்படியா?"

இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்துடன் தலையை ஆட்டினான்.

* * *

கொலினின் பொலிஸ் வாகனம் எசக்ஸ் மாநிலத்தை நோக்கி விரைந்தது. அங்கே ஒரு கிராமப் புறமான இடத்தில்தான் எரிக்கின் வெல்கம் குதிரை லாயம் இருந்தது. இருள் சூழத் தொடங்கியிருந்த நேரத்தில் வெல்கம் சென்றடைந்தார்.

அங்கே எரிக் இருக்கவில்லை. ஒரு பெண்மணியும் இரண்டு பிள்ளைகளும் இருந்தார்கள். பொலிஸ் வாகனத்தைக் கண்டதும் வீட்டினுள் இருந்த அவர்கள் ஓடோடி வந்து வாசலில் நின்று வண்டியிலிருந்து இறங்கும் குண்டோதரன் போன்ற கொலினை அச்சத்துடன் பார்த்தார்கள்.

"ஹலோ அம்மணி! எரிக் எங்கே?" கொலின் கேட்டார்.

"அவர் வீட்டில் இல்லை. அவருடைய பெற்றோரைப் பார்ப்பதற்காக இரண்டு மாதங்களுக்கு, முன்னர் சென்றார். இன்னும் வீடு திரும்பவில்லை."

"அது சரி நீ எரிக்கின் பொஞ்சாதியா?"

"இல்லை இல்லை நான் டயரின் மனைவி"

"டயர் எங்கே?"

"அவரும் வெளியூர் போயிருக்கிறார்"

(25ஆம் பக்கம் பார்க்க).

# பாழடைந்த...

(24 ஆம் பக்கத்தொடர்ச்சி)

"எதற்காக?"

"பிஸ்னஸ் சம்பந்தமாக"

"என்ன பிஸ்னஸ்?"

"பந்தயக் குதிரைகள் வாங்குவதும், விற்பனை செய்வதும், வாடகைக்கு விடுவதும். இவர்கள் இருவரும் தான் அந்த பிஸ்னஸ் செய்து வருகின்றார்கள்"

"எரிக் மோட்டார் பாகங்கள் வியாபாரம் அல்லவா செய்து கொண்டிருந்தார்"

"ஆமாமா! ஆனால் அது பெரும் நஷ்டத்தில் முடிந்ததால் இந்த குதிரை வியாபாரத்தில் இறங்கினார்கள்"

"ஓ! அப்படியா விஷயம்"

கொலின் வீட்டையும், தோட்டத்தையும் சுற்றி ஒரு பார்வை விட்டார்.

மனம் பகீரென அதிர்கின்றது.

டுமின் அம்மாவின் கனவும், அவர் விவரித்த சூழலும் சட்டென நினைவுக்கு வந்தன. அங்கே மூன்று பாழடைந்த கிணறுகளும் இருந்தன. இந்த இடம் அசப்பில் அப்படியே இருக்கின்றதே.

வாழ்க்கையில் அவர் முதன் முதலாக ஆடித்தான் போனார். தொடர்ந்து நடந்த சம்பவங்களால் மீளாத அதிர்ச்சியில் மூழ்கிப்போன அவர் அதன் பின்னர் தன்வாழ்நாள் முழுவதும் துப்பாக்கி வைத்திருக்கும் பாக்கெட்டில் ஒரு பைபிளையும் வைத்துக்கொண்டே கேசுகளை கண்டுபிடிப்பதற்காக வெளிக்கிளம்பும் அளவுக்கு கடவுள் நம்பிக்கை அவருக்கு முத்திவிட்டது.

கிணறுகள் தோண்டப்பட்டன. முதல் இரண்டு கிணறுகளிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை. மூன்றாவது கிணற்றில் எரிக்கின் சடலம் கிடைத்தது.

டயரின் மனைவி தன் கணவனே அந்த கொலையைச் செய்தான் என்பதை ஒப்புக் கொண்டாள். வழக்கம் போலவே தன் கணவனும், எரிக்கும் வெளியில் சென்றதாகவும், அதற்கு முன்னரே அவர்கள் சண்டை போட்டுக் கொண்டதாகவும், கள்ளக் கையெழுத்து காசோலை என்றெல்லாம் அவர்கள் ஏசிக்கொண்டதாகவும் அவள் சொன்னாள். சண்டை போட்டுக்கொண்டே அவர்கள் வெளியில் சென்றதால் நன்றாக குடித்துப் போட்டே வருவார்கள் என்று அவள் நினைத்தாள். குழந்தைகளை தூங்கவைத்து விட்டு அவள் விழித்திருந்தாள்.

நடுச்சாமம்

வளவுக்குள் வாகனம் திரும்பும் சப்தம் கேட்டது. அவள் மெதுவாக எழும்பி ஜன்னலால் எட்டிப் பார்த்தாள்.

வாகனம் கிணற்றடி வரை வந்தது. டயர் கிணற்றுக்குள் இறங்கி வெறும் மணல் மட்டும் இருந்த அதை மேலும் கொஞ்சம் தோண்டினான். அதன்பிறகு வாகனத்தில் சடலமாகக் கிடந்த எரிக்கை தொபீரென தூக்கிப் போட்டான். அவனும் இறங்கினான். மணலைப் போட்டு மூடினான்...!

கதையை மேலும் தொடரமுடியாமல் டயரின் மனைவி மூர்ச்சித்து விழுந்தாள்.

முற்றும்

# படுக்கையில் செல்போனா? வேண்டவே வேண்டாம்!

செல்போனைப் பயன்படுத்துவதால் மனிதர்களுக்கு மூளைப் புற்றுநோய் போன்ற வியாதிகள் வருகின்றனவா, அதனால் பாதிப்பு இருக்கிறதா என்று அறிய உலகம் முழுவதும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

1999ஆம் ஆண்டு வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் மின் அதிர்வுகள் துறையைச் சார்ந்த ஹென்றிலாய் என்பவர், 'குறைந்த அளவு மின்னணு அதிர்வு கூட எமது மூளையில் செயல்படும் டி.என்.ஏ மரபணுக்களை உடைத்துவிடக்கூடும்; அதனால் அல்ஸைமர், பார்க்கினச் போன்ற நோய்கள் ஏற்படக்கூடும்' என்று கூறியிருக்கிறார்.

இது உண்மைதானா என்று அறிய சுவீடன் பல்கலைக்கழகம், இளைஞர்களின் மூளை வளர்ச்சிக்கு ஓரளவுக்கு இணையாக இருக்கும் எலிகளின் மூளையைச் சோதனைக் குள்ளாக்கியது. மூன்று நான்கு மாதங்கள் தொடர்ந்து பரிசோதனைகள் செய்தபின்பு செல்போன் கதிர்வீச்சால் மூளை வளர்ச்சி குறைவடையும் என்று சுவீடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லெய்ட் சல்ஃபோர்ட் கூறினார்.

அடுத்து கண்புரை நோய்க்கு காரணமாக செல்போன்களின் கதிர்வீச்சு இருக்கலாம் என்று ஜெர்மனியின் ஈஸின் பல்கலைக் கழகம் அறிக்கை வெளியிட்டது.

அமெரிக்காவின் கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் 1999 இல் மனிதக் கருக்கள் போல் செயல்படும் சுமார் 10ஆயிரம் கோழிக் கருக்களின் மீது செல் போன் அதிர்வுகளைச் செயல்படுத்திப் பார்த்தார்கள். அதனுடைய வளர்ச்சி முழுமையாகப் பாதிக்கப்பட்டது தெரியவந்தது.

அது மட்டுமல்ல, தூங்கும் போது படுக்கையின் அருகில் செல்போன் வைத்திருந்தால் செல்போனின் ரேடியோ அதிர்வுகள் எமது மூளையின் செயலாக்கத்தை 50 நிமிடங்கள் வரை அதிகரித்து எமது தூக்கத்தைத் தடைபடச் செய்கிறது என்று சூரிச் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த பீட்டர் மற்றும் அலெக் ஸாண்டரின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 05-06-2006 முதல் 11-06-2006வரை

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 4 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் பலன் குறையும். தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ராசியில் நல்ல பலன் தருவார். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். (3,6) உரிய புதன் 3 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். 4 இல் செவ்வாய், சனி சேர்க்கை தாய்க்கு நல்ல பலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பு உண்டு. (9,12) உரிய குரு, 7 இல் இருப்பது விசேஷம். பிதா நலம், சயன சுகம் உண்டு. அதிஸ்டம் உண்டு. தெய்வீக பக்தி வளரும். (10,11) உரிய சனி, 4 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொது வாழ்வில் பிரச்சினை உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 12 இல் நல்ல பலன் தருவார். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். (2,5) உரிய புதன் 2 இல் நல்ல பலனைத் தராது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. 4 இற்குரிய சூரியன் ராசியில் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. (7,12) உரிய செவ்வாய் 3 இல் இருப்பது நல்ல பலனைத் தரும். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். சயன சுகம் உண்டு. (8,11) உரிய குரு, 6 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. முதலீடுகளால் இலாபம் குறையலாம். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (9,10) உரிய சனி 3 இல் இருப்பது விசேஷம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் புகழ் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ராசியில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உருவாகலாம். இரண்டில் செவ்வாய் சனி இருப்பது கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் 11 இல் இருப்பது விசேஷம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் இரண்டில் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு 5இல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பகை விலகும். பொதுவாழ்வில் புகழ் நிலைக்கும். (8,9) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நலமில்லை. முதலீடுகளால் இலாபம் குறையலாம். ராசியை குரு பார்ப்பது நல்ல அம்சம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கன்னி முதல் விருச்சிகம் வரை சஞ்சரிப்பார். வார ஆரம்பத்தில் நல்ல பலனைக் கொடுப்பார். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். இரண்டுக்குரிய சூரியன் 10 இல் நல்ல பலன் தருவார். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. (3,12) உரிய புதன் 12 இல் நல்ல பலன் தரமாட்டார். உறவினர் மற்றும் அயலவர் விலகி இருக்க விரும்புவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். சயன சுகம் உண்டு. (4,11) உரிய சுக்கிரன் 10 இல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உருவாகலாம். நண்பர்களுக்குள் மனத்தாங்கலுக்கு இடமுண்டு. (5,10) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (7,8) உரிய சனி ராசியில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 10 இல் இருப்பது விசேஷம். இருப்பினும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் குறைய வாய்ப்பு உள்ளது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். (2,11) உரிய புதன் 11 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் கிடைக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (3,10) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது விசேஷம். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொதுவாழ்வில் புகழ் இருக்கும். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,9) உரிய செவ்வாய் 12 இல் நல்ல பலன் தரமாட்டார். பெற்றோருக்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. வீட்டில் பொருட்செலவுக்கு இடமுண்டு. (5,8) உரிய குரு 3 இல் இருப்பது பாதகமானது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,7) உரிய சனி 12 இல் நல்ல பலன் தராது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 10 இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொதுவாழ்வில் பொறுப்புக்கள் அதிகமாகும். (2,9) உரிய சுக்கிரன் 8 இல் நல்ல பலன் தருவார். கையில் பணம் கிடைக்கும். வாகன சுகம் உண்டு. பிதா நலம். (3,8) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது விசேஷம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். முதலீடுகளால் லாபம் இருக்கும். (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது நல்ல பலனைத் தரும். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். (5,6) உரிய சனி 11இல் இருப்பது நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். 12க்குரிய சூரியன் 9 இல் நல்ல பலன் தராது. சயன சுகம் குறையலாம்.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 7 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 10 இல் நல்ல பலனைத் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (3,6) உரிய குரு ராசியில் இருப்பது பாதகமானது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உறவினர் மற்றும் அயலவர்கள் உதவி செய்யமாட்டார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 10 இல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நல்ல பலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (9,12) உரிய புதன் 9 இல் நல்ல பலன் தரமாட்டார். சயன சுகம் இருக்காது. பிதாவுக்கு நலமில்லை. தெய்வீக வழிபாடு அமையும். 10 இல் சனி, செவ்வாய் கூட்டு தொழில்துறையைப் பாதிக்கலாம். பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 9 இல் நல்ல பலனைத் தரமாட்டார். மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் கூடாது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (2,5) உரிய குரு 12 இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (3,4) உரிய சனி, 9 இல் நல்ல பலனைத் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (7,12) உரிய சுக்கிரன் 6 இல் நல்ல பலன் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. சயன சுகம் இருக்காது. (8,11) உரிய புதன் 8 இல் நல்ல பலன் செய்வார். முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. 10க்குரிய சூரியன் 7ல் நல்ல பலன் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொது வாழ்வில் பிரச்சினை உருவாகலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11 இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (2,3) உரிய சனி 8 இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (5,12) உரிய செவ்வாய் 8 இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. சயன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆாவம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,11) உரிய சுக்கிரன் 5 இல் நல்ல பலனைத் தருவார். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். நண்பர்களுக்கும் நல்ல பலன் உண்டு. (7,10) உரிய புதன் 7 இல் நல்ல பலனைத் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். பொதுவாழ்வில் அமைதி இருக்காது.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது நல்ல பலனைத் தராது. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (3,12) உரிய குரு, 10 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. சயன சுகம் இருக்காது. தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். (4,11) உரிய செவ்வாய் 7 இல இருப்பது நல்ல பலனைத் தராது. தாய்க்கு கூடாது. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (5,10) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். பொது வாழ்வில் புகழ் இருக்கும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,9) உரிய புதன் 6 இல் நல்ல பலன் தருவார். பிதா நலம். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். 7இல் சனி, செவ்வாய் சேர்க்கை திருமண வாய்ப்பை பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி,6 இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 9 இல இருப்பது நல்ல பலனைச் செய்யும். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது விசேஷம். தொழில் துறை முன்னேறும். பொது வாழ்வில் புகழ் நிலைக்கும். உறவினர் மற்றும் அயலவர் விசுவாசமாக இருப்பர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,9) உரிய சுக்கிரன் 3 இல் இருப்பது சிறப்பானது. பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,8) உரிய புதன் 5 இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் இலாபம் குறையலாம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. 7க்குரிய சூரியன் 4 இல் நல்ல பலன் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | சுக்கிரன் | சூரியன் | புதன் |
| | | | செவ் சனி |
| | | | |
| | | குரு | கேது |

வைகாசி 22 முதல் 28 வரை

சந்திரன் கன்னி முதல் விருச்சிகம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8 இல் இருப்பது பாதகமானது. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் மதிப்புக்கு பங்கம் உண்டாக வாய்ப்புண்டு. (2,9) உரிய செவ்வாய் 5 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (3,8) உரிய சுக்கிரன் இரண்டில் நல்ல பலன் தருவார். தகவல் தொடர்பு சீராக இருக்கும். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். (4,7) உரிய புதன் 4 இல் நல்ல பலன் தருவார். தாய் நலம். புதிய இருப்பிடம் அமையும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். 6க்குரிய சூரியன் 3 இல் இருப்பது உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். (11,12) உரிய சனி 5 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.

# சிறுவர் பக்கம்

## கனவில் வந்த மகான்



மரகதபுரி நகரை ஒட்டிய கிராமம் அது. ஒருநாள் அந்த கிராமத்திற்கு மகான் ஒருவர் வந்தார். அவர் ஒரு மரத்தடியில் அமர்ந்தபோது கிராமவாசி ஒருவர் அவரை நோக்கி வேகமாக ஓடி வந்தார்.

மகானின் அருகில் பவ்யமாக உட்கார்ந்த கிராமவாசி, ''எங்கே அந்த நவரத்தினம்?'' என்றார்.

மகானுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன நவரத்தினம்?''-மகான் கேட்டார்.

''நேற்றிரவு எனக்கொரு கனவு வந்தது. அதில் ஒரு மகான் தோன்றினார். நாளைக்கு உனக்கொரு வைரம் தருகிறேன் என்று சொன்னார். கனவில் வந்த மகான் நீங்கள்தான். அதனால் எனக்கு நீங்கள் அந்த வைரத்தை கொடுத்து விடுங்கள்'' என்றார்.

''வரும் வழியில் நான் ஒரு கல்லைப் பார்த்தேன். ஒருவேளை நீ சொல்வது அதுவாக இருக்குமோ?'' என்று கேட்ட மகான் தன்னிடமிருந்த பொட்டலத்தை பிரித்து அதில் இருந்த ஒரு கல்லை கிராமவாசியிடம் கொடுத்து, ''வைத்துக் கொள்'' என்றார்.

அந்தக் கல் ஒரு வைரம். கோழி முட்டையை விட பெரிய அளவில் இருந்தது. அந்த வைரத்தை கிராமவாசி பயபக்தியுடன் வாங்கிக் கொண்டார். ''இதுதான் என் அதிர்ஷ்டம்'' என்று கூறிக்கொண்டே திரும்பிப் பார்க்காமல் வேகமாக ஓட்டம் பிடித்தார்.

அந்த மகான் அதன் பிறகு எதைப் பற்றியும் நினைக்காமல் நிம்மதியாக நித்திரையில் ஆழ்ந்தார். மறுநாள் காலை அவர் கண்விழித்தபோது வைரத்துடன் ஓட்டம் பிடித்த கிராமவாசி அவரது காலடியில் உட்கார்ந்திருந்தான்.

''நான் உனக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமா?'' மகான் கேட்டார்.

''ஆமாம்...'' கிராமவாசி தலையை மெதுவாக ஆட்டினார்.

''சரி சொல்...'' என்றார், மகான்.

''எனக்கு பெரிய வைரத்தைக் கொடுத்தீர்கள். ஆனால் அதை பட்டை தீட்டி தராமல் தந்துவிட்டீர்கள். வைரத்தை பட்டை தீட்டினால்தானே அதை விற்க முடியும்? அதனால் பட்டை தீட்டிய வைரமாக்கி கொடுங்கள்'' என்றார், கிராமவாசி.

மகான் இப்போது அவனது சோம்பேறித்தனத்தை அறிந்து மௌனமானார்.



யோ.விந்தியாழினி
தரம் 10ஏ
கிளி/ அக்கராயன் ம.வி, அக்கராயன்குளம்



வா.யோகேஸ்வரி
வேரவில்
பூநகரி



அ.ஜெயரூபன்
13 கலைப்பிரிவு
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



றொ.றொபின்சன்
தரம் 9 ஏ
மு/ பாண்டியன்குளம் ம/வி.

## 'போஸ்ட்' என்ற பெயர் எப்படி வந்தது?



முதன் முதலில் இங்கிலாந்து நாட்டில் தபால்களை குதிரையில் எடுத்துச் சென்றார்கள். அவ்வாறு எடுத்துச் செல்பவர்கள் இடையில் ஓய்வு எடுத்துக்கொண்டு, வேறு குதிரையில் அந்த தபால்களை எடுத்துச் சென்றார்கள். அவ்வாறு ஓய்வு எடுக்கும் இடங்களில் எல்லாம் கம்பங்கள் நடப்பட்டு இருக்கும். கம்பங்களை ஆங்கிலத்தில் 'போஸ்ட்' என்பார்கள்.

அந்தப் பெயரே பிற்காலத்தில் தபால்களுக்கும் 'போஸ்ட்' என்ற பெயராக நிலைத்து விட்டது.

## வட்டத்திற்குள் சிக்கும் வார்த்தைப் புதிர்கள்

இங்கு கலைந்த நிலையில் சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி நேர் எதிரே உள்ள கட்டங்களில் நிரப்பவேண்டும். பின்னர் வட்டத்திற்குள் சிக்கியிருக்கும் எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒழுங்குபடுத்தினால் படிப்பினை தரக்கூடிய ஒரு பழமொழி கிடைக்கும். அது என்ன பழமொழி என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. அ க் கு ர
2. க ம் ன ன்
3. வி லி ஞா ஞ்
4. ர ட் வ டி
5. த ந் சி னை
6. டு சு ட் ரு
7. கு ம் ச ஞ்

## பேனா நண்பர் பகுதி



பெயர்:- [illegible]
முகவரி:- 177, [illegible]
பொழுதுபோக்கு:- பத்திரிகை வாசித்தல், [illegible]
கல்வி கற்கும் ஆண்டு:- தரம் 11
பாடசாலை:- [illegible]
தொடர்பு மொழி:- தமிழ்



பெயர்:- [illegible]
முகவரி:- [illegible]
பொழுதுபோக்கு:- பத்திரிகை வாசித்தல்
கல்வி கற்கும் ஆண்டு:- [illegible]
பாடசாலை:- [illegible]
தொடர்பு மொழி:- தமிழ்



பெயர்:- [illegible]
முகவரி:- [illegible]
பொழுதுபோக்கு:- [illegible]
கல்வி கற்கும் ஆண்டு:- [illegible]
பாடசாலை:- [illegible]
தொடர்பு மொழி:- தமிழ்

### அன்புக்குரிய தம்பி தங்கைகளே!

உங்களுக்குரிய சிறுவர் பக்கத்தில் பேனா நண்பர் பகுதி ஒன்றை ஆரம்பித்து இருக்கிறோம்.

கடவுச்சீட்டு (Passport Size) அளவிலான உங்கள் வர்ணப் புகைப்படத்துடன், உங்கள்

- பெயர் -
- முகவரி -
- பொழுதுபோக்கு -
- கல்வி கற்கும் ஆண்டு -
- பாடசாலை -
- தொடர்பு மொழி -

இவற்றையும் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

வாரவாரம் இவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும். அத்துடன் சிறுவர் பகுதியை அணி செய்ய உங்கள் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
சிறுவர் பக்கம்
சுடர் ஒளி வாரஇதழ்
85 ஜயந்த மல்லிமாரச்சி மாவத்தை
கொழும்பு-14.



இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் இருக்கிறது மோங்ரா கிராமம். மாப்பிள்ளை வீட்டுக்காரர்களின் வருகைக்காகக் காத்திருக்கிறார் ஷப்பிலால். ஆடல், பாடல் கும்மாளத்துடன் இருக்கிறது அவரது வீடு. பெண்கள் டோலக் வாசித்துக் கொண்டிருக்க, அவர்களுக்கு நடுவில் சிவப்பு நிற உடையில் அமர்ந்திருக்கிறாள் மணப்பெண். பெயர் அனுசூயா. வயது13.

ஆனால் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களின் மேளச்சத்தம் கேட்பதற்குப் பதிலாக, வீட்டுக் கதவை தொடர்ச்சியாக யாரோ தட்டுகிறார்கள். கதவைத் திறந்தவுடன் இளம் பெண்களின் குழு ஒன்று அவரைச் சூழ்ந்து கொள்கிறது. திருமணத்தை நிறுத்தும்படி ஷப்பிலாலை கெஞ்சுகிறார்கள் அந்தப் பெண்கள். அவர் மறுக்கிறார்.

பெண்கள் உனடியாக சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டைத் தொடர்பு கொள்ள, அனுசூயாவின் திருமணம் நிறுத்தப்படுகிறது. அந்தப் பெண்கள் மாவட்ட ஆட்சியாளரால் தொடங்கப்பட்ட 'கிஷோரி பாலிகா சமூஹ்' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் அனுசூயாவுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் இந்தியாவின் எல்லாக் கிராமங்களிலும் கிடைப்பதில்லை. குடும்பத்தினர், புரோகிதர்கள், கிராமத் தலைவர்கள் ஆதரவுடன் தொடர்ந்து பால்ய விவாகங்கள் நடந்து வருகின்றன. அனுசூயா காப்பாற்றப்பட்ட அதேநேரத்தில் இந்தியாவின் மற்றொரு மாநிலமான மத்தியப் பிரதேசத்தின் தார் பகுதியிலிருக்கும் குழந்தைகள் காப்பகத்தின் மேற்பார்வையாளரான சகுந்தலா வர்மா என்பவர் கொலை வெறித் தாக்குதலில் இருந்து தப்பிப் பிழைத்திருக்கிறார். அந்த மாநிலத்தின் மேற்குப் பகுதியில் இருக்கும் பங்கத் கிராமத்தில் குழந்தைத் திருமணங்களுக்கு எதிராக பிரசாரம் செய்தபோது உள்ளூர் மக்கள் அவருக்கு எதிராகத் திரண்டனர். சகுந்தலாவின் வீட்டிற்குள் புகுந்த ஓர் இளைஞன் அவரது மணிக்கட்டில் வெட்டினான். "குழந்தைத் திருமணங்களைத் தடுத்ததுதான் நான்தாக்கப்பட்டதற்கு ஒரே காரணம்" என்கிறார் 48 வயது சகுந்தலா வர்மா. 16 மணிநேரம் நடந்த அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு தற்போது அவர் தேறிவருகிறார்.

சகுந்தலா வர்மாவும் கிஷோரி பாலிகா சமூஹ் அமைப்பின் பெண்களும் கிராமப்புற இந்தியாவின் பழக்க வழக்கங்களோடு மட்டுமல்லாமல், பலவீனமான சட்டங்களோடும் போராட வேண்டியிருக்கிறது. ஷாரதா சட்டம் அல்லது குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின்படி திருமணத்தின்போது பெண்களுக்கு 18 வயதும் ஆண்களுக்கு 21 வயதும் ஆகியிருக்க வேண்டும். 2001 ஆம் வருட இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 18 வயதுக்குக் குறைவான 64 லட்சம் பேருக்கு திருமணமாகியிருக்கிறது. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பீஹார் போன்ற மாநிலங்கள்தான் இதில் முன்னணி வகிக்கின்றன. ராஜஸ்தானில் மணப்பெண்ணின் சராசரி வயது 15.8. தற்போதைய சட்டப்படி குழந்தைகளுக்கு திருமணம் செய்வது குற்றம் என்றாலும் திருமணம் நடந்து முடிந்த பிறகு அதற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்து விடுகிறது. இந்திய மத்திய அமைச்சரவை இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர உத்தேசித்திருக்கிறது. இதன் மூலம் திருமணத்தைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்படும். குறைந்த வயதில் செய்யப்படும் திருமணங்கள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்படும்.

குழந்தைத் திருமணங்களுக்கு இப்போது குழந்தைகளிடமிருந்தே எதிர்ப்பு வர ஆரம்பித்திருப்பதுதான் குறிப்பிடத்தக்கது. அனுசூயாவை காப்பாற்றிய இளைஞர்களுக்கு குழந்தைத் திருமணம் பற்றிய சட்ட நுணுக்கங்கள், குழந்தைகளை வளர்ப்பதில் தாய்மையின் பங்கு, பொறுப்பு ஆகியவை பற்றி சொல்லிக் கொடுத்தது கிஷோரி பாலிகா சமூஹ் அமைப்பு தான். ராஜ்நந்காவிலிருக்கும் 1,592 கிராமங்களில் இம்மாதிரி 1, 300 குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்தக் குழுக்களிலிருக்கும் பெண்களுக்கு மாவட்ட ஆட்சியாளருடன் நேரடியான தொடர்பு இருக்கும்.

# பொம்மைக் கல்யாணம்



இம்மாதிரி எதிர்ப்புகள் மெதுவாகவும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிளம்பியிருக்கலாம். ஆனால் சிறுவர்கள் தங்கள் உரிமைக்காகப் போராட ஆரம்பித்திருக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் இருக்கும் கௌடிகஸா கிராமத்தில் ஈஸ்வரி சாஹு என்ற பெண் தன் சகோதரன் ஈஸ்வரின் (12) திருமணத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்.

'மதர்ஸ் கமிட்டி' கூட்டங்களிலிருந்துதான் அவருக்கு இந்த விவரங்கள் தெரியவந்தன.

மத்தியப் பிரதேசத்தில் மதர்ஸ் கமிட்டி மூலமாக 8,900 க்கும் அதிகமான திருமணங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ராஜஸ்தானில் கடந்த மாதத்தில் மட்டும் அகாதீஜ் பகுதியில் 700 திருமணங்களை நிறுத்தியிருக்கிறார்கள் அதிகாரிகள்.

கல்வியறிவும் எதிர்பார்த்த விளைவைத் தந்திருக்கிறது. தேசிய பெண்கள் எழுத்தறிவு விகிதம் 1991 ல் 39 சதவீதமாக இருந்தது. தற்போது 54 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. மும்பையில் குடிசைப் பகுதியைச்சேர்ந்த 10, 11 வயதுச் சிறுவர்கள் 'குழந்தைத் திருமணங்களைத் தடுப்போம்', 'எங்களுக்கும் படிக்க வாய்ப்பளியுங்கள்' என்பது போன்ற வாக்கியங்களைப் பொறித்த டிஷேர்ட்களை அணிந்து கொண்டு ஊர்வலங்களை நடத்தினார்கள்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளை, குறிப்பாக பெண்குழந்தைகளைச் சீக்கிரமே திருமணம் செய்துகொடுக்க நினைப்பதற்கு கல்வியறிவின்மை, பாரம்பரியம், பெண்குழந்தையை சுமையாகப் பார்ப்பது போன்று பலகாரணங்கள் இருக்கின்றன. "வயதுக்கு வந்த பெண் குழந்தைகள் தவறான வழியில் செல்வார்கள் என்று நினைக்கும் பெற்றோர், அவர்களை சீக்கிரமே திருமணம் செய்து கொடுக்க நினைக்கிறார்கள். அவர்கள் எண்ணத்தை மாற்ற முயற்சிக்கிறோம்." என்கிறார் மும்பையைச் சேர்ந்த தன்னார்வ நிறுவனமான த்யானா தேவியின் செயல் இயக்குனர் அனுராதா சஹஸ்ட்ரபுதே.

இப்போது அனுசூயா பள்ளிக்குத் திரும்பி விட்டாள், சகுந்தலா வர்மா தனது பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்திருக்கிறார்.

# கள்வனின்...

(21ஆம் பக்கத்தொடர்ச்சி)

இன்னைக்காவது உன் மனசுல உள்ளதை சொல்லக்கூடாதா...." சின்னசாமி புன்னகையுடன் அவனைப் பார்த்தான்.

"இவ்வளவு நாளும் நான் சொல்லாமத்தான் இருந்தேன். ஆனா இப்போ மனசுல உள்ளதை உன்கிட்ட சொல்லவேண்டிய நேரம் வந்திடுச்சி. மனசுல பூட்டி வைச்சிருந்த அந்த சுகமான ராகங்களை இப்போ உனக்காக மறுபடியும் மீட்டிப்பார்க்கப்போறேன்....."

பெரியசாமி அவன் சொல்லப்போவதை ஆவலுடன் கேட்கத் தயாரானான்.

சின்னசாமி இதுவரைஇல்லாத அளவுக்கு சந்தோஷத்துடன் வேகமாக நடந்தான். இன்று அவனுக்கு நல்ல அறுவடை. பஸ்ஸிலிருந்த வயதானவர் ஒருவரிடமிருந்து அந்த மஞ்சள் துணிப்பையை மிக லாவகமாக கையகப் படுத்தினான். அதில் நாற்பதாயிரம் ரூபாய்கள் இருந்தன. அவனுக்கு கையும் ஓடவில்லை- காலும் ஓடவில்லை. அந்தப் பணம் ஒரு வாரத்துக்குப் போதும்.

அடுத்தநாள் ஒருவரைப் பார்ப்பதற்காக கொழும்புக்கு ஒதுக்குப்புறமான அந்த இடத்துக்குப் போனான். அவன் பார்க்கப் போனவனின் பக்கத்து வீட்டில் யாரோ இறந்துவிட்டிருந்தார்கள். ஒரே கூட்டமும் அழுகைச் சத்தமுமாக இருந்தது.

"அடவாப்பா சின்னசாமி.... இப்பதான் வழி தெரிஞ்சதா..... நீ வந்த நேரம் பார்த்து பக்கத்து வீட்டுப் பெரியவர் இறந்துவிட்டார். ரொம்ப நல்லவர். ஏற்கனவே மூத்த மகன் யூனிவர் சிட்டிக்கு படிக்கப்போய் யாரோ பணக்காரப் பெண்ணோட சிநேகமாகி இவங்களைத் தவிக்க வைச்சிட்டு எங்கேயோ பறந்திட்டான். கல்யாண வயசுல இரண்டு மகள்மார். ஒண்ணு தனியார் நிறுவனத்தில வேலை செய்யுது. இளையதுக்குத்தான் கல்யாணமெல்லாம் பேசி நகை, நட்டு, துணிமணி வாங்க பணம் எடுத்துவர பாங்குக்குப் போனாரு. பணம் பறிபோன கவலையில வீட்டுக்கு வந்தாரு. நெஞ்சு வலிக்குதென்னாரு, அவ்வளவுதான் உயிர் போயிடிச்சி. பாவம் மூத்தவள் தாரணியோட தலையில சுமையை வச்சிட்டுப் போயிட்டாரு......"

அவர் சொல்லிக்கொண்டேபோக சின்னசாமிக்கு முதல்முறையாக நெஞ்சு வலித்தது. அவனால் நாற்பதாயிரத்தைப் பறிகொடுத்தவன் பக்கத்தில் சவமாகி கிடக்கிறார் என்பதை ஊகிக்க அவனுக்கு அதிகம் நேரம் செல்லவில்லை. அவன் அந்த வீட்டுக்குப்போனான். அவர்களின் வேதனை மிகுந்த அலறலை அவனால் தாங்க முடியவில்லை. இரண்டு நாட்கள் சென்றன. அவன் முடிவு செய்துவிட்டான். அவன் செய்த பாவத்துக்கு அவனே தகுந்த பரிகாரத்தை செய்துவிடவேண்டுமென உறுதி செய்து கொண்டான். ஒரு வாரம் கழித்து அவர்கள் வீட்டுக்குப் போனான். அவர்களின் அண்ணன் அருணாசலத்தின் நண்பன் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான். அவர்கள் அவனை சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். அவன் வியாபாரமொன்று செய்வதாகவும் அருணாசலம் தனக்குப் பலவகையில் உதவியதாகவும் பொய்யான தகவல்களை கூறினான். அவன் அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு சென்றான். அவர்களுக்குத் தேவையான சின்னச்சின்ன உதவிகளைச் செய்தான். அவர்கள் அவனை தங்களின் குடும்பத்திலொருவனாக நினைக்கத் தொடங்கினார்கள். தாரிணி அவனை விசேடமாகக்கவனித்தாள். தாரணி மிக அழகாக இருந்தாள். பட்டாம் பூச்சியாய் படபடக்கும் கண்களும், கருநாகம் போல நீண்டு தொங்கும் கூந்தலும், அன்னம்போன்ற அழகான நடையும், எளிமையான உடையும் அவளை தேவலோக ரம்பையாக காட்டின.

சின்னசாமி தாரணிமேல் காதல் கொண்டான். அவளை மனமார நேசித்தான். அவளுக்காக எதையும் செய்ய நினைத்தான். ஆனால் அவள் அவனைப்பற்றி என்ன நினைக்கிறாளென்று அவனால் ஊகம் செய்ய முடியவில்லை. முதலில் இளையவள் கோகிலாவின் நின்றுபோன திருமணத்தை நடத்த வேண்டும். பின்பு வங்கியிலிருக்கும் வீட்டை மீட்க வேண்டும். இதெற்கெல்லாம் கணிசமான பணம் வேண்டும். சின்னச் சின்ன திருட்டுகளை செய்து பிரயோசனப்படாது. பெரிதாக எதையாவது செய்ய வேண்டும். ஆனாலும் இவ்வளவு நாளும் ஆடம்பரமாக செலவுசெய்துவந்த அவன் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்கினான். இலக்கில்லாமல் சுற்றித் திரிந்தவன் இப்போது இலட்சியத்துக்காக வாழத் தொடங்கி விட்டான். கடந்த இரண்டு வருடங்களாக அவன் மற்றவர்களுக்காக வாழ்ந்து வருகிறான். கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கும் என்பது அவனைப் பொறுத்தவரை உண்மையாகி விட்டது.

சின்னசாமியின் கதை பெரியசாமியை வேதனைக்குள்ளாக்கியபோதும் அவன் எப்படித் தன் இலட்சியத்தை நிறைவேற்றப் போகிறானென்றுதான் விளங்கவில்லை. ஏனென்றால் அதற்கு அதிக தொகை வேண்டும். சின்னசாமி என்ன செய்யப் போகிறான்...?

ஒருவாரம் சென்றது. கொழும்பில் ஒரு பரபரப்பான இடம். மிகவும் பிரபல்யமான அந்த நகை மாளிகையின் மொட்டைமாடியில் பெரியசாமி நின்றிருந்தான். அது ஐந்து மாடிக் கட்டடம். காலை பத்துமணியிருக்கும். நகைக்கடைக்கு கீழே ஏராளமானோர் குழுமியபடி அண்ணாந்து பெரியசாமியை பார்த்தவாறு நின்றிருந்தார்கள். பெரியசாமி மொட்டைமாடியிலிருந்து வேகமாகக் கத்தினான்.

"என்னோட காதலி இந்தக் கூட்டத்தில்தான் இருக்கிறாள். இவ்வளவு நாளும் என்னை மனமார நேசித்தவள் இப்போ கொஞ்ச நாளா பாரா முகமா இருக்கா. அவள் என்னை நேசிப்பதாக உங்கள் முன்னிலையில் சத்தமிட்டு சொல்லவேண்டும். அப்போதுதான் என் தற்கொலை முயற்சியை நான் கைவிடுவேன். என்னை யாராவது காப்பாற்ற முயற்சி செய்தால் உடனே கீழே குதித்துவிடுவேன். பத்து நிமிடம் தான் கால அவகாசம்....."

கீழே கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கூட்டம் அதிகமாகவே பொலீஸ் அதிகாரிகளும் வந்து சேர்ந்தார்கள். அப்போது கூட்டத்திலிருந்து அந்த அழகிய பெண் முன்னே வந்தாள்.

"பெரியசாமி.... கீழே இறங்கிவந்து விடுங்கள். வீட்டில் என்னை கண்டித்தார்கள். அதுதான் உங்களை கைவிட நினைத்தேன். ஆனால் காதலுக்காக நீங்கள் உயிரையே விடத் துணிந்தபின் இனியும் என்னால் பொறுக்க முடியாது. எனக்கு நீங்கள்தான் வேண்டும். உங்கள் அன்புதான் வேண்டும். நான் உங்களை மனமார நேசிக்கிறேன். தயவுசெய்து கீழே இறங்கி வாருங்கள்."

பெரியசாமி மகிழ்ச்சியுடன் கீழே இறங்கிவர அந்த தற்கொலை முயற்சி முடிவுக்கு வந்தது. பொலிஸார் அவன்மேல் நடவடிக்கை எடுக்காமல் எச்சரித்து அனுப்பினார்கள். கூட்டம் கலைந்து சுமார் பதினைந்து நிமிடங்களின்பின் அந்த நகை மாளிகையினுள் பரபரப்பு ஏற்பட்டது. இந்த தற்கொலை நாடகத்தை பரபரப்பாக நகையகப் பணியாளர்கள் வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் பல இலட்சக்கணக்கான நகைகள் மாயமாக மறைந்திருந்தன.

சின்னசாமியும், பெரியசாமியும் அந்த ஒதுக்குப்புறமான ஹோட்டலில் சந்தித்தார்கள். "பெரியசாமி ரொம்ப அபாரமா நடிச்சே. இந்த நகைகளோட பெறுமதி கிட்டத்தட்ட ஐந்து லட்சத்துக்கு மேல இருக்கும். தாரணியோட வீட்டை மீட்கிறதுக்கு ரெண்டு லட்சம், நின்னுப்போன தாரணியோட சகோதரியோட கல்யாணத்துக்கு ஒரு லட்சம், நான் தாரணியை கல்யாணம் செஞ்சுக்க கொஞ்சப் பணம், இந்தத் தொழிலை விட்டுட்டு நேர்மையா வியாபாரம் செஞ்சி பிழைக்க கொஞ்சப் பணம் ஆக நாலு லட்சம் பணம் எனக்குப் போதும். மிச்சத்தை நீயே எடுத்துக்க. நீயும் இந்தத் தொழிலை விட்டுடு. உன்னோட நடிச்ச அந்தப் பெண்ணுக்கும் தேவையான பணத்தை குடுத்துடு..... என்ன நான் சொல்றது சரிதானா?"

பெரியசாமி கண்ணீருடன் அவனைப் பார்த்தான். "எனக்குப் பணம் இல்லாட்டியும் பறவாயில்லை. நீ நல்லா இருக்கணும். என்னோட குடும்பமே இன்னைக்கு நல்லா இருக்குன்னா அதுக்கு நீதானே காரணம்....." சின்னசாமியும் பெரியசாமியும் தங்களின் அறையை நோக்கி நடந்தார்கள்.

ஒருவாரம் ஓடியது. சின்னசாமி, தான் வங்கியில் கடன் எடுத்ததாகவும் அதில் வீட்டை மீட்டது போக மிகுதியை தாரணியின் சகோதரியின் திருமணத்துக்குப் பயன்படுத்தலாமெனவும் அவளிடம் கூறினான். அவள் தயங்கினாள்.

"ஐயோ எங்களுக்காக நீங்க இவ்வளவு பெரிய தொகையை உதவியாதாறேன்னுறீங்களே ..... எப்படி கைநீட்டி வாங்குறது....."

"இதை ஏன் நீங்க உதவியா நினைக்கணும். நானொரு ஆபத்துல மாட்டிக்கிட்டபோ அருணாசலம் இதைவிட பெரிய தொகை குடுத்து உதவினான். அதை நான் உங்களுக்குத் திரும்பத் தாறதா நினைச்சிக்கங்களே......"

"இருந்தாலும்......"

"யோசிக்காதீங்க வாங்கிக்கங்க....."

"எங்க அண்ணன் இருந்திருந்தாக்கூட இப்படியெல்லாம் செஞ்சிருக்க மாட்டான். அப்பா பேங்லபோய் பணம் எடுத்துக்கிட்டிருந்ததை கவனிச்சிக்கிட்டிருந்த எவனோ ஒரு பாவி அதைப் பறிச்சிட்டு ஓடினான். அந்தக் கவலையில் அவர் போயிட்டாரு. அநாதைகளா நின்ன எங்களுக்கு நீங்கள்தான் ஆதராவா வந்து நின்னிங்க......"

சின்னசாமி பதற்றத்துடன் அவளைப் பார்த்தான்.

"உங்கப்பா பேங்ல வச்சாபணத்தை பறிகொடுத்தாரு. எவ்வளவு தொகை...?..."

"ஏன் அப்புடி கேக்கிறீங்க. அதுல எழுபதாயிரம்இருந்திச்சி. நான்தான் பணம் எடுக்கிறதுக்கான வவுச்சரை எழுதிக் குடுத்தேன்....."

சின்னசாமிக்கு தலை சுற்றியது. அவன் பணத்தைத் திருடியது பஸ்ஸில் அதுவும் நாற்பதாயிரம் ரூபாய். அவசரத்தில் பணம் பறிகொடுத்தவரின் முகத்தையும் அவன் பார்க்கவில்லை. யாரோ பணத்தை பறிகொடுக்க யாருக்கோ இவ்வளவு நாளும் தவறுக்கு பரிகாரம் செய்து கொண்டிருக்கிறான்.

"சின்னசாமி ....நீங்க எனக்கு இன்னொரு உதவியும் செய்யணும்....."

"சொல்லுங்க தாரிணி...."

"என்னோட வேலை செய்யிறாரு அருண் பிரசாத். ரொம்ப நல்லவரு. ரெண்டு பேரும் ஒருத்தரோட ஒருத்தர் ஆழமா நேசிக்கிறோம். நின்னுப்போன தங்கச்சியோட கல்யாணம் முடிஞ்சதும் தான் இதைப்பத்தி உங்ககிட்ட பேச நினைச்சேன். இப்போதான் எல்லாம் நல்லபடியா முடிந்திருச்சே. அண்ணன் ஸ்தானத்துல நீங்கதான் நின்னு அம்மாகிட்ட பேசி இந்தக் கல்யாணத்தை நடத்திவைக்கணும். செய்வீங்களா.......?"

சின்னசாமிக்கு இது இரண்டாவது இடி. கானலைகாதலென நினைத்து ஏமாந்து விட்டான். அவன் நினைத்தது எதுவுமே நடக்கவில்லை. யாரோ யாராலேயோ பாதிக்கப்பட இவன் பிராயசித்தம் செய்தான். இவன் ஒருத்தியை நேசிக்க அவளோ வேறொருவனை நேசிப்பதுமல்லாமல் அவனை மணக்க இவனிடமே உதவி கேட்கிறாள். இனி என்ன செய்வது. பாதிக் கடலை தாண்டிவிட்டான். மீதியையும் தாண்டுவதுதானே அவனுக்கும் நல்லது.

இரண்டு நாட்களில் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டான். தாரணியின் வீட்டை மீட்டுக் கொடுத்தான். அவள் தங்கையின் திருமணத்துக்கு நாள் குறித்த அதே நாளில் தாரணிக்கும் அருண் பிரசாத்துக்கும் நிச்சயம் செய்து வைத்தான். எல்லாம் முடிந்து தன் அறைக்குத் திரும்பியபோது அவனுக்காக பொலிஸ் காத்திருந்தது. அவன் செய்த குற்றங்களையெல்லாம் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார்கள். அவன் பெரியசாமியை காட்டிக்கொடுக்க விரும்பவில்லை. பெரியசாமிக்கு இன்னும் கடமைகள் இருக்கின்றன. அவனிடமுள்ள கணிசமான பணத்தைக்கொண்டு நேர்மையான வழியில் தொழில் செய்து பிழைத்துக்கொள்வான். எனவே அனைத்துக்குற்றங்களுக்கும் தானே முழுப் பொறுப்பு என வாக்குமூலம் கொடுத்து சிறைப்பறவையானான். சிலர் கெட்டவர்களாக உருவாகிறார்கள். ஆனால் நல்லவர்களாக மடிகிறார்கள்.

(யாவும் கற்பனை)

# மூவினக் கலைஞர்களையும் ஒன்று கூட்டிய 'கலாபூஷண விருது' வழங்கும் நிகழ்வு

கங்கைவேந்தன்





இன்று நேற்றல்ல கலைத்துறையில் மூவினங்களையும் சேர்ந்த கலைஞர்கள் நெடுங் காலமாக தமது கலைப் பணியை திறம்பட ஆற்றி வருகின்றனர் என்பதில் ஐயமில்லை. கலை என்பது எமது வாழ்வில் பிரிக்க முடியாத ஒன்றாகத் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு தான் இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடாவருடம் கலைத் துறையில் தேசியப் பணியின் பொருட்டு சிறப் புப் பணியாற்றிய மூத்த கலைஞர்களைக் கௌர வித்து அவர்களுக்கு 'கலாபூஷண விருது' வழங்கி வருகின்றது.

இந்த ஆண்டுக்கான 'கலாபூஷண விருது' வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்ட பத்தில் நடைபெற்றது.

இம்முறை மூவினங்களையும் சேர்ந்த சுமார் 125 கலைஞர்கள் 'கலாபூஷண விருதினைப் பெற்றுக்கொண்டனர்.

இதனைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் கலைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது.

கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

கர்நாடக சங்கீதம், நாடகம், சிற்பம், சித்திரம், நாதஸ்வரம், நாட்டுக்கூத்து, இலக்கியம், சாகசச்செயல்கள், ஒப்பனை ஓவியம், வில்லுப்பாட்டு, மிருதங்கம், கவிதை ஆக்கம், மேடை நாடகம், நுண்கலை, பாட்டு, புராண நாடகம், சமூக நாடகம், இலக்கியம், ஆய்வுத்துறை, பத்திரிகை, கர்நாடக இசை, அண்ணாவி மரபு, ஊடகத்துறை, கர்நாடக சங்கீதம், சிறுகதை, நாவல் போன்ற துறைகளைச் சார்ந்த கலைஞர்களுக்கே 'கலாபூஷண விருது' வழங்கப்பட்டது.

மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா, ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோர் மூவினங்களையும் சேர்ந்த கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர்.

பல கலைஞர்கள் நோய் வாய்ப்பட்ட நிலையிலும் கூட ஆர்வமிகுதியால் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை பலரையும் ஆச்சரியத்துக்குட்படுத்தியது.



ஊடகத்துறை அமைச்சர் ... யாப்பாவிடம் இருந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். தி... விருதினைப் பெறுகிறார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மூவினங்களையும் சார்ந்த கலைஞர்கள் இணைந்து விசேட இசை நிகழ் வொன்றை நிகழ்த்தினர். அத்துடன் தமிழர்களின் பாரம்பரியத்தைக் குறிக்கும் நடன நிகழ்வு, முஸ்லிம்களின் கலாசாரத்தைக் குறிக்கும் சீனடி சிலம்படி நிகழ்வு மற்றும் சிங்கள கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கண்டிய நடனம் ஆகிய நிகழ்வுகள் பார்வையாளர்களைப் பரவசப் படுத்தின. இந்நிகழ்வில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட வடக்கு -கிழக்குப் பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை கலைத்துறையில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை எமக்கு உணர்த்திநிற்கின்றது.




பாதங்கள் ஆரோக்கியமாக இருந்தால், உங்கள் முழு உடலும் ஆரோக்கியமாக இருக்கும்

ரூபா. 1,300/=

சகல நோய்களுக்கும் விசேடமாக நீரிழிவு நோய்களையும், பாதங்களில் உள்ள சகல நரம்புகளையும் இயங்க வைக்கும். இது ஆயுர்வேத மரமொன்றினால் செய்யப்பட்டது. தொடர்ச்சியாக பாவிப்பின் உடம்பின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய்களின்றி வாழ உதவியளிக்கும்.



FOOT ROLLER



தினமும் 5-10 நிமிடங்கள் வரை உங்கள் பாதங்களை 'மசாஜ்' செய்யுங்கள்.

மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு!

ALTERNATIVE MEDICAL CENTRE
Ground Floor,
G 12 Lucky Plaza,
St.Anthony's Mawatha, Colombo 03.
Tel: 2370496, 0777 310188

HOTEL WESTEERN PVT LTD



உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax. +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com

EXPOAIR — your friend in the skies...

எக்ஸ்போ ஏயார் — வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள வாண்டமார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, ஜூன் 4 ஆம் திகதி வெளியிடப்பட்டது.